2025

# வரவுசெலவுத்திட்ட, பொருளாதார மற்றும் நிதி நிலை அறிக்கை

**2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 49 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டது**

**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, இலங்கை**

**2025 பெப்ருவரி 17**

# வரவுசெலவுத்திட்ட, பொருளாதார மற்றும் நிதி நிலை அறிக்கை - 2025

அனுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,
இலங்கை

2025 பெப்ரவரி 17

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் வெளியிடப்பட்டது.

ISBN 978-624-5674-24-4

இல. 118, கலாநிதி டாக்டர் டானிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு 08 இல் அமைந்துள்ள அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு, இலங்கை, கொழும்பு 01, செயலகத்தில் அமைந்துள்ள நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்டது.

## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முக்கிய பொருளாதாரக் குறிகாட்டிகள் | vii |
| 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் அறிக்கையிடல் தேவைப்பாடுகள் | viii |
| இணக்கம் – 2024/ 2025 | x |
| **பகுதி I** | |
| **01. நடுத்தர கால அரசிறை மூலோபாயம்** | |
| 1.1 மேன்நோக்கு | 5 |
| 1.2 நடுத்தரகால அரசிறை மூலோபாயம் | 9 |
| 1.3 அரசிறைப் பாதை | 10 |
| 1.4 நடுத்தரகால அரசிறைக் கட்டமைப்பு | 11 |
| **பகுதி II** | |
| **02. அரசிறை அபிவிருத்திகள், திறைசேரி தொழிற்பாடுகள் மற்றும் வெளிநாட்டு நிதியிடல்** | |
| 2.1 மேன்நோக்கு | 19 |
| 2.2 அரச வருமானம் | 22 |
| 2.3 அரசாங்க செலவினம் | 36 |
| 2.4 திறைசேரி செயற்பாடுகள் | 39 |
| 2.5 வெளிநாட்டு நிதியுதவி | 40 |
| **03. பொருளாதார முன்னோக்குகள்** | |
| 3.1 மேன்நோக்கு | 47 |
| 3.2 பொருளாதார வளர்ச்சி | 48 |
| 3.3 நாணயத் துறை அபிவிருத்திகள் | 56 |
| 3.4 பங்குச் சந்தை | 58 |
| 3.5 வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள் | 59 |
| 3.6 உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் | 63 |
| **04. அரசுடமைத் தொழில் முயற்சிகளின் செயலாற்றுகை** | |
| 4.1 மேன்நோக்கு | 67 |
| 4.2 பிரதான பத்து அரசுடமை வணிகத் தொழில் முயற்சிகள் பற்றிய மீளாய்வு | 67 |
| **05. 2025 வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்க பயன்படுத்தப்பட்ட அடிப்படை** | |
| **பகுதி III** | |
| **06. வரிச்செலவினங்கள் பற்றிய கூற்று 2023/ 2024** | |

## அட்டவணைகள்


| | பக்கம் |
|---|---|
| **பகுதி I** | |
| அட்டவணை 1.1 நடுத்தர கால பேரின அரசிறை கட்டமைப்பு - 2024 - 2029 | 12 |
| **பகுதி II** | |
| அட்டவணை 2.1 அரசிறைத் தொழிற்பாடுகளின் சுருக்கம் | 19 |
| அட்டவணை 2.2 2024 முதல் பத்து மாதங்களுக்கான வருடாந்த மதிப்பீட்டிற்கெதிரான உண்மையான வருமானங்கள் மற்றும் செலவினங்கள் | 21 |
| அட்டவணை 2.3 அரசாங்க வருமான செயலாற்றுகையின் சுருக்கம் | 23 |
| அட்டவணை 2.4 வருமான வரியின் செயலாற்றுகை | 24 |
| அட்டவணை 2.5 பெறுமதிசேர் வரியின் செயலாற்றகை | 24 |
| அட்டவணை 2.6 உற்பத்தி வரியின் செயலாற்றுகை | 25 |
| அட்டவணை 2.7 மோட்டார் வாகன இறக்குமதி மற்றும் புதிய வாகனப் பதிவு | 26 |
| அட்டவணை 2.8 சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் இறக்குமதி/ ஏற்றுமதிப் உற்பத்திப் பொருட்கள் மற்றும் பெறுமதி | 27 |
| அட்டவணை 2.9 சர்வதேச வர்த்தகத்திலிருந்தான செஸ் வரி வருமானம் | 27 |
| அட்டவணை 2.10 அரசாங்க வருமானத்தின் மாறுபாட்டிற்கான பகுப்பாய்வு | 28 |
| அட்டவணை 2.11 அரசாங்க செலவின செயலாற்றுகை | 36 |
| அட்டவணை 2.12 அரசாங்க பிணையங்கள் மற்றும் நாணய விகிதங்கள் மீதான விளைவு வீதங்களின் போக்கு 2023 - 2024 | 36 |
| அட்டவணை 2.13 நலன்புரிச் செலவினம் | 37 |
| அட்டவணை 2.14 அரசாங்க திறைசேரி காசுப்பாய்ச்சல் தொழிற்பாடுகள் மீதான கூற்று | 39 |
| அட்டவணை 2.15 2024 சனவரி - ஒக்தோபர் வரையான மொத்த உள்நாட்டுக் கடன்கள் | 39 |
| அட்டவணை 2.16 விதிமுறைகளுடன் வெளிநாட்டு நிதியுதவி கடப்பாடுகள் - 2023 சனவரி 1 முதல் ஒக்தோபர் 31 வரை | 41 |
| அட்டவணை 2.17 2024 சனவரி முதல் ஒக்தோபர் 31 வரை வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் மானியங்கள் வழங்கல்கள் | 42 |
| அட்டவணை 3.1 மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான வகுதிகள் (2015 நிலையான விலைகள்) | 49 |
| அட்டவணை 3.2 சேவைத் துறையில் தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள் | 54 |
| அட்டவணை 3.3 சுற்றுலாத் துறையின் செயலாற்றுகை | 55 |
| அட்டவணை3.4 மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான பகிர்வு (%) | 56 |
| அட்டவணை 3.5 நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை : 2021 = 100) | 58 |
| அட்டவணை 3.6 மூலதனச் சந்தை அசைவுகள் | 59 |
| அட்டவணை 3.7 வெளிநாட்டு வர்த்தகம் | 62 |
| அட்டவணை 3.8 உலக பொருளாதாரத்தின் பிரதான குறிகாட்டிகள் - 2024 (கணிப்பு) | 64 |
| அட்டவணை 4.1 மின் உற்பத்தி மற்றும் கொள்ளளவு என்பவற்றின் கூட்டமைவு | 69 |
| அட்டவணை 4.2 பிரதான 52 அரசுடமைத் தொழில்முயற்சிகளின் வரிக்கு முன்னரான இலாபம் | 72 |
| அட்டவணை 4.3 அரசுடமைத் தொழில்முயற்சிகளிலிருந்தான அறவீடு/ பங்கிலாபம் | 73 |
| **பகுதி III** | |
| அட்டவணை 6.1 வரிச் செலவின வகைப்பாடு | 89 |
| அட்டவணை 6.2 வரி வகை ரீதியாக வரிச் செலவினம் | 89 |
| அட்டவணை 6.3 முன்மொழியப்பட்ட தனிநபர் வருமான வரி அட்டவணை | 91 |
| அட்டவணை 6.4 தனிநபர் வருமான வரிச் செலவினம் | 91 |
| அட்டவணை 6.5 2023/24 ஆம் ஆண்டிற்கான நிறுவன வருமான வரிச் செலவினம் | 91 |
| அட்டவணை 6.6 2024 ஆம் ஆண்டிற்கான துறை ரீதியாக பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் செலவின மதிப்பீடுகள் | 92 |
| அட்டவணை 6.7 2024 ஆம் ஆண்டிற்கான சுங்க வரிகள் மீதான துறை ரீதியான வரிச் செலவீனம் | 92 |

பக்கம்

அட்டவணை 6.8 2024.12.31 அன்றுள்ளவாறு மோட்டார் வாகன விலக்குகள் மீதான சொகுசு வரியின் சுருக்கம் 92

அட்டவணை 6.9 தனிநபர் வருமான வரிச் செலவு - 2023/24 93

அட்டவணை 6.10 நிறுவன வருமான வரிச் செலவு - 2023/24 93

அட்டவணை 6.11 முதலீட்டுச் சபை நிறுவனங்களுக்கான துறை ரீதியான பெறுமதிசேர் வரிச் செலவீனம் - 2024 94


**வரைபுகள்**


பக்கம்

**பகுதி I**

வரைபு 1.1 முக்கிய அரசிறைத் திரட்டுக்கள் 2022-2024 6

**பகுதி II**

வரைபு 2.1 மொத்த வருமானத்தின் வகுதிகள் (2024 சனவரி - ஒக்தோபர்) 22

வரைபு 2.2 மூலங்கள் அடிப்படையில் வரி வருமானம் (%) (2024 சனவரி - ஒக்தோபர்) 23

வரைபு 2.3 உற்பத்தி வரியின் செயலாற்றுகை (2024 சனவரி - ஒக்தோபர்) 25

வரைபு 2.4 மொத்த உள்நாட்டுப் படுகடன்கள் (2024 சனவரி - ஒக்தோபர்) 40

வரைபு 2.5 அபிவிருத்தி பங்காளிகள்/ கடன் வழங்கும் நிறுவனங்களின்படி 2024 ஜனவரி 1 முதல் ஒக்டோபர் 31 வரையிலான வழங்கல்கள் (ஐஅடொ மில்லியன்) 43

வரைபு 2.6 பிரதான பொருளாதார துறைகளினால் 2024 ஜனவரி 1 முதல் ஒக்டோபர் 31 வரை பயன்படுத்தப்பட்ட வழங்கல்கள் (ஐஅடொ மில்லியன்) 43

வரைபு 3.1 மொ.உ.உ. வளர்ச்சி 47

வரைபு 3.2 மொ.உ.உற்பத்தி வகுதி - 2024 இன் முதல் ஒன்பது மாதங்கள் 47

வரைபு 3.3 விவசாயத்துறை வகுதி - 2024 இன் முதல் ஒன்பது மாதங்கள் 51

வரைபு 3.4 கைத்தொழில் துறை வகுதி - 2024 இன் முதல் ஒன்பது மாதங்கள் 52

வரைபு 3.5 தயாரிப்புத் துறை வகுதி - 2024 இன் முதல் ஒன்பது மாதங்கள் 52

வரைபு 3.6 சேவைத் துறை வகுதி - 2024 இன் முதல் ஒன்பது மாதங்கள் 53

வரைபு 3.7 தொழிலாளர் பங்கேற்பு விகிதம் மற்றும் வேலையின்மை விகிதம் 55

வரைபு 3.8 விளைவு வீதங்கள், நாணய சராசரி, தனியார்த்துறை கடன் வளர்ச்சி 57

வரைபு 3.9 தலைக்குரிய பணவீக்கம், மைய பணவீக்கம், உணவுப் பணவீக்க அசைவுகள் (அடிப்படை 2023 = 100) 58

வரைபு 3.10 வர்த்தக மீதி, நாணய மாற்று வீத அசைவு 60

வரைபு 3.11 ஏற்றுமதிகளின் வகுதி 60

வரைபு 3.12 இறக்குமதிகளின் வகுதி 61

**பகுதி III**

வரைபு 6.1 2023/ 2024ஆம் ஆண்டிற்கான வரிச் செலவினச் சுருக்கம் (ரூபா மில்லியன்) 92


**கட்டங்கள்**


கட்டம் 2.1 முக்கிய அரசிறை நடவடிக்கைகள்: 2024 சனவரி - 2025 சனவரி 30


**இணைப்புகள்**


இணைப்பு I 2024.12. 31 வரையில் பொது திறைசேரியினால் வழங்கப்பட்ட திறைசேரி உத்தரவாதங்கள் மற்றும் உத்தரவாத கடிதங்கள் பற்றிய நிலுவை விபரப்பட்டியல் 95

இணைப்பு II நுண் பொருளாதார குறிகாட்டிகள் 97

இணைப்பு III வருமான மதிப்பீடுகளுக்கான அனுமானங்கள் - 2025 105

## முக்கிய பொருளாதாரக் குறிகாட்டிகள்

| குறிகாட்டி | காலம் | அலகு | பெறுமதி | |
|---|---|---|---|---|
| | | | 2023 | 2024 |
| **மெய்த் துறை** | | | | |
| பொருளாதார வளர்ச்சி | முதல் 3 காலாண்டுகள் | % | -4.5 | 5.2 |
| விவசாயம் | முதல் 3 காலாண்டுகள் | % | 3.3 | 1.9 |
| கைத்தொழில் | முதல் 3 காலாண்டுகள் | % | -13.3 | 11.2 |
| சேவைகள் | முதல் 3 காலாண்டுகள் | % | -1.3 | 2.6 |
| பணவீக்கம் (புள்ளிக்குப் புள்ளி) - CCPI (2021 = 100) | திசெ இறுதி | % | 4.0 | -1.7 |
| பணவீக்கம் (சராசரி) - CCPI (2021 = 100) | திசெ இறுதி | % | 17.4 | 1.2 |
| வேலையின்மை வீதம் | இரண்டாம் காலாண்டு | % | 5.2 | 4.7 |
| தொழிற்படைப் பங்கேற்பு வீதம் | இரண்டாம் காலாண்டு | % | 48.6 | 47.8 |
| **அரசிறைத் துறை** | | | | |
| வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை | சன - ஒக் | ரூபா. பில். | 1,547 | 1,061 |
| மொத்த வருமானம் | சன - ஒக் | ரூபா. பில். | 2,425 | 3,256 |
| வரி வருமானம் | சன - ஒக் | ரூபா. பில். | 2,213 | 3,000 |
| வரியல்லாத வருமானம் | சன - ஒக் | ரூபா. பில். | 212 | 255 |
| மொத்த செலவினம் | சன - ஒக் | ரூபா. பில். | 3,981 | 4,328 |
| மீண்டெழும் செலவினம் | சன - ஒக் | ரூபா. பில். | 3,532 | 3,796 |
| அரசாங்க முதலீடு | சன - ஒக் | ரூபா. பில். | 489 | 554 |
| அரசாங்க படுகடன் | செப் இறுதி | ரூபா. பில். | 28,020 | 28,575 |
| **வெளிநாட்டுத் துறை** | | | | |
| ஏற்றுமதிகள் | சன - திசெ | ஐ.அ.டொ.மில் | 11,911 | 12,772 |
| விவசாய ஏற்றுமதிகள் | சன - திசெ | ஐ.அ.டொ.மில் | 2,567 | 2,775 |
| கைத்தொழில் ஏற்றுமதிகள் | சன - திசெ | ஐ.அ.டொ.மில் | 9,278 | 9,947 |
| புடவை மற்றும் ஆடைகள் | சன - திசெ | ஐ.அ.டொ.மில் | 4,879 | 5,061 |
| ஏனையவை | சன - திசெ | ஐ.அ.டொ.மில் | 4,399 | 4,886 |
| இறக்குமதிகள் | சன - திசெ | ஐ.அ.டொ.மில் | 16,811 | 18,841 |
| நுகர்வுப் பொருட்கள் | சன - திசெ | ஐ.அ.டொ.மில் | 3,044 | 3,466 |
| இடைநிலைப் பொருட்கள் | சன - திசெ | ஐ.அ.டொ.மில் | 11,007 | 11,915 |
| அதில் பெற்றோலிய உற்பத்திகள் | சன - திசெ | ஐ.அ.டொ.மில் | 4,703 | 4,354 |
| முதலீட்டுப் பொருட்கள் | சன - திசெ | ஐ.அ.டொ.மில் | 2,745 | 3,448 |
| வர்த்தக மீதி | சன - திசெ | ஐ.அ.டொ.மில் | -4,900 | -6,069 |
| சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை | சன - திசெ | எண். | 1,487,303 | 2,053,465 |
| சுற்றுலாத்துறை சம்பாத்தியங்கள் | சன - திசெ | ஐ.அ.டொ.மில் | 2,068 | 3,169 |
| தொழிலாளர்களின் பணவனுப்பல்கள் | சன - திசெ | ஐ.அ.டொ.மில் | 5,970 | 6,575 |
| முதலீட்டுப் பங்குகள் (தேறிய) | திசெ இறுதி | ஐ.அ.டொ.மில் | -866 | த.இ. |
| மொத்த சென்மதி நிலுவை | சன - திசெ | ஐ.அ.டொ.மில் | 2,826 | 2,890 |
| மொத்த அலுவல்சார் ஒதுக்கங்கள் | நவ இறுதி | ஐ.அ.டொ.மில் | 3,571 | 6,451 |
| நாணயமாற்று விகிதம் (இறுதி மாதம்) | திசெ இறுதி | டொலர் ஒன்றிற்கான ரூபா | 323.9 | 292.6 |
| நாணயமாற்று விகிதம் (மாதாந்த சராசரி) | சன - திசெ | டொலர் ஒன்றிற்கான ரூபா | 327.5 | 302.1 |
| **நாணயத்துறை** | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் (SDFR) | திசெ இறுதி | % | 9.00 | 7.50 |
| துணைநில் கடன் வசதி வீதம் (SLFR) | திசெ இறுதி | % | 10.00 | 8.50 |
| நியதிச்சட்ட ஒதுக்க தேவைப்பாடு (SRR) | திசெ இறுதி | % | 2.00 | 2.00 |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம் - வாராந்தம் (AWPR) | திசெ இறுதி | % | 12.13 | 8.90 |
| திறைசேரி உண்டியல் விளைவு வீதம் (91 நாட்கள்) | திசெ இறுதி | % | 14.51 | 8.62 |
| திறைசேரி உண்டியல் விளைவு வீதம் (364 நாட்கள்) | திசெ இறுதி | % | 12.93 | 8.96 |
| நாணய வழங்கல் வளர்ச்சி ($M_{2b}$) | 2023 திசெ /2024 திசெ | % | 7.3 | 8.6 |
| தனியார்த் துறை கடன் வளர்ச்சி | 2023 திசெ /2024 திசெ | % | -0.6 | 10.7 |

*த. இ. - தகவல் இல்லை*

## 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் அறிக்கையிடல் தேவைப்பாடுகள்

| பிரிவு | தேவைப்பாடு | நோக்கம் | இணக்கம் |
|---|---|---|---|
| பிரிவு 11 | நிதிச் செயல்நுணுக்கக் கூற்றினைச் சமர்ப்பித்தல்* | அரசாங்கத்தின் அரசிறை மூலோபாயம் பற்றிய முறையான கூற்றொன்றை பாராளுமன்றத்திற்கும் பொதுமக்களுக்கும் வழங்குதல், எதிர்வரும் வருடாந்த வரவு செலவுத் திட்டத்திற்கான மூலோபாய வழிகாட்டலை வழங்குதல், அரசிறைச் செயலாற்றுகையை பாரநிலையாக மதிப்பீடு செய்வதற்கான அடிப்படையொன்றை நிறுவுதல், அரசாங்கத்தின் அரசிறை மூலோபாயத்திற்கு எதிரான செயலாற்றுகை பற்றிய பாராளுமன்ற மேற்பார்வையை வலுப்படுத்தல் மற்றும் பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் பிரிவு 11(4) இன் பிரகாரம் அரசிறை வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக்கூறலையும் மேம்படுத்தல். | அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் யூன் முப்பதாம் நாளன்று அல்லது அதற்கு முன்பாக நிதி அமைச்சரால் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்படும். நிதிச் செயல்நுணுக்கக் கூற்று நிதி அமைச்சரின் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும். |
| பிரிவு 49 | வரவு செலவுத்திட்ட பொருளாதார மற்றும் நிதி நிலை அறிக்கை அறிக்கையை சமர்ப்பித்தல்* | பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் 49 (2) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளடக்கம் உட்பட அரசாங்கத்தின் நிதி மற்றும் பொருளாதார நிலைமையில் பொருள் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அனைத்து அரசாங்க முடிவுகள் மற்றும் அனைத்து பிற சூழ்நிலைகளையும் பற்றிய தகவல்களை வழங்குதல். | ஒவ்வொரு ஆண்டிலும் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டுக்காக நிர்ணயிக்கப்பட்ட தினத்தன்று நிதி அமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் நிதி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் அறிக்கை வெளியிடப்படும். |
| பிரிவு 50 | மத்திய ஆண்டு அரசிறை நிலைமை அறிக்கையை சமர்ப்பித்தல்* | பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு 50 (2) இன் கீழ் குறிப்பிடப்பட்ட உள்ளடக்கம் உட்பட அதன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதன் அரசிறை மூலோபாயத்திற்கு எதிராக அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படையை பொதுமக்களுக்கு வழங்குதல். | நிதி அமைச்சின் இணையத்தளத்தில், உரிய ஆண்டின் ஒக்டோபர் மாதத்தின் கடைசி நாளுக்குள் அல்லது உரிய ஆண்டின் ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்ட திகதியிலிருந்து பத்து மாதங்கள் கழிந்தால், இவற்றில் எது பிந்தியதோ அத்தினத்தில் வெளியிடப்படுதல் வேண்டும்; அத்துடன் அவ்வாறான அறிக்கையொன்று வெளியிடப்பட்ட திகதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் அல்லது அறிக்கை வெளியிடப்பட்ட திகதியில் பாராளுமன்றம் அமர்வில் இடம்பெறாவிடின், அத்தகைய அறிக்கையினை பாராளுமன்றத்தின் அடுத்த அமர்வின் இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்கச் செய்தல். |
| பிரிவு 51 | இறுதி வரவு செலவுத் திட்ட நிலை அறிக்கையை சமர்ப்பித்தல் (வருடாந்த அறிக்கை) * | பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு 51 (2) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளடக்கம் உட்பட தொடர்புடைய நிதியாண்டிற்கான அதன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசாங்கத்தின் வருடாந்த அரசிறை செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்கு பொதுமக்களுக்கு ஒரு அடிப்படையை வழங்குதல். | நிதியாண்டு முடிவடைந்ததிலிருந்து ஆறு மாதங்களுக்கு மிகாமல் நிதி அமைச்சரின் அமைச்சின் இணையதளத்தில் வெளியிடப்பட வேண்டும்; மற்றும் அத்தகைய வெளியீட்டுத் திகதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

| பிரிவு | தேவைப்பாடு | நோக்கம் | இணக்கம் |
|---|---|---|---|
| பிரிவு 52 | தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத்திட்ட நிலை அறிக்கை சமர்ப்பிப்பு ** | பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு 52(2) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளடக்கம் உட்பட நாட்டின் அரசிறை நிலைமை பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குதல். | பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக பொதுத் தேர்தலொன்றை நடத்துமாறு கோரும் பிரகடனம் அல்லது கட்டளை வெளியிடப்பட்ட மூன்று வாரங்களுக்குள் பொதுமக்களுக்கு வெளியிடப்படுதல்; புதிய பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வின் இரண்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்தின் முன் வைக்கப்பட்டது. நிதியமைச்சர், திறைசேரியின் செயலாளருக்கு அறிக்கையைத் தயாரிப்பதற்கு இயலச்செய்யும் நோக்கத்துக்காக, பொருண்சார் நிதிசார் அல்லது பொருளாதாரத் தாக்கங்களைக் கொண்ட, அல்லது கொண்டிருக்கக்கூடிய அல்லது கொண்டிருக்கக்கூடிய அவரது அறிவுக்குட்பட்ட அனைத்து அரசாங்கத் தீர்மானங்கள் மற்றும் பிற சூழ்நிலைகள் பற்றிய விபரங்களை செயலாளருக்கு வெளிப்படுத்துதல் வேண்டும். |
| பிரிவு 53 | நிதி அமைச்சரின் அமைச்சின் நிதி செயலாற்றுகை மீதான அறிக்கைகளை சமர்ப்பித்தல்* | அரசின் வருமானம் மற்றும் செலவினங்கள் உள்ளிட்ட நிதி செயல்பாடு குறித்த அறிக்கை அளித்தல். | ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்ததன் பின்னர் நாற்பத்தைந்து நாட்களுக்குள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படுவதுடன் ஒரே நேரத்தில் நிதி அமைச்சரின் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் வெளியிடப்பட வேண்டும். |

* நிதி அமைச்சரால்

** திறைசேரியின் செயலாளரால்

## இணக்கம் - 2024/2025

- **தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத் திட்ட நிலை அறிக்கை - 2024**

நாட்டின் அரசிறை நிலைமை பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் 14 ஆம் திகதி பொதுமக்களுக்கு வெளியிடப்பட்டதுடன், 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டது.

- **மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கை - 2024**

முதல் ஆறு மாதங்களுக்கான அரசிறை மற்றும் பொருளாதார நிலைமையின் நிலவரம் 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத இறுதியில் பொதுமக்களுக்கு வெளியிடப்பட்டதுடன் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 03 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டது.

- **நிதி செயல் நுணுக்கக் கூற்று - 2025**

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 11 (3) ஆம் பிரிவின் படி, நிதி செயல் நுணுக்கக் கூற்று ஒவ்வொரு ஆண்டும் யூன் முப்பதாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் நிதி அமைச்சரால் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்படும். நிதி அமைச்சரால் அறிவிக்கப்பட்டவுடன் நிதி அமைச்சரின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் நிதி செயல் நுணுக்கக் கூற்று வெளியிடப்படும்.

பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டம் 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8 ஆம் திகதியன்று நடைமுறைக்கு வந்ததால் இயற்றப்பட்ட இச் சட்டத்தின் கீழான முதலாவது நிதி செயல்நுணுக்கக் கூற்று ஜூன் 2025 ,30 அன்று அல்லது அதற்கு முன்னர் அறிவிக்கப்படுமென்பதோடு நிதி அமைச்சின் இணையதளத்தில் வெளியிடப்படும். எவ்வாறெனினும், வரவு செலவுத் திட்ட, பொருளாதார மற்றும் நிதி நிலை அறிக்கை -2025 இல் ஒரு மூலோபாய கொள்கை வழிகாட்டுதல் வகுக்கப்பட்டுள்ளது.

- **இந்த வரவு செலவுத் திட்ட, பொருளாதார மற்றும் நிதி நிலைஅறிக்கை - 2025**

இந்த அறிக்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி, நுகர்வோர் விலைகள், வேலைவாய்ப்பு மற்றும் வேலையின்மை, சென்மதி நிலுவை, வருமானம் மற்றும்செலவு மற்றும் அரசாங்க கடன், மேற்கூறப்பட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்ட அடிப்படை, மேற்கூறப்பட்ட மதிப்பீடுகளின் உணர்திறன் தொடர்பான அறிக்கை மற்றும் அத்தகைய மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் பொருளாதார அல்லது பிற அடிப்படையில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் தொடர்பான அறிக்கைகள் மற்றும் ஏனைய தகவல்களுக்கிடையில் அரசிறை நிலைமையின் மீது பொருண்மிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய இடர்நேர்வுகள் என்பவற்றை நடைமுறைக்கு சாத்தியமான அளவுக்கு அளவிடப்பட்ட ஒரு கூற்று என்பனவற்றை உள்ளடக்கியுள்ளதோடு ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டுக்காக நிர்ணயிக்கப்பட்ட தினத்தன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்

## வரவு செலவுத் திட்ட பொருளாதார மற்றும் நிதி நிலை அறிக்கை – 2025

இந்த அறிக்கை மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது: பகுதி I நடுத்தர கால அரசிறை மூலோபாயத்தை முன்வைக்கிறது; பகுதி II 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 49 (2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளடக்கம் உட்பட அரசாங்கத்தின் அரசிறை மற்றும் பொருளாதார நிலைமையின் மீது பொருண்மிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அனைத்து அரசாங்க தீர்மானங்கள் மற்றும் பிற அனைத்து சூழ்நிலைகள் பற்றிய தகவல்களை முன்வைக்கிறது; மற்றும் பகுதி III வரி செலவினங்கள் பற்றிய அறிக்கையை முன்வைக்கிறது, இதில் வரி செலவினங்களின் மொத்த செலவு மற்றும் புதிய வரி செலவுகளை வெளிப்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

# பகுதி I

# நடுத்தர கால அரசிறை மூலோபாயம்

# 01

## 1.1 மேன்நோக்கு

2024 ஆம் ஆண்டில், இலங்கையின் பொருளாதாரம் இரண்டு வருட மந்தநிலைக்குப் பிறகு ஸ்திரமடைந்து தொடர்ந்தும் நெகிழ்ச்சியுடன் இருந்தது. 2023 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நான்காண்டு விரிவாக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் (IMF-TFF) ஆதரவுடன் 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்த மாற்றங்கள் இப்போது பலனை தருகின்றன. நாட்டின் சுதந்திரத்திற்குப் பிந்தைய பொருளாதார வரலாற்றில் மிகவும் சவாலான காலங்களில் ஒன்றில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த சீர்திருத்தங்கள், கட்டமைப்பு பாதிப்புகளை நிவர்த்தி செய்வதற்கும் பேரினப்பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கும், நீண்டகால நிதி மற்றும் கடன் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கும், நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கும் பொருளாதார வளர்ச்சியை வளர்ப்பதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த காலகட்டத்தில் ஏற்பட்ட ஒரு முக்கிய அபிவிருத்தி நிர்வாகத்தில் ஏற்பட்ட மாற்றமாகும். இது குறிப்பாக, வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட அரசாங்க மேம்பாட்டு சீர்திருத்த நிகழ்ச்சி நிரலுக்கு புதுப்பிக்கப்பட்ட அர்ப்பணிப்பைக் கொண்டுவந்தது, பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை மீளக் கட்டியெழுப்புவதிலும் உள்நாட்டு மற்றும் சர்வதேச பங்குதாரர்களிடையே நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவதிலும் சர்வதேச நாணய நிதியத்தின் முக்கிய பங்களிப்பை அங்கீகரித்து புதிய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவிலான நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு தீர்மானகரமாக தெரிவு செய்துள்ளது. அரசிறை நிதிப் பற்றாக்குறைகளைக் குறைத்தல், மேம்பட்ட வருமான திரட்டல் மற்றும் மேம்பட்ட நிதித் துறை ஸ்திரத்தன்மை உள்ளிட்ட உறுதியான விளைவுகளை தற்போதைய பரந்தளவான கொள்கை தலையீடுகள் அளிக்கத் தொடங்கியுள்ளன. அடையப்பட்ட முன்னேற்றம் கொள்கை நிலைத்தன்மையின் முக்கியத்துவத்தையும், பொருளாதார மீட்பு நோக்கங்களுடன் நிர்வாக முன்னுரிமைகளை சீரமைப்பதையும் எடுத்துக்காட்டுகிறது. சர்வதேச நாணய நிதியம் – விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்துடன் முன்னோக்கிச் செல்லும் அதேவேளை, நிலைபேறான நிலைப்படுத்தல் மற்றும் நெகிழ்திறனுக்கான தெளிவான பாதையொன்றை அரசாங்கம் வகுத்துள்ளது.

கொள்கை நிலைத்தன்மையைப் பேணுதல் மற்றும் ஒருமுகப்படுத்தப்பட்ட வருமான மேம்பாடு மற்றும் செலவின முகாமைத்துவ வழிமுறைகளினூடாக, சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்க நிதியத்தின் 2024 திசெம்பர் இறுதி இலக்கான ரூபா 300 பில்லியனை விஞ்சும் வகையில் 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாத காலப்பகுதியில் ரூ. 830.7 பில்லியன் ஆரம்ப மிகையை அரசாங்கம் அடைந்துள்ளது. எவ்வாறாயினும், முதன்மைப் பணவீக்கத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க குறைவைத் தொடர்ந்து பணச்சுருக்கம் மற்றும் இலங்கை ரூபாவின் மதிப்புயர்வு என்பவற்றின் காரணமாக, 2024 ஆம் ஆண்டின் இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டுகளில் தொடர்ச்சியாக இரண்டு காலாண்டுகளுக்கு பணவீக்க இலக்கு கீழ் இறுதியில் மீறப்பட்டது. இலக்கிலிருந்து இந்த விலகல் 2024 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டிலும் நீடித்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (CCPI, 2021=100) ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம் 2024 திசெம்பரில் மேலும் -1.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ரூபாய் மீதான அழுத்தம் வீழ்ச்சியடைந்ததால் நாணயமாற்று வீதம் குறைந்த நிலையற்றதாக மாறியதால், இலங்கை ரூபா 2024 நவம்பர் 29 இல் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக 11.3 சதவீதமாக உயர்ந்தது. ஏற்றுமதி வருமானங்கள், சுற்றுலாத்துறை மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான நிரம்பலில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பினால் உந்தப்பட்டு உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை திரவத்தன்மை நிலைமைகள் தளர்த்தப்பட்டது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (சீன மக்கள் வங்கியின் பரிமாற்ற வசதியளிப்பு உள்ளடங்கலாக) 2023 திசெம்பர் இறுதியில் 4.4 பில்லியன் ஐ.அ.டொலரிலிருந்து 2024 திசெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 6.1 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்க வகையில் மேம்பட்டது.

இலங்கைப் பொருளாதாரம் 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் மீட்சியைக் கட்டியெழுப்பியதுடன் பொருளாதாரம் 2024 ஆம் ஆண்டில் வலுவான பொருளாதார வளர்ச்சியை வெளிப்படுத்தியது. 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் பதிவு செய்யப்பட்ட 1.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பொருளாதாரம் 5.5 சதவீதத்தால் விரிவடைந்தது. 2024 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில், பொருளாதார வளர்ச்சி 5.2 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. முக்கிய பொருளாதாரத் துறைகளில் குறிப்பிடத்தக்க விரிவாக்கங்களுடன் இந்த நேர்மறையான பாதையைப் பேணுவதன் மூலம், கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகளின் வெளியீட்டு வளர்ச்சியின் முக்கிய குறிகாட்டிகள் 2024 இன் இறுதிக் காலாண்டில் தொடர்ந்து மேம்பட்டன. 2024 திசெம்பருக்கான இலங்கையின் கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண் (PMI) பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தைப் பிரதிபலித்ததுடன், உற்பத்தி கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 57.2 பெறுமதியினையும் சேவைகள் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 71.1 இனையும் அடைந்ததுடன் இரு துறைகளினதும் வலுவான வளர்ச்சியை எடுத்துக்காட்டியது. மேற்கூறிய அபிவிருத்திகளின் அடிப்படையில், உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 2024 ஆம் ஆண்டில் சுமார் 5.0 சதவீதத்தால் வளரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2017

**முக்கிய அரசிறைத் திரட்டுகள் 2022-2024**




மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

ஆம் ஆண்டில் இருந்து மிக உயர்ந்த வருடாந்த வளர்ச்சி விகிதத்தை அடைகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் அக்டோபர் 2024 உலக பொருளாதார கண்ணோட்டத்தின்படி, 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் 3.2 சதவீத வளர்ச்சியுடன் உலகளாவிய வளர்ச்சி நிலையானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வளர்ந்து வரும் சந்தைகள் மற்றும் வளரும் பொருளாதாரங்கள் மோதல்கள், உள்நாட்டு அமைதியின்மை மற்றும் தீவிர வானிலை நிகழ்வுகள் காரணமாக பொருட்கள் உற்பத்தி மற்றும் கப்பல் போக்குவரத்தில் இடையூறுகள் போன்ற சவால்களை தொடர்ந்து எதிர்கொள்கின்றன, இவை அனைத்தும் உலகளாவிய பொருளாதார கண்ணோட்டத்தில் குறிப்பிடத்தக்க கவலைகளாக உள்ளன.

2024 ஆம் ஆண்டில், இலங்கையின் அரசிறை நிதி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தன. மேலும் வருமானம் திரட்டலை வலுப்படுத்த சில முக்கிய வரி சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. பெறுமதி சேர் வரி வீதத்தை 15 வீதத்திலிருந்து 18 வீதமாக உயர்த்துதல், பெறுமதி சேர் வரி பதிவு வரம்பை 80 மில்லியன் ரூபாவிலிருந்து 60 மில்லியன் ரூபா வரை குறைத்தல் மற்றும் பெறுமதி சேர் வரி விலக்களிப்புகளில் மிகப் பெரும்பான்மையை நீக்குதல் (137 பிரதான பொருட்களில் 95) ஆகியவை இந்த சீர்திருத்தங்களில் உள்ளடங்கும். எவ்வாறாயினும், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மற்றும் கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து போன்ற முக்கிய துறைகளில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தும் நிலையான பெறுமதி சேர் வரி விலக்குகள் தக்கவைக்கப்பட்டன. 2024 ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு வரும் உற்பத்தித் தீர்வை மற்றும் மது வரிக்கான வருடாந்திர பணவீக்க சரிசெய்தலை அறிமுகப்படுத்த மதுபானம் மற்றும் அனைத்து உற்பத்தித் தீர்வை விதிக்கக்கூடிய பொருட்கள் மீதான உற்பத்தித் தீர்வை மற்றும் மது வரி 14 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டன. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் தேறிய உயர் செல்வ தனிநபர்கள் (HWNI) பிரிவை நிறுவுவதன் மூலமும், இணக்கத்தை மேம்படுத்துதல், எண்ணிம மயமாக்கலை மேம்படுத்துதல், இடர் அடிப்படையிலான கணக்காய்வுகளை மேம்படுத்துதல் மற்றும் வருமான கசிவுகள் மற்றும் ஊழல் பாதிப்புகளைக் குறைத்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் முக்கிய வருமான திணைக்களங்களில் எண்ணிம வருமான நிர்வாக அமைப்புகளை மேம்படுத்துவதன் மூலம் வருமான நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

2024 மார்ச், ஜூன் மற்றும் செப்டெம்பர் ஆகிய மாதங்களின் இறுதியில் சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்க நிதியத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க இலக்குகளை விட வரி வருமானம் சேகரிப்பானது கணிசமாக மேம்பட்டுள்ளது. இது முறையே ரூபா 87 பில்லியன், ரூபா 209 பில்லியன் மற்றும் ரூபா 288 பில்லியனாகும். இருப்பினும், நிலவும் பணச்சுருக்கம், நாணய மதிப்பு உயர்வு மற்றும் வருமான நிர்வாகத்தில் உள்ள பலவீனங்கள் காரணமாக வருமானம் திரட்டலின் முழுத் திறனை இன்னும் அடைய முடியவில்லை. வருமானம் நிர்வாக நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு ஏற்ப, முக்கிய வருமானம் சேகரிக்கும் நிறுவன சீர்திருத்தங்களில் அரசு கவனம் செலுத்துகிறது.

2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் மானியங்கள் உட்பட அரசாங்க வருமானம் 34.2 சதவீதத்தால் அதிகரித்து 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 2,434.0 பில்லியனிலிருந்து ரூபா 3,266.9 பில்லியனாக அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் ரூபா 744.7 பில்லியனாக இருந்த வருமான வரி வருமானம் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 9.5 சதவீதத்தால் ரூபா 815.6 பில்லியனாக அதிகரித்துள்ளது. இது ஆண்டு வருமான மதிப்பீட்டில் 75.5 சதவீத அடைவாகும். பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகளிலிருந்தான வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் ரூபா 1,159.0 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 55.1 சதவீதத்தால் ரூபா 1,797.8 பில்லியனாக அதிகரித்துள்ளது. இதற்குப் பிரதானமாக 2023 இல் ரூபா 694.5 பில்லியனாக இருந்த முழு ஆண்டுப் பெறுமதி சேர் வரி வருமானம் ரூபா 372.9 பில்லியனினால் அதிகரித்து பெறுமதி

சேர் வரியிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் 86.8 சதவீதத்தினால் ரூபா 1,067.4 பில்லியனாக அதிகரித்தமை மற்றும் 2023 இல் ரூபா 469.6 பில்லியனாக இருந்த முழு ஆண்டு உற்பத்தித் தீர்வை மற்றும் மதுவரி வருமானம் ரூபா 17.2 பில்லியனால் அதிகரித்து உற்பத்தித் தீர்வை மற்றும் மதுவரியிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானத்தின் அதிகரிப்பு 29.6 சதவீதத்தால் ரூபா 486.8 பில்லியனாக அதிகரித்துள்ளமையாகும் . வெளிநாட்டு வர்த்தகத்துக்கான வரிகளிலிருந்து கிடைக்கும் வருமானம் 25.3 வீதத்தால் 386.9 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. இது 2023 ஆம் ஆண்டு முழுமைக்குமான வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட மொத்த வருமானமான 389.1 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் வெறும் 2.2 பில்லியன் ரூபா குறைவாகும். இந்தக் கிட்டிய சமநிலை, வர்த்தகம் தொடர்பான வரி சேகரிப்பில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி மற்றும் மீட்சியை எடுத்துக்காட்டுகிறது. இது துறையின் வலுவான மீட்பு மற்றும் வலுவான பொருளாதார நடவடிக்கைகளை எடுத்துக்காட்டுகிறது. காப்பு வரிகள் படிப்படியாக நீக்கப்பட்டதன் காரணமாக சமீபத்திய ஆண்டுகளில் துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (PAL) மற்றும் பண்ட ஏற்றுமதி மானியத் திட்டம் (CESS) ஆகியவற்றிலிருந்து காணப்பட்ட வருவாயின் குறைவான செயல்திறன், 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் மீட்சியைக் காட்டியது. செஸ் மற்றும் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு ஆகியவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் முறையே 47.9 சதவீதம் மற்றும் 0.6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. இது இறக்குமதி கட்டுப்பாடுகளின் தளர்வின் தாக்கத்தை பிரதிபலிக்கிறது. 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் ரூபா 212.3 பில்லியனாக இருந்த வரியல்லாத வருமானம் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 20.3 சதவீதத்தால் ரூபா 255.5 பில்லியனாக அதிகரித்துள்ளது. இது ஆண்டு வருமானம் மதிப்பீட்டில் 89.0 சதவீத அடைவாகும்.

அரச செலவினம் 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் ரூபா 3,981.1 பில்லியனிலிருந்து 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 8.7 சதவீதத்தால் ரூபா 4,327.7 பில்லியனாக சற்றே அதிகரித்துள்ளது. அரசாங்க செலவினம் தொடர்ந்து சரியான பாதையில் இருந்ததுடன் 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டான ரூ. 6,527.8 பில்லியனுக்கு எதிராக 66.3 சதவீத நிறைவேற்று விகிதத்தை அடைந்ததுள்ளது. மீண்டுவரும் செலவினமானது 2023 ஆம் ஆண்டின் ரூபா 3,532.2 பில்லியனிலிருந்து 2024 இன் முதல் பத்து மாதங்களில் ரூபா 3,796.0 பில்லியனுக்கு 7.5 சதவீதத்தால் சிறிதளவு அதிகரித்தது. 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் வட்டிக் கொடுப்பனவுகள் 1,772.4 பில்லியன் ரூபாயிலிருந்து 6.7 சதவீதத்தால் 1,891.5 பில்லியன் ரூபாயால் சிறிதளவு அதிகரித்தன. பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான செலவினமானது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 228.4 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் ரூபா 255.9 பில்லியனுக்கு 12.0 சதவீதத்தால் சிறிதளவால் அதிகரித்ததுள்ளது. இதற்கு 2024 இல் குறைந்தளவு பணவீக்கம் மற்றும் ரூபாவின் பெறுமதி ஏற்றத்தின் கூட்டு விளைவே காரணமாகும்.

நிலையான பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை எய்துவதற்காக 2026 ஆம் ஆண்டிலிருந்து வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதத்திற்கும் குறைவாக கட்டுப்படுத்துவதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது. சமீபத்திய ஆண்டுகளில் அரசாங்க வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையிலான விரிவடைந்து வரும் இடைவெளி 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் படிப்படியாகக் குறைந்துள்ளது, இது அரசாங்க வருவாயில் மேம்பாடுகள் மற்றும் அரசாங்க செலவினங்களைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றால் உந்தப்பட்டுள்ளது. வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை, பெயரளவு நியதிகளில், 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் ரூபா 1,547.0 பில்லியனிலிருந்து 2024 இன் இதே காலப்பகுதியில் ரூபா 1,060.7 பில்லியனுக்கு குறுகியது. ஆரம்ப மிகை 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் காணப்பட்ட ரூபா 225.4 பில்லியனிலிருந்து 2024 இன் இதே காலப்பகுதியில் ரூபா 605.3 பில்லியனால் ரூபா 830.7 பில்லியனாக விரிவடைந்தது. குறைந்த உள்நாட்டு வட்டி வீதங்களின் காரணமாக குறைக்கப்பட்ட வட்டிக் கொடுப்பனவுகள் காரணமாக ஒட்டுமொத்த மீதியும் மேம்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நடுத்தர காலத்தில், வருமானம் அடிப்படையிலான அரசிறை ஒருங்கிணைப்பு முயற்சிகளை முழுமையாக நடைமுறைப்படுத்துதல் மற்றும் படுகடன் மறுசீரமைப்புசெயன்முறையைநிறைவுசெய்தல் என்பவற்றுடன் முதனிலை மீதியும் ஒட்டுமொத்த மீதியும்மேம்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சர்வதேச நிதிச் சந்தைகளுக்கான அணுகல் மட்டுப்படுத்தப்பட்டதால், அரசாங்கம் முதன்மையாக நிதிப் பற்றாக்குறைக்கு நிதியளிக்க உள்நாட்டு ஆதாரங்களைச் சார்ந்திருந்தது. 2024 இன் முதல் பத்து மாதங்களில் நிதிப் பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்கான தேறிய உள்நாட்டு நிதியளிப்பு ரூ.786.3 பில்லியனாகவும், தேறிய வெளிநாட்டு நிதியளிப்பு ரூ. 274.5 பில்லியனாகவும் காணப்பட்டது.

நிலுவையிலுள்ள மத்திய அரசாங்கத்தின் கடன் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 28,696.0 பில்லியனிலிருந்து 2024 நவம்பர் இறுதியில் 1.6 சதவீதத்தால் ரூபா 28,240.2 பில்லியனாக குறைந்துள்ளது. 2024 நவம்பர் மாத இறுதியில், மொத்த நிலுவையிலுள்ள உள்நாட்டு கடன் 3.0 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 17,572.0 பில்லியனாக பதிவான அதேவேளை, நிலுவையிலுள்ள வெளிநாட்டுக் கடன் 8.4 சதவீதத்தால் குறைந்து ரூபா 10,668.3 பில்லியனாக காணப்பட்டது.

2024 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபா வலுவடைந்தது, குறிப்பாக

உயர்ந்த தொழிலாளர் பணவனுப்பல்கள், சுற்றுலா வருமானங்கள் மற்றும் ஏற்றுமதி வருமானங்கள் மற்றும் மேம்பட்ட சந்தை உணர்வுகள் ஆகியவற்றிலிருந்து அதிகரித்த உட்பாய்ச்சல்கள் ஆதரவளித்தன. இதனால், 2024 நவம்பர் 29 ஆம் திகதியுடன் இலங்கை ரூபாவின் பெறுமதி அமெரிக்க டொலருக்கு எதிராக 11.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இது மேம்பட்ட முதலீட்டாளர்களின் நம்பிக்கை, படுகடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையின் கீழ் நிதி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மற்றும் சீர்திருத்தங்களின் மேம்பட்ட ஸ்திரத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றால் இயக்கப்பட்டுள்ளது.

2024 டிசம்பரில், இலங்கை அதன் பொதுக் கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் பெரும்பகுதியை நிறைவு செய்தது. ஜூன் 2024 இல், வெளிப்புற உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள்,சீன எக்ஸிம் வங்கி மற்றும் ஜப்பான், இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய 17 நாடுகளை உள்ளடக்கிய அதிகாரப்பூர்வ கடன் வழங்குநர் குழு (OCC) ஆகியவற்றுடன் கடன் பரிசீலனை ஒப்பந்தங்கள் எட்டப்பட்டன. அரசாங்கம் இப்போது 17 அதிகாரப்பூர்வ கடன் வழங்குநர் குழு உறுப்பினர்களில் ஒவ்வொருவருடனும் இருதரப்பு ஒப்பந்தங்களை இறுதி செய்து வருவதுடன் அந்த செயல்முறையை முறையாக நிறைவுசெய்யவுள்ளது 2024 டிசம்பரில், இலங்கை பிணையப்பத்திரதாரர்களுடனான கடன் பரிமாற்றத்தை முடித்ததுடன் இதன் விளைவாக நிலுவையில் உள்ள பிணையப்பத்திரங்கள் புதிய மறுசீரமைக்கப்பட்டதுடன் கருவிகளாக 98 சதவீதம் பரிமாற்றம் செய்யப்பட்டது. சீன அபிவிருத்தி வங்கியுடனான கடன்களும் 2024 டிசம்பரில் மறுசீரமைக்கப்பட்டன, அதேபோல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கடன்கள் அரசாங்கத்திற்கு மாற்றப்பட்டு இரண்டு அரச வங்கிகளால் ஏற்கப்பட்டன.

இதன்படி, இலங்கையின் இறையாண்மை கொடுகடன் தரப்படுத்தலானது Fitch Ratings (CCC+) மற்றும் Moody's (Caa1) ஆகிய இரண்டினாலும் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் வரையறுக்கப்பட்ட இயல்புநிலையிலிருந்து மேம்படுத்தப்பட்டது. ஒட்டுமொத்த கடன் மறுசீரமைப்பு இலங்கைக்கு குறிப்பிடத்தக்க கடன் நிவாரணத்தை வழங்குகின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் அடிப்படை சூழ்நிலையின்படி, கடன் மறுசீரமைப்பு விளைவுகளின் விளைவாக அடுத்த 10 ஆண்டுகளில், 2035 இறுதிக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இலங்கையின் கடன் விகிதம் 2022 இல் காணப்பட்ட 128 சதவீதத்திலிருந்து 84 சதவீதமாக குறையும் எனவும் மொத்த நிதியிடல் தேவைகள் 2022 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 34.6 சதவீதத்திலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சதவீதமாகக் குறையும் எனவும் மேலும் வெளிநாட்டு நாணய கடன் சேவை 2022 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.2 சதவீதத்திலிருந்து 2035 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 சதவீதமாகக் குறையும் என்ஆகையால், நடுத்தர காலத்தில் மீள்கட்டமைக்கப்பட்ட படுகடனின் படுகடன் சேவைக் கொடுப்பனவுகளை சுமூகமாக மீளமைத்தலை இயலச்செய்வதற்காக இலங்கை அதன் அரசிறை மற்றும் வெளிநாட்டு தாங்கிருப்புகளை மீளக் கட்டியெழுப்புவதற்கு மறுசீரமைப்பினால் வழங்கப்பட்ட அரசிறை இடத்தைப் பயன்படுத்த வேண்டும்.

2024 முழுவதும், பணவீக்கம் ஒரு நிலையான கீழ்நோக்கிய போக்கைக் காட்டியது, இறுதியில் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் பணவாட்ட பிரதேசத்திற்குள் நுழைந்தது. 2024 ஆம் ஆண்டின் ஆரம்ப மாதங்களில், முதன்மைப் பணவீக்கம் பெறுமதிசேர் வரியின் அதிகரிப்பு மற்றும் சில நுகர்வோர் பொருட்கள் மீதான பெறுமதிசேர் வரி விலக்களிப்புகள் நீக்கப்பட்டமை காரணமாக தற்காலிக அதிகரிப்பொன்றினை நிரூபித்தது. இருப்பினும், பணவீக்கம் குறையத் தொடங்கியது, இலக்கான 5 சதவீதத்திற்கும் கீழே வீழ்ச்சியடைந்தது. இந்த வீழ்ச்சி முக்கியமாக எரிசக்தி விலைகளில் எதிர்பார்த்ததை விட கூர்மையான குறைப்புகள், வலுவான ரூபாய் மற்றும் உணவு விலைகளில் வீழ்ச்சி ஆகியவற்றால் உந்தப்பட்டது. செப்டம்பர் 2024 க்குள், முதன்மைப் பணவீக்கம் ஒன்பது ஆண்டுகளில் முதல் முறையாக பணச் சுருக்க மட்டத்தை எட்டியது. எவ்வாறாயினும், பணவீக்கம் 2025 நடுப்பகுதியில் சாதகமான மீளளிப்பனவுடன் பொருத்தமான கொள்கை வழிமுறைகளினால் உந்தப்பட்டு நடுத்தர காலத்தில் 5 சதவீத இலக்குடன் படிப்படியாக ஒழுங்கமைக்குமென மதிப்பிடப்படுகின்றது.

2024,நவம்பர் 27ஆம் திகதியன்று இலங்கை மத்திய வங்கி, நாணயக் கொள்கைக் கட்டமைப்பினை இலகுபடுத்தல், சமிக்ஞையின் வினைத்திறனை மேம்படுத்தல், வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தல், சர்வதேசச் சிறந்த நடைமுறைகளுடன் ஒழுங்கமைத்தல் மற்றும் நிதியியல் முறைமையில் உறுதிப்பாட்டினைப் பேணுதல் ஆகிய நோக்கங்களுடன் ஓரிரவுக் கொள்கை வீதத்தை அறிமுகப்படுத்தியது. புதிய ஒற்றைக் கொள்கை வட்டி வீதக் கட்டமைப்பின் கீழ், துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் என்பன இனிமேலும் மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களாக செயற்படாது. அதற்கு பதிலாக, இலங்கை மத்திய வங்கியுடன் ஓரிரவு கொடுக்கல் வாங்கல்களுக்காக கிடைக்கக்கூடிய நிலையான வசதிகளுக்குப் பொருந்தும் இந்த வீதங்கள் இப்போது OPR உடன் ±50 அடிப்படைப் புள்ளிகள் வித்தியாசத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. அதன்படி, துணைநில் வைப்பு வசதி வீதம் (SDFR) 7.50 சதவீதமாகவும், துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் (SLFR) 8.50 சதவீதமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விரிவான சீர்திருத்தங்கள் மற்றும் மூலோபாய கொள்கை முன்முயற்சிகளை செயல்படுத்துவதன் மூலம், 2025 ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3 சதவீத ஆரம்ப மிகையை அடைவது மற்றும் நடுத்தர காலத்தில் அதை நிலைநிறுத்துவதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

வலுவான வருமானம் பெருக்கம் மற்றும் விவேகமான செலவின முகாமைத்தவம் மூலம் இந்த இலக்கு அடையப்படும். பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை மீளமைப்பதற்காக குறித்துரைக்கப்பட்ட காலவரையறையினுள் அதன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கின்ற சர்வதேச நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்திற்கான அதன் அர்ப்பணிப்பை அரசாங்கம் உறுதிப்படுத்துகிறது. நிரூபிக்கக்கூடிய திருத்தங்களுடன் தற்போதுள்ள வருமானம் நடவடிக்கைகளைத் தொடர்வது, நிரப்பு சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவது மற்றும் வரி அடித்தளத்தை விரிவுபடுத்துவதற்கும், இணக்கத்தை மேம்படுத்துவதற்கும், வரி ஏய்ப்பு மற்றும் வருமானம் கசிவுகளை குறைப்பதற்கும் வருமானம் நிர்வாகத்தை வலுப்படுத்துதல் ஆகியவை இந்த அர்ப்பணிப்பில் அடங்கும். செலவினங்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக செலவின முகாமைத்துவத்தை முன்னேற்றும் அதேவேளை, பொதுப்படுகடன் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக மீதமுள்ள சூறுகளின் படுகடன் மறுசீரமைப்பு செயன்முறையை நிறைவு செய்வதிலும் முயற்சிகள் கவனம் செலுத்தும். பாதிக்கப்படக்கூடிய சமூகங்களைப் பாதுகாப்பதற்கான சமூகப் பாதுகாப்பு வலை திட்டத்தை வலுப்படுத்துவதில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது மற்றும் நடுத்தர வருமானம் ஈட்டுபவர்களின் சுமையை குறைக்க உறுதிபூண்டுள்ளது. அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் (SOEs) மறுசீரமைப்பு இந்த நிறுவனங்களுடன் தொடர்புடைய நிதி அபாயங்களைத் தணிப்பதைத் தொடரும். இலக்கு நிர்ணயிக்கப்பட்ட மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தும் முதலீடுகள் மூலம் உள்வரவை ஈர்ப்பதற்காக பொது முதலீடு நடுத்தர காலத்தில் மூலோபாய ரீதியாக மேம்படுத்தப்படும்.

## 1.2 நடுத்தரகால அரசிறை மூலோபாயம்

2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தின் அரசிறைத் தொழிற்பாடுகள் முகாமை செய்யப்படுவதுடன், 2025 டிசெம்பர் இறுதிக்குள் அதன் முழுமையான அமுலாக்கம் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நிலைபேறான மட்டத்தில் அரச கடனைக் குறைத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல், எதிர்கால அதிர்ச்சிகளிலிருந்து பாதுகாக்கும் அரசிறை இடையகங்களை உருவாக்கி பராமரித்தல், அரசிறை இடர்நேர்வுகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் தணித்தல் மற்றும் அரசிறை முகாமைத்துவத்தில் ஒழுக்கம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றை உறுதிப்படுத்தல் போன்ற பிரதான நோக்கங்களை அடைவதற்கான சட்டரீதியான கட்டமைப்பொன்றை இச்சட்டம் வழங்குகிறது. மேலும், இது ஆண்டுதோறும் அரசிறை மூலோபாய அறிக்கையை மற்றும் ஐந்து ஆண்டுகளுக்கான நடுத்தர கால அரசிறைக் கட்டமைப்பை வெளியிடுவதற்கான தேவையை சட்டபூர்வமாக்குகிறது.

இச்சட்டத்தின் கடன் குறைப்பு நோக்கமானது முதன்மை இருப்பு இலக்கு மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சதவீதத்தின் கீழ் முதன்மை செலவின உச்சவரம்பு ஆகியவற்றின் மூலம் கண்காணிக்கப்படுகிறது. இது அரசிறை மூலோபாய அறிக்கையின் கீழ் நடுத்தர கால அரசிறை கட்டமைப்பின் கீழ் நிறுவப்படும். சர்வதேச நாணய நிதியத்தின் வெளிநாட்டு நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய தூண்களில் ஒன்றான வட்டியல்லாத செலவினங்களை முகாமை செய்கின்ற அதேவேளையில் இது வருமான அதிகரிப்பு வழிமுறைகளினூடாக வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட அரசிறை ஒருங்கிணைப்புக்கான அடித்தளத்தை வழங்குகின்றது.

### அரசிறை மூலோபாயம்

அரசாங்கத்தின் அரசிறை மூலோபாயமானது வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட அரசிறை ஒருங்கிணைப்பினால் ஆளப்படுவதுடன் சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதியுதவி நிகழ்ச்சித்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசிறை அளவுசார் இலக்குகள் மற்றும் பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் (PFMA) கீழ் குறித்துரைக்கப்பட்ட அரசிறை விதிகளினால் வழிநடத்தப்படுகின்றது. 2025 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3 சதவீதத்திற்கும் குறையாமல் ஆரம்ப மிகையை அடைய அரசு உறுதிபூண்டுள்ளது. இந்த நோக்கில், 2025 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.1 சதவீதம் வரை அரசாங்க வருமானத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் பல வருமானம் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தியுள்ளது. இதற்கு மேலதிகமாக, வரி இணக்கத்தை அதிகரித்தல், ஊழல் பாதிப்புகளைக் குறைத்தல், வரி நிர்வாகத்தை எண்ணிம மயமாக்குதல் மற்றும் நவீனமயமாக்கல் மற்றும் வினைத்திறனான முகாமைத்துவம் மற்றும் ஆளுகை ஆகியவற்றில் கவனம் செலுத்தி வரி நிர்வாகத்தை வலுப்படுத்த ஏற்கனவே பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசாங்க வருமானத்தை அதிகரிக்கும் அதேவேளையில், பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்திற்கு இணங்க மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சதவீதத்திற்கும் குறைவான அரசாங்க செலவினங்கள் மற்றும் முதன்மை செலவினங்களை விவேகமான மட்டங்களில் பராமரிக்க அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. எவ்வாறாயினும், முக்கிய அபிவிருத்தித் துறைகளுக்கு போதுமான நிதி ஒதுக்கப்படுவதும், சமூகப் பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்துவதும் உறுதி செய்யப்படும். வளர்ச்சிக்கு ஆதரவான நடவடிக்கைகள், விலை மற்றும் நிதி ஸ்திரத்தன்மையை உறுதி செய்தல் மற்றும் நிர்வாகத்தை வலுப்படுத்துதல் உள்ளிட்ட ஒட்டுமொத்த பொருளாதார நிலைப்படுத்தல்

நடவடிக்கைகளால் அரசிறை மூலோபாயம் ஆதரிக்கப்படும்.

சர்வதேச நாணய நிதியம் – விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான படுகடன் நிலைபேறான இலக்குகளுக்கு இணங்க படுகடன் நிலைத்தன்மையை மீளமைப்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது. உள்நாட்டு கடன் மேம்படுத்துகை மற்றும் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பின் அனைத்து கூறுகளும் மிக உயர்ந்த அளவிலான பங்கேற்புடன் முன்னேறி வருவதை அரசாங்கம் முடித்துள்ளது, இது ISB களின் மொத்த நிலுவைத் தொகையில் 98 சதவீதத்திற்கு நெருக்கமாக பரிமாற்றம் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. படுகடன் பரிமாற்றத்தை நடைமுறைப்படுத்துவதானது இலங்கைக்கு கணிசமான கடன் நிவாரணத்தை வழங்குவதுடன், பொது முதலீட்டுக்கான வளங்களை விடுவிக்கும். மேலும், 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பொதுத் தனிசு (கடன்) முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் 2024 டிசம்பர் 02 ஆம் திகதி பொதுத் தனிசு (கடன்) முகாமைத்துவ அலுவலகம் நிறுவப்பட்டு செயற்பாட்டை ஆரம்பித்துள்ளது. பொதுத் தனிசு (கடன்) முகாமைத்துவ அலுவலகம் பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்திற்கு இணங்க நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயத்தை வெளியிடும்.

அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான மூலோபாய வரைபடத்தை வழங்குவதற்காக நடுத்தர கால நிதி கட்டமைப்பு உட்பட நிதி மூலோபாய அறிக்கை ஜூன் மாத இறுதியில் வெளியிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டம் 2024 ஆகஸ்ட் முதல் நடைமுறைக்கு வந்ததால், அந்த அறிக்கை 2025 ஆம் ஆண்டிற்காக வெளியிடப்படவில்லை, ஆனால் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவிலான பொருளாதார மற்றும் நிதி சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்ப ஒரு மூலோபாய கொள்கை வழிகாட்டல் செய்யப்பட்டது.

2025 – 2029 ஆம் ஆண்டிற்கான அரசிறைப் பாதை மற்றும் நிதி நிலைத்தன்மையை நோக்கிய பேரண்டப் பொருளாதார வழிகாட்டல் ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

### 1.3 அரசிறைப் பாதை:

- 2025 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3 சதவீத ஆரம்ப மிகையை அடைதல் மற்றும் அடுத்தடுத்த ஆண்டுகளில் வலுவான வருவாயை மேம்படுத்தும் முயற்சிகள் மற்றும் அரசாங்க செலவினங்களை சீராக்கம் செய்தல்.

- வரிக் கொள்கை சீர்திருத்தங்கள் மற்றும் வரி நிர்வாகத்தை வலுப்படுத்துவதன் மூலம் 2025 மற்றும் அதற்கு அப்பால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வருவாயை குறைந்தபட்சம் 15 சதவீதமாக அதிகரித்தல்.

- குறிப்பாக பெறுமதிசேர் வரி (பெசேவ) இணக்கப்பாட்டு மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக பிரதான வரிகளின் வரி இணக்கப்பாட்டினை மேம்படுத்துதல் மற்றும் இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமையினை முழுமையாக நீக்குவதை உறுதிப்படுத்துவதற்காக முழுமையாக செயற்பாட்டு பெசேவ மீளளிப்பு முறைமையொன்றை தாபித்தல்.

- கொடுப்பனவு, தாக்கல் செய்தல், ஆவணப்படுத்தல் மற்றும் பதிவு செய்தல் என்பவற்றுடன் தொடர்புடைய பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகளின் கீழ் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தை கண்காணித்தல்.

- ரமிஸ் (RAMIS) 3.0 ஐ அறிமுகப்படுத்துவதன் மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தை நவீனமயமாக்குதல், எளிமைப்படுத்தப்பட்ட தனிநபர் வரி தாக்கல் செய்வதற்கான நிகழ்நிலை இணையவாசலை அறிமுகப்படுத்துதல் மற்றும் அனைத்து வரி சேகரிப்புக்களையும் RAMIS மூலம் செயலாக்குதல்.

- நடுத்தர கால நிதி கட்டமைப்பின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட முதன்மை செலவின உச்சவரம்பிற்கு கீழே முதன்மை செலவினங்களை நிர்வகித்தல், இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சதவீதத்திற்கும் குறைவாக இருக்க வேண்டும்.

- சமூகத்தின் மிகவும் பாதிக்கப்படக் கூடிய பிரிவுகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கான சமூகப் பாதுகாப்பு வலை திட்டங்களை தொடர்ந்து வலுப்படுத்துதல்.

- 2025 மற்றும் அதற்கு அப்பால் பொது முதலீட்டை 4 சதவீதத்திற்கும் அதிகமாக பராமரித்தல்.

- சுகாதாரம், கல்வி, உட்கட்டமைப்பு மற்றும் சமூக பாதுகாப்பு உள்ளிட்ட முன்னுரிமைத் துறைகளுக்கு செலவினங்கள் போதுமான அளவு ஒதுக்கப்படுவதை உறுதி செய்யும் அதே வேளையில், பொது முதலீடுகளுக்கு கவனமாக முன்னுரிமை அளித்தல் மற்றும் வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நிதியளிக்கப்பட வேண்டிய திட்டங்கள் மற்றும் திட்டங்களைத் தேர்ந்தெடுத்தல்.

- ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையை (ITMIS) முழுமையாக வெளியிடுவதன் மூலம் மேம்படுத்தப்பட்ட அர்ப்பணிப்பு கட்டுப்பாடுகள் செலவின ஒழுக்கத்தின் மையமாக இருத்தல்.

- 2026 மற்றும் அதற்கு அப்பாலிருந்து வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையினைப் படிப்படியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதத்திற்கு குறைவாக

கொண்டுவருவதைக் கட்டுப்படுத்தி அதன் மூலம் அரசாங்கத்தின் மொத்த நிதியீட்டுத் தேவைகளைக் குறைத்தல்.

- 3 மாதங்களுக்கு மேலாக நிலுவைத் தொகை குவிவதை நீக்குதல்.

- அரசாங்க உத்தரவாதங்களிலிருந்து எழும் நிதி இடர்நேர்வுகளை மட்டுப்படுத்தும் நோக்கில், ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மற்றும் அதற்கு முந்தைய இரண்டு நிதியாண்டுகளின் சராசரி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.5 சதவீதத்திற்கு மிகாமல் இருப்பதற்கு நிலுவையிலுள்ள அரசாங்க உத்தரவாதங்களின் மொத்த கையிருப்பை பராமரிப்பதற்கான அரசாங்க உத்தரவாதங்களை குறைத்தல்.

- இலங்கை மின்சார சபை (CEB) மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) என்பவற்றின் சிறந்த நிதியியல் செயலாற்றுகையை உறுதிப்படுத்துவதற்காக தன்னி யக்க எரிபொருள் மற்றும் மின்சார விலை பொறிமுறைகளை அமுல்படுத்துவதைத் தொடர்தல்

- அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளின் நிதி நிலைத் தன்மையை மேம்படுத்துவதற் கும் அவற்றின் நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கும் கட்டமைப்பு மறுசீரமைப்புகளை மேற்கொள் ளுதல்.

மேலே கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி, நிதிப் பாதை முதன்மையாக வரிக் கொள்கை மற்றும் வரி நிர்வாகம் மற்றும் அரசாங்க செலவினங்களின் விவேகமான முகாமைத்தவம் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் வருமானம் திரட்டும் உத்திகளை அடிப்படையாகக் கொண்டது. SOE மறுசீரமைப்பு முயற்சிகள், வலுவான நிறுவன கட்டமைப்பு, எண்ணிம அமைப்புகள் மற்றும் தரவுகளின் எண்ணிம மயமாக்கல் மற்றும் ஒருங்கிணைப்பு, மேம்பட்ட ஆளுகை மற்றும் வளர்ச்சி மற்றும் பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மை ஆகியவற்றால் நிதிக் கண்ணோட்டம் ஆதரிக்கப்படும்.

### 1.4 நடுத்தரகால அரசிறைக் கட்டமைப்பு

நடுத்தரகால அரசிறைக் கட்டமைப்பு பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது:

- 2025 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 சதவீதம் வரை அரசாங்க வருமானத்தை அதிகரித்தல் மற்றும் நடுத்தர காலத்தில் அதை அதிகரித்தல்.

- அடிப்படை செலவினங்களை மொத்த தேசிய உற்பத்தியில் 13 சதவீதத்தின் கீழ் பேணுதல் மற்றும் பொது முதலீடுகளை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 சதவீதத்திற்கு மேல் பேணுதல்.

- 2025 ஆம் ஆண்டில் 2.3 சதவீத ஆரம்ப மிகையினை அடைதல் மற்றும் காலப்போக்கில் அதே அளவைப் பராமரித்தல்.

- 2026 இல் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை மொத்த தேசிய உற்பத்தியில் 5 சதவீதத்திற்கும் குறைவாக கட்டுப்படுத்துதல்.

- மத்திய அரசின் கடனை குறைத்து படிப்\ படியாக கடனை நிலையான நிலைக்கு கொண்டு வருதல்.

**அட்டணை 1.1 : நடுத்தர கால பேரின அரசிறை கட்டமைப்பு 2024 - 2029**

*மொ.உ.உ.(%)*

| குறிகாட்டி | 2024 தற்காலிக | 2025 வரவுசெலவு திட்டம் | 2026 | 2027 | 2028 | 2029 |
|---|---|---|---|---|---|---|
| | | | எதிர்வு கூறல் | | | |
| **மொத்த வருமானம் மற்றும் மானியங்கள்** | **13.6** | **15.1** | **15.1** | **15.2** | **15.3** | **15.3** |
| **மொத்த வருமானம்** | **13.4** | **15.0** | **15.0** | **15.1** | **15.2** | **15.2** |
| **வரி வருமானம்** | **12.3** | **13.9** | **13.9** | **13.9** | **14.2** | **14.2** |
| வருமானம் வரி | 3.4 | 3.5 | 3.6 | 3.6 | 3.7 | 3.8 |
| பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள் | 7.3 | 8.4 | 8.7 | 8.7 | 8.7 | 8.7 |
| வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகள் | 1.6 | 2.0 | 1.6 | 1.6 | 1.7 | 1.7 |
| **வரியல்லாத வருமானம்** | **1.1** | **1.1** | **1.1** | **1.1** | **1.1** | **1.1** |
| **மானியங்கள்** | **0.2** | **0.1** | **0.1** | **0.1** | **0.1** | **0.1** |
| **மொத்த செலவினம்** | **20.4** | **21.8** | **19.6** | **19.1** | **19.0** | **18.8** |
| **மீண்டெழும்** | **17.8** | **17.8** | **15.5** | **15.0** | **14.8** | **14.7** |
| சம்பளம் மற்றும் வேதனங்கள் | 3.5 | 3.7 | 3.7 | 3.8 | 3.8 | 3.8 |
| பொருட்கள் மற்றும் சேவைகள் | 1.2 | 1.3 | 1.1 | 1.1 | 1.1 | 1.1 |
| வட்டி | 9.0 | 8.9 | 6.8 | 6.2 | 6.1 | 5.9 |
| குறைநிரப்பல்கள் மற்றும் மாற்றல்கள் | 4.1 | 3.9 | 3.9 | 3.8 | 3.8 | 3.8 |
| **மூலதன மற்றும் தேறிய கடன்** | **2.6** | **4.0** | **4.1** | **4.1** | **4.2** | **4.2** |
| அதில் அரச முதலீடுகள் | 2.7 | 4.0 | 4.1 | 4.1 | 4.2 | 4.2 |
| **நடைமுறைகணக்கு பற்றாக்குறை (-) /மிகை (+)** | **(4.4)** | **(2.8)** | **(0.5)** | **0.1** | **0.4** | **0.6** |
| **ஆரம்ப பற்றாக்குறை (-) /மிகை (+)** | **2.2** | **2.3** | **2.3** | **2.3** | **2.4** | **2.4** |
| **வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை (-) /மிகை (+)** | **(6.8)** | **(6.7)** | **(4.5)** | **(4.0)** | **(3.7)** | **(3.5)** |

மூலம் : அரசிறை கொள்கைத் திணைக்களம், தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம், சர்வதேச நாணய நிதியம் (IMF), நிரல் அமைச்சுக்கள்

# பகுதி II

**வரவுசெலவுத்திட்ட, பொருளாதார மற்றும் நிதி நிலை அறிக்கை – 2025**

**2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 49 ஆம் பிரிவின் கீழ் கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும்பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் வெளியிடப்பட்டது**

இந்த அறிக்கையானது 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 49 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு ஆண்டும் பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட நாளில் நிதி அமைச்சரால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இது மொத்த உள்நாட்டு உற்பத்தி, நுகர்வோர் விலைகள், வேலைவாய்ப்பு, சென்மதி நிலுவை, வருமானம் மற்றும் செலவினம், அரசாங்க கடன், மேற்கூறிய மதிப்பீடுகளைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் அடிப்படை தொடர்பான மதிப்பீடுகளை உள்ளடக்கியதுடன் இவ்வறிக்கையில் அடங்கியுள்ள தகவல்கள், இயன்ற வரையில், அரசின் அனைத்துத் தீர்மானங்ளைகளையும் அரசிறை மற்றும் பொருளாதார நிலைமையின் மீது பொருள் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அனைத்து சூழ்நிலைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்கின்றன.

# அரசிறை அபிவிருத்திகள், திறைசேரி தொழிற்பாடுகள் மற்றும் வெளிநாட்டு நிதியிடல்

# 02

## 2.1 மேன்நோக்கு

அதிகரித்த அரசாங்க வருமானம் மற்றும் பொதுச் செலவினங்களின் விவேகமான முகாமைத்துவம் ஆகியவற்றிலிருந்து பயனடைந்து 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் அரசாங்கத்தின் நிதி நடவடிக்கைகள் மேம்பட்டன. வருமான மேம்பாட்டு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தியதன் மூலம் வரி வருமானம் கணிசமாக அதிகரித்த அதேசமயம் மூலதன செலவினங்கள் குறைவாக செயல்படுத்தப்பட்டதால் செலவினம் கட்டுப்படுத்தப்பட்டது. இந்த கவர்ச்சிகரமான முன்னேற்றமானது 2023 இன் முதல் பத்து மாதங்களில் ரூ.225.4 பில்லியனாக இருந்த ஆரம்ப மிகையிலிருந்து 2024 இன் இதே காலப்பகுதியில் ரூ.830.7 பில்லியனுக்கு ஆரம்ப மிகையை மேம்படுத்த உதவியுள்ளது. ஆரம்ப மிகையானது 2024 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.6 சதவீதத்திற்கும் அதிகமாக எட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன் இது சர்வதேச நாணய நிதியத்தின் (IMF-EFF) விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட 1.0 சதவீதத்திற்கும் மேலாகவுள்ளது. ஒட்டுமொத்த வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையானது 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் பதிவு செய்யப்பட்ட ரூபா 1,547.0 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 31.4 சதவீதத்தால் ரூபா 1,060.7 பில்லியனாக சுருங்கியுள்ளது. இதற்கு வருமான அதிகரிப்பு முக்கிய காரணமாகின்றது.

மானியங்கள் உட்பட மொத்த அரசாங்க வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் ரூபா 2,434.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 34.2 சதவீதத்தால் ரூபா 3,266.9 பில்லியனாக அதிகரித்து வருடாந்த மதிப்பீடான 4,127.0 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 79.2 சதவீதத்தை அடைந்துள்ளது. வரி வருமானம் 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் 35.6 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 3,000.2 பில்லியனாகவும், வரியல்லாத வருமானம் 20.3 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 255.5 பில்லியனாகவும் காணப்பட்டது.

தொடர்ச்சியான வரிக் கொள்கை மாற்றங்களால் வருமானம் அதிகரிப்பு உந்தப்பட்டது. தனிநபர் வருமான வரி கட்டமைப்பில் திருத்தங்கள், நிறுவன வருமான வரி விகிதத்தில் அதிகரிப்பு, துறை சார்ந்த நிறுவன வருமான வரிச்சலுகைகள் மற்றும் விலக்குகளை அகற்றுதல், கட்டாய முற்கூட்டிய தனிநபர் வருமான வரி மற்றும் நிறுத்தி வைத்தல் வரிகளை மீண்டும் அமல்படுத்துதல், பெறுமதி சேர் வரி விகிதங்களில் அதிகரிப்பு மற்றும் பெறுமதி சேர் வரி பதிவு வரம்புகளைக் குறைத்தல் மற்றும் மேம்பட்ட வரி நிர்வாக நடவடிக்கைகள் ஆகியவை இந்த கொள்கை மாற்றங்களில் அடங்கும்.

**அட்டவணை 2.1: அரசிறைத் தொழிற்பாடுகளின் சுருக்கம்**

*ரூபா.மில்லியன்*

| விபரம் | சன - ஒக் | |
|---|---|---|
| | 2023 | 2024(அ) |
| **வருமானமும் கொடைகளும்** | **2,434,032** | **3,266,944** |
| **வருமானம்** | **2,424,833** | **3,255,711** |
| வரி | 2,212,514 | 3,000,245 |
| வரி அல்லாத | 212,320 | 255,466 |
| மானியம் | 9,199 | 11,234 |
| **செலவினம்** | **3,981,050** | **4,327,692** |
| **நடைமுறை** | **3,532,249** | **3,796,046** |
| சம்பளங்கள் | 774,315 | 839,000 |
| வட்டிக் கொடப்பனவகள் | 1,772,387 | 1,891,451 |
| பிற | 985,547 | 1,065,595 |
| அரசாங்க முதவீடுகள் | 488,673 | 553,706 |
| பிற | -39,872 | -22,060 |
| **வருமான பற்றாக்குறை (-) / மிகை (+)** | **-1,107,416** | **-540,335** |
| **முதன்மை இருப்பு** | **225,369** | **830,704** |
| **மொத்த வரவுசெலவுதிட்ட பற்றாக்குறை (-)/ மிகை (+)** | **-1,547,018** | **-1,060,747** |
| **நிதியளிப்பு** | **1,547,018** | **1,060,747** |
| வெளிநாட்டு நிதியளிப்பு (தேறிய) | 69,209 | 274,462 |
| உள்நாட்டு நிதியளிப்பு (தேறிய) | 1,477,809 | 786,285 |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

*(அ) தற்காலிகமானது*

2024 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் வரி வருமான சேகரிப்பானது IMF-EFF திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை விஞ்சியுள்ளது. இதன்படி, 2024 மார்ச் மாத இறுதி, ஜூன் இறுதி மற்றும் செப்டம்பர் மாத இறுதியில் உள்ளவாறான வரி வருமான இலக்குகள் முறையே ரூபா 87 பில்லியன், ரூபா 209 பில்லியன் மற்றும் ரூபா 288 பில்லியன் இனால் விஞ்சப்பட்டன. இது முக்கியமாக இறக்குமதி கட்டுப்பாடுகளின் படிப்படியான தளர்வு, மேம்பட்ட வரி நிர்வாகம் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் மறுமலர்ச்சியின் சாதகமான தாக்கங்கள் காரணமாக பேரண்டப் பொருளாதார மாறிகளில் ஏற்பட்ட உறுதியான அபிவிருத்திகள் ஆகியவற்றிலிருந்து கிளைத்தெழுந்த இறக்குமதி அடிப்படையிலான வரிகளின் வருமானம், பெறுமதி சேர் வரி , உற்பத்தி தீர்வை (விசேட ஏற்பாடுகள்), மது வரி மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (SSCL) ஆகியவற்றிலிருந்து அதிகரித்த வருமானத்தால் உந்தப்பட்டது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (IRD), இலங்கை சுங்கம் மற்றும் மதுவரித் திணைக்களம் தொடர்பான முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை (KPI) அறிமுகப்படுத்துதல் மற்றும் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்தல், ஒழுங்குவிதிகள் மற்றும் செயல்முறைகளை மேம்படுத்துதல் மற்றும் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் வரி ஏய்ப்பு மற்றும் வரி தவிர்ப்பை அகற்றுதல் மற்றும் வரி இணக்கப்பாட்டை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு மூன்று முக்கிய வருமான சேகரிப்பு முகவர் நிறுவனங்களில் வரி நிர்வாக நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

தணிக்கை செயல்திறனை மேம்படுத்தவும், வரி கணக்கு தாக்கல் செய்வதை மேம்படுத்தவும், சேகரிக்கக்கூடிய வருமானத்தை சேகரிக்கவும், முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் பதிவை அதிகரிக்கவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. 18 வயதுக்குமேற்பட்ட அனைத்து தனிநபர்களுக்கும் வரி கோப்புகளைத் திறக்கும் கொள்கையின் தொடர்ச்சியுடன் வரி செலுத்தாதவர்களை வரி வலைக்கு கொண்டு வருவதன் மூலம் வரி அடிப்படை மற்றும் வரி இணக்கம் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் உயர் நிகர மதிப்புள்ள தனிநபர்களின் கோப்புகளைக் கையாள ஒரு தனிப் பிரிவு (HNWI) நிறுவப்படுவது சாத்தியமான வரி இணக்கமின்மையை கண்டறிய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் ரூபா 3,981.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் மொத்த அரசாங்க செலவினம் 8.7 சதவீதத்தால் ரூபா 4,327.7 பில்லியனாக அதிகரித்துள்ளது. மீண்டுவரும் செலவினம் 7.5 சதவீதத்தால் ரூபா 3,796.0 பில்லியனகா சிறிதளவு அதிகரித்த அதேவேளை, மூலதனச் செலவு மற்றும் தேறிய கடன்வழங்கல் 18.5 சதவீதத்தால் ரூபா 531.6 பில்லியனாக அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் வட்டிக் கொடுப்பனவுகள் 6.7 சதவீதத்தால் சிறிதளவு அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் பதிவு செய்யப்பட்ட 80.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் வட்டி கொடுப்பனவுகள் மட்டுமே அரசாங்க வரி வருவாயில் 63.0 சதவீதத்தை ஆட்கொண்டுள்ளன. இந்த முன்னேற்றம், வரி வருமானத்தின் 35.6 சதவீத அதிகரிப்பு மற்றும் இக்காலப்பகுதியில் செலவின முகாமைத்துவத்தின் ஒருங்கிணைந்த விளைவின் காரணமாகும்.

2024 ஒரு தேர்தல் ஆண்டாக இருந்தபோதிலும், விவேகமான அரசிறை முகாமைத்துவ நடவடிக்கைகள் காரணமாக முதன்மை செலவினம் ஒப்பீட்டளவில் கட்டுப்படுத்தப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களின் ரூபா 2,208.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் முதன்மைச் செலவினம் 10.3 சதவீதத்தால் ரூபா 2,436.2 பில்லியனாக மிதமாக அதிகரித்தது.

மீண்டுவரும் செலவினமானது 2023இன் முதல் பத்து மாதங்களின் ரூபா 3,532.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 இன் இதே காலப்பகுதியில் 7.5 சதவீதத்தால் ரூபா 3,796.0 பில்லியனாக சிறிதளவு அதிகரித்துள்ளது. வட்டிக் கொடுப்பனவுகள், சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள், மானியங்கள் மற்றும் மாற்றல்கள் மீதான அதிகரித்த செலவீனமே இதற்கு முக்கிய காரணமாகும். 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில், வட்டிக் கொடுப்பனவுகள் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 6.7 சதவீதத்தால் ரூபா 1,891.5 பில்லியனாக சிறிதளவு அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் மொத்த வட்டிச் செலவினத்தில் 94 சதவீதமாக இருந்த உள்நாட்டுக் கடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 5.5 சதவீதத்தால் ரூபா 1,776.0 பில்லியனுக்கு சிறிதளவு அதிகரித்த அதேவேளை, 2024 இன் முதல் பத்து மாதங்களில் வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டிக் கொடுப்பனவுகள் 29.6 சதவீதத்தால் ரூபா 115.4 பில்லியனாக அதிகரித்துக் காணப்பட்டது. பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான செலவு 12.0 சதவீதத்தினால் 255.9 பில்லியன் ரூபாவாக அதிகரித்து காணப்படுகின்றது. 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் மானியங்கள் மற்றும் மாற்றல்களுக்கான செலவு 6.9 சதவீதத்தால் ரூபா 809.7 பில்லியனாக அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாக இருந்ததால், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புக்கான அதிக செலவினங்களால்

உந்தப்பட்டு, 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் அரசாங்க ஊழியர்களின் சம்பளம் மற்றும் சம்பளங்களுக்கான செலவு 8.4 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 839.0 பில்லியனாக காணப்பட்டது.

அரச முதலீடு 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களுடன் ஒப்பிடுகையில் 2024 இன் இதே காலப்பகுதியில் 13.3 சதவீதத்தால் ரூபா 553.7 பில்லியனாக மிதமாக அதிகரித்துள்ளது. இருப்பினும், பொது முதலீடுகள் ஆண்டு மதிப்பீட்டில் 44.0 சதவீதத்தை மட்டுமே அடைந்துள்ளன. இதற்கு முக்கியமாக வெளிநாட்டு திட்ட நிதியுதவியில் பற்றாக்குறை காரணமாகும்.

**அட்டவணை 2.2 : 2024 முதல் பத்து மாதங்களுக்கான வருடாந்த மதிப்பீட்டிற்கெதிரான உண்மையான வருமானங்கள் மற்றும் செலவினங்கள்**

*ரூபா.பில்லியன்*

| விபரம் | வருடாந்த மதிப்பிடப்பட்ட (அ) | சன - ஒக் 2024 (ஆ) | உண்மையான அடைவு (%) |
|---|---|---|---|
| **மொத்த வருமானம்** | **4,107.0** | **3,255.7** | **79.3** |
| **வரி வருமானம்** | **3,820.0** | **3,000.2** | **78.5** |
| **உள்நாட்டு இறைவரித் திணைக்களம்** | **2,015.0** | **1,556.1** | **77.2** |
| வருமானம் மற்றும் இலாபம் மீதான வரி | 1,080.0 | 815.6 | 75.5 |
| பெறுமதி சேர் வரி - உள்நாட்டு (தேறிய) | 740.0 | 585.5 | 79.1 |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (உள்நாட்டு) | 195.0 | 154.8 | 79.4 |
| **சுங்கத் திணைக்களம்** | **1,533.0** | **1,236.2** | **80.6** |
| பெறுமதி சேர் வரி - இறக்குமதிகள் (தேறிய) | 660.0 | 481.9 | 73.0 |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (உள்நாட்டு) | 55.0 | 49.2 | 89.5 |
| துறைமுக விமானநிலைய அபிவிருத்தி அறவீடு | 175.0 | 143.8 | 82.2 |
| செஸ் அறவீடு | 60.0 | 66.8 | 111.4 |
| விசேட வியாபாரப் பண்ட அறவீடு | 95.0 | 86.4 | 91.0 |
| இறக்குமதித் தீர்வை | 175.0 | 89.8 | 51.3 |
| **உற்பத்தி விசேட ஏற்பாடுகள்** | | | |
| சிகரெட்டுகள் | 143.0 | 88.1 | 61.6 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 135.0 | 176.1 | 130.5 |
| மோட்டார் வாகன வரிகள் மற்றும் ஏனையவை | 35.0 | 54.0 | 154.2 |
| **மதுவரித் திணைக்களம்** | **232.0** | **168.6** | **72.7** |
| மதுபானம் / புகையிலை | 232.0 | 168.6 | 72.7 |
| **ஏனையவை** | **40.0** | **39.4** | **98.5** |
| தொலைதொடர்பு அறவீடு | 18.5 | 13.6 | 73.3 |
| உரிமப் பத்திர வரி மற்றும் பிற | 21.5 | 25.8 | 120.1 |
| **வரி அல்லாத வருமானம்** | **287.0** | **255.5** | **89.0** |
| **மொத்த செலவினம்** | **6,527.8** | **4,327.7** | **66.3** |
| **நடைமுறைச் செலவினம்** | **5,277.0** | **3,796.0** | **71.9** |
| சம்பளங்களும் படிகளும் | 1,126.9 | 839.0 | 74.5 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 2,651.0 | 1,891.5 | 71.3 |
| ஓய்வூதியக் கொடுப்பனவுகள் | 402.2 | 323.8 | 80.5 |
| அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களுக்கான மாற்றல்கள் | 126.3 | 85.9 | 68.0 |
| ஏனையவை | 970.6 | 656.0 | 67.6 |
| **மூலதன செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | **1,250.8** | **531.6** | **42.5** |

*மூலங்கள் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம் மற்றும் வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்*

*(அ) ரூபா 450 பில்லியன் வங்கிகளுக்கான மீள்மூலதனமாக்கல் நீங்கலாக*

*(ஆ) தற்காலிகமானது*

*(இ) தேசத்தை கட்டியெழுப்புவதற்கான வரி உள்ளடங்களாக*

2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களின் ரூபா 1,547.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஒட்டுமொத்த வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை 31.4 சதவீதத்தால் ரூபா 1,060.7 பில்லியனாக சுருங்கியது. இதற்கு முக்கியமாக மேம்பட்ட வரி நிர்வாகம் மற்றும் இணக்கம் காரணமாக மேம்பட்ட வருமானம் சேகரிப்பு, வருமானம் நடவடிக்கைகளின் முழு தாக்கத்தை உணர்தல் மற்றும் செலவின சீரமைப்புக்கான தொடர்ச்சியான முயற்சிகள் காரணமாக குறைக்கப்பட்ட செலவினம், உள்நாட்டு வட்டி விகிதங்கள் குறைப்பு காரணமாக வட்டி கொடுப்பனவுகளின் மெதுவான வளர்ச்சி மற்றும் சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்ட தேர்தல் தொடர்பான செலவினங்கள் காரணமாகும்.

### 2.2 அரச வருமானம்

மானியங்கள் நீங்கலாக மொத்த அரசாங்க வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களின் ரூபா 2,424.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 34.3 சதவீதத்தால் கணிசமாக ரூபா 3,255.7 பில்லியனாக அதிகரித்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டிற்கான வருமான மதிப்பீட்டில் 79.3 சதவீத அடைவாகும். வரி வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 2,212.5 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 35.6 சதவீதத்தினால் ரூபா 3,000.2 பில்லியனாக அதிகரித்தமையே இந்த வருமான அதிகரிப்புக்கு முக்கிய காரணமாகும். வரி வருமான சேகரிப்பு மொத்த வருமானத்தில் 92.2 சதவீதத்திற்கு பங்களிப்பு செய்ததுடன் இது 2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டில் 78.5 சதவீத அடைவாகும்

வரி வருமான அதிகரிப்புக்கு வழிவகுத்தவை:

1. 2023 ஜனவரி 1 ஆம் திகதி முதல் தனிநபர் வருமான வரி (PIT) மற்றும் நிறுவன வருமான வரி (CIT), மேம்பட்ட தனிநபர் வருமான வரி (APIT) மற்றும் நிறுத்தி வைத்தல் வரி (WHT) தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட்ட வரிக் கொள்கை மாற்றங்களின் முழு தாக்கத்தின் காரணமாக 9.5 சதவீதம் அல்லது ரூபா 70.8 பில்லியன் வருமான வரி, அரச மற்றும் முறைசாரா தனியார் துறையில் அதிகரித்த ஊதியங்களின் தாக்கம், அதிகரித்த பொருளாதார நடவடிக்கைகளின் நேர்மறையான தாக்கம் மற்றும் தனிநபர் வருமான வரி மற்றும் நிறுவன வருமான வரி மீது பொருளாதார வளர்ச்சிக்கு திரும்புதல் மற்றும் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட வரி நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் கொள்கை முடிவுகளை வலுப்படுத்துதல்;

2. பெறுமதி சேர் வரி 86.8 வீதத்தால் அல்லது ரூபா 495.9 பில்லியனால் அதிகரித்தல். இதற்கு பெறுமதி சேர் வரி வீதத்தை ஆண்டொன்றுக்கு ரூபா 80 மில்லியனிலிருந்து 60 மில்லியன் ரூபா வரை குறைத்தமை, பெரும்பான்மையான பெறுமதி சேர் வரி விலக்குகளை நீக்கியமை, பெறுமதி சேர் வரி வீதத்தை 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக 2024 ஜனவரி 1 ஆம் திகதி முதல் அமுலுக்கு கொண்டுவருதல் மற்றும் இறக்குமதிகளின் அளவு அதிகரிப்பு 2024 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் 10.7 வீதத்தால் அதிகரித்தமை காரணமாகும்.

3. 2023 ஜூன் 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பெற்றோல் மற்றும் டீசல் மீதான உற்பத்தி தீர்வை வீதங்களை லீற்றருக்கு 25 ரூபாவினால் அதிகரித்ததன் கூட்டு விளைவினாலும், 2024 ஜனவரி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பெற்றோல் மீதான உற்பத்தி தீர்வை 5 ரூபாவினாலும் டீசல் மீதான உற்பத்தி தீர்வை 6 ரூபாவினாலும் உந்தப்பட்ட பெற்றோலியம் மீதான உற்பத்தி தீர்வை 65.6 சதவீதம் அல்லது ரூபா 69.8 பில்லியன்.

**வரைபு 2.1 : மொத்த வருமானத்தின் வகுதிகள் (2024 சனவரி - ஒக்தோபர்)**




*மூலம்: அறசிறைக் கொள்கைத் திணைக்களம்*

4. வருடாந்த பணவீக்க சீராக்கத்தினை அறிமுகப்படுத்துவதற்கமைய 2024 ஜனவரி 1 ஆம் திகதி அனைத்து வகையான மதுபானங்கள் மீதான மது வரிகளின் வீதங்கள் 14 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டமையால் உந்தப்பட்ட மதுபானங்கள் மீதான மது வரி 20.8 சதவீதம் அல்லது 28.8 பில்லியன் ரூபாவால் அதிகரித்தது;

5. சீனிக்கான வரி வீதங்கள் ஒரு கிலோவுக்கு 50 ரூபாவாகவும், உருளைக்கிழங்கு ஒரு கிலோகிராம் 60 ரூபாவாகவும் உயர்த்தப்பட்டமை மற்றும் பிரதான பண்டங்களின் இறக்குமதியின் அளவு அதிகரிப்பு காரணமாக SCL 97.7 சதவீதம் அல்லது 42.7 பில்லியன் ரூபாவால் அதிகரித்தது;

6. இறக்குமதி மற்றும் உள்நாட்டு நடவடிக்கைகள் இரண்டிலிருந்தும் வருமானம் அதிகரித்ததன் காரணமாக SSCL 14.7 சதவீதம் அல்லது ரூபா 26.2 பில்லியனால் அதிகரித்துள்ளதுடன் பதிவு வரம்பு 2024 ஜனவரி 01 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஆண்டுக்கு ரூபா 120 மில்லியனிலிருந்து ரூபா 60 மில்லியனாக குறைக்கப்பட்டுள்ளது;

7. 2023 மார்ச் 28 முதல் நடைமுறைக்கு வரும் சுங்க இறக்குமதித் தீர்வை வீதங்கள் 0:10:15

சதவீதத்திலிருந்து 0:15:20 சதவீதமாக திருத்தப்பட்டதால் சுங்க இறக்குமதித் தீர்வை 16.7 சதவீதம் அல்லது 12.8 பில்லியன்; மற்றும்

8. இறக்குமதியின் அதிகரிப்பின் காரணமாக செஸ் வரி 47.9 சதவீதம் அல்லது ரூபா 21.7 பில்லியனால் அதிகரித்துள்ளது.

2024 இன் முதல் பத்து மாதங்களில் வரியல்லாத வருமானத்தின் 20.3 சதவீதத்தினால் அல்லது ரூபா 43.1 பில்லியன் அதிகரிப்பும் வருவாயின் அதிகரிப்பில் சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. வட்டி வருமானம், அபராதம், கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் மற்றும் சொத்து வருமானம் ஆகியவற்றிலிருந்து வருமானம் அதிகரித்ததே இதற்கு முக்கிய காரணமாகும்.

**அட்டவணை 2.3 : அரசாங்க வருமான செயலாற்றுகையின் சுருக்கம்**

*ரூபா.மில்லியன்*

| விபரம் | சன - ஒக் | | மாற்றம் (%) |
|---|---|---|---|
| | 2023 | 2024 (அ) | |
| **வரி வருமானம்** | **2,212,514** | **3,000,245** | **35.6** |
| **வருமான வரி** | **744,749** | **815,591** | **9.5** |
| **உள்நாட்டு நுகர்வு அடிப்படையிலான வரி** | **772,456** | **1,003,616** | **29.9** |
| பெறுமதிசேர் வரி | 394,674 | 585,524 | 48.4 |
| உற்பத்தி வரி | 241,624 | 263,135 | 8.9 |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு | 136,112 | 154,841 | 13.8 |
| **இறக்குமதி அடிப்படையிலான வரி** | **661,723** | **1,141,646** | **72.5** |
| இறக்குமதித் தீர்வை | 76,965 | 89,813 | 16.7 |
| பெறுமதிசேர் வரி | 176,847 | 481,864 | 172.5 |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு | 41,777 | 49,235 | 17.9 |
| துறைமுக விமானநிலைய அபிவிருத்தி அறவீடு | 142,928 | 143,765 | 0.6 |
| விசேட வியாபாரப் பண்ட அறவீடு | 43,728 | 86,438 | 97.7 |
| உற்பத்தி வரி | 134,116 | 223,681 | 66.8 |
| செஸ் | 45,190 | 66,845 | 47.9 |
| **உரிமப் பத்திர வரிகள் மற்றும் பிற** | **33,585** | **39,392** | **17.3** |
| **வரி அல்லாத வருமானம்** | **212,320** | **255,466** | **20.3** |
| **மொத்த வருமானம்** | **2,424,833** | **3,255,711** | **34.3** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

*(அ) தற்காலிகமானது*

*(ஆ) தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி உள்ளடங்களாக*

**வரைபு 2.2 : மூலங்கள் அடிப்படையில் வரி வருமானம் (%) (2024 சனவரி - ஒக்தோபர்)**




*மூலம்: அறசிறைக் கொள்கைத் திணைக்களம்*

### வருமான வரி

2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் பதிவு செய்யப்பட்ட ரூபா 744.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் வருமான வரிகளிலிருந்து கிடைத்த வருமானம் 9.5 சதவீதத்தால் ரூபா 815.6 பில்லியனாக அதிகரித்துள்ளதுடன், இது வருடாந்த மதிப்பீட்டில் 75.5 சதவீதமாகும்.

முற்கூட்டிய தனிநபர் வருமான வரி வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் ரூபா 119.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 இன் இதே காலப்பகுதியில் ரூபா 164.5 பில்லியனாக 38.1 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டியது. வருமான வரி விகித திருத்தங்களே இதற்குக் காரணமாகும். 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் முற்கூட்டிய தனிநபர் வருமான வரி வருமான சேகரிப்பு ஆண்டு மதிப்பீட்டான ரூபா 160.0 பில்லியனை விஞ்சியுள்ளது.

தனிநபர் வருமான வரி வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 69.0 சதவீதம் அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில், நிறுவன வரி வருமானம் ரூபா 464.8 பில்லியனிலிருந்து ரூபா 452 பில்லியனாக சற்று குறைந்து, எதிர்பார்ப்புகளுக்கு கீழே காணப்படுகின்றது.

நிறுத்தி வைத்தல் வரி வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் ரூபா 124.0 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 10.4 சதவீதத்தால் ரூபா 136.9 பில்லியனாக அதிகரித்துள்ளதுடன். இது 160.0 பில்லியன் ரூபா வருடாந்த மதிப்பீட்டில் 85.5 சதவீத அடைவாகும்.

**அட்டவணை 2.4 : வருமான வரியின் செயலாற்றுகை**

*ரூபா.மில்லியன்*

| வரி அடிப்படை | சன - ஒக் 2023 | சன - ஒக் 2024 (அ) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| கூட்டுறவு மற்றும் கூட்டுறவற்ற | 501,487 | 513,995 | 2.5 |
| உழைக்கும் போது செலுத்தும் வரி | 119,090 | 164,480 | 38.1 |
| வட்டி வருமானத்திற்கான வரி | 123,952 | 136,861 | 10.4 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 220 | 255 | 15.9 |
| **மொத்தம்** | **744,749** | **815,591** | **9.5** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

*(அ) தற்காலிகமானது*

### பெறுமதி சேர் வரி (VAT)

2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் ரூபா 571.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பெறுமதி சேர் வரியிலிருந்தான அரசாங்க வருமானம் 86.8 சதவீதத்தினால் ரூபா 1,067.4 பில்லியனாக கணிசமாக அதிகரித்துள்ளதுடன், இது 2024 ஆம் ஆண்டிற்கான பெறுமதி சேர் வரி வருமானத்தின் மதிப்பீட்டின் 76.2 சதவீத அடைவுமட்டமாகும்.

2024 இன் முதல் பத்து மாத காலப்பகுதியில் உள்நாட்டு மற்றும் இறக்குமதி செயற்பாடுகளிலிருந்தான பெறுமதிசேர் வரி வருமானம் அதிகரித்துள்ளது. உள்நாட்டு நடவடிக்கைகள் மீதான பெறுமதி சேர் வரி 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் ரூபா 394.7 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 48.4 சதவீதத்தால் ரூபா 585.5 பில்லியனுக்கு அதிகரித்த அதேவேளை, இறக்குமதிகளிலிருந்து பெறப்பட்ட பெறுமதிசேர் வரி வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் ரூபா 176.8 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 172.5 சதவீதத்தால் ரூபா 481.9 பில்லியனாக குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது.

பெறுமதிசேர் வரி வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு பெறுமதிசேர் வரி வீதம் 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக அதிகரித்தமை, பெறுமதி சேர் வரி பதிவு எல்லை ஆண்டொன்றுக்கு 80 மில்லியனிலிருந்து 60 மில்லியனாக குறைக்கப்பட்டமை மற்றும் 2024 ஜனவரி 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பெறுமதி சேர் வரி விலக்குகளின் பெரும்பான்மையை நீக்கியமை ஆகியனவாகும். பெரும்பாலான இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதன் தாக்கம் மற்றும் அதைத் தொடர்ந்து இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு ஆகியவையும் பெறுமதி சேர் வரி வருமான அதிகரிப்புக்கு பங்களித்துள்ளன. இந்த வருமான நடவடிக்கைகளின் விளைவாக, 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களின் ஒட்டுமொத்த வருமான செயல்திறனில் பெறுமதி சேர் வரி வருமானம் 32.8 சதவீதத்திற்கு பங்களித்துள்ளது.

**அட்டவணை 2.5 : பெறுமதிசேர் வரியின் செயலாற்றுகை**

*ரூபா.மில்லியன்*

| வரி அடிப்படை | சன - ஒக் 2023 | சன - ஒக் 2024 (அ) | வளர்ச்சி (% ) |
|---|---|---|---|
| உள்நாட்டு | 394,674 | 585,524 | 48.4 |
| இறக்குமதிகள் | 176,847 | 481,864 | 172.5 |
| **தேறிய வருமானம்** | **571,521** | **1,067,387** | **86.8** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

*(அ) தற்காலிகமானது*

### உற்பத்தி தீர்வை மற்றும் மதுவரி

2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் உற்பத்தி தீர்வை (விசேட ஏற்பாடுகள்) மற்றும் மதுவரியிலிருந்து மொத்த வருமானம் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 375.7 பில்லியனிலிருந்து 29.6 சதவீதத்தால் ரூபா 486.8 பில்லியனாக அதிகரித்துள்ளது. இதற்கு முக்கியமாக சிகரெட்டிலிருந்தான வருமானம் சிறிதளவு குறைந்தாலும் மதுபானம், பெற்றோலிய பொருட்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் ஆகியவற்றிலிருந்தான வருமானம் அதிகரித்தமை காரணமாகும். இது வருடாந்த மதிப்பீட்டின் 89.3 சதவீத அடைவு மட்டமாகும். 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில்

மொத்த வருமானத்தில் உற்பத்தி தீர்வை (விசேட ஏற்பாடுகள்) மற்றும் மதுவரியிலிருந்து கிடைத்த வருமானம் 15.0 சதவீதமாகும்.

2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான உற்பத்தி தீர்வை 65.6 சதவீதத்தால் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 106.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில், ரூபா 176.1 பில்லியனாக கணிசமாக அதிகரித்துள்ளது. இதற்கு முக்கியமாக எரிபொருள் மீதான உற்பத்தி தீர்வையில் ஏற்பட்ட மாற்றங்களின் நிகர விளைவின் காரணமாகும். இதில் ஜூன் 1 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ரூபா 25 அதிகரிப்பும் அடங்கும். 2024 ஜனவரி 1 முதல் டீசலுக்கு லீற்றருக்கு ரூ .6 மற்றும் பெட்ரோலுக்கு ரூ .5 குறைக்கப்பட்டுள்ளதும் அடங்கும். மேலும், எரிபொருள் வரிசை முறையை நீக்கியதால் தூண்டப்பட்ட எரிபொருள் இறக்குமதியின் அதிகரிப்பு மற்றும் 2024 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் பொருளாதார வளர்ச்சியால் ஆதரிக்கப்பட்ட அதிகரித்த கேள்வி ஆகியவையும் இந்த கணிசமான வருமானம் அதிகரிப்புக்கு பங்களித்தன.

2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் 99.0 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் சிகரெட் மீதான உற்பத்தி தீர்வை 10.1 சதவீதத்தால் ரூபா 89.0 பில்லியனாக வீழ்ச்சியடைந்துள்ளதுடன், இதற்கு முதன்மையான காரணமாக 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் சிகரெட் விற்பனை 2023 ஆம் ஆண்டில் 1,563.0 மில்லியன் குச்சிகளிலிருந்து 18.7 சதவீதமாக 1,992.0 மில்லியன் குச்சிகளாக குறைவடைந்துள்ளது. இத்தகைய சரிவிற்கு முக்கியமாக 2024 ஜூலை 1 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சிகரெட்டுகள் மீதான உற்பத்தி தீர்வை 20 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டதும், அதைத் தொடர்ந்து 2024 ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு வரும் அரசாங்கத்தின் பணவீக்கம்-சீராக்கப்பட்ட குறியீட்டுக் கொள்கையின் கீழ் மேலும் 14 சதவீதம் மேலும் திருத்தம் செய்யப்பட்டதும் காரணமாகும். மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தி தீர்வையும் 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் 27.8 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 71.2 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 47.5 பில்லியனாக அதிகரித்துள்ளது.

2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் 138.8 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் மதுபானம் மீதான மது வரி வருமானம் 20.8 சதவீதத்தால் அதிகரித்து 167.7 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது. வருமானம் அதிகரித்த போதிலும், மதுபானங்கள் மீதான மது வரி மொத்த வருமானத்தில் 34.4 சதவீதமாக பங்களிப்பை பதிவு செய்துள்ளது. மதுவரிக்கான பணவீக்கக் குறியீட்டுக் கொள்கைக்கு அமைவாக 2024 ஜனவரி 01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மதுபானங்களுக்கான மது வரிகள் 14.0 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டன. 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் மதுபானம் மீதான வரி வருமானம் 2024 ஆம் ஆண்டிற்கான ஆண்டு மதிப்பீட்டில் 72.9 சதவீதமாகும். 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் மது உற்பத்தியும் 9.5 சதவீதம் குறைந்து 27.2 மில்லியன் லீற்றராக இருந்தது, இது 2023 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 28.2 மில்லியன் லீற்றராக இருந்தது. கடின மதுபான உற்பத்தி 8.9 சதவீதம் குறைந்து 15.5 மில்லியன் லீற்றராகவும், பீர் உற்பத்தி 3.6 சதவீதம் குறைந்து 11.5 மில்லியன் லீற்றராகவும் இருந்தது. பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் மேலாண்மை அமைப்பு 2022 ஜனவரி 03 முதல் உரிமம் பெற்ற உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களால் முழுமையாக செயல்படுத்தப்பட்ட போதிலும், நாட்டின் பல பகுதிகளில் போலி / போலி ஸ்டிக்கர்கள் மதிப்பிடப்பட்ட வருவாயை அழிக்கும் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

**அட்டவணை 2.6 : உற்பத்தி வரியின் செயலாற்றுகை**

*ரூபா.மில்லியன்*

| வரி அடிப்படை | சன - ஒக் 2023 | சன - ஒக் 2024 (அ) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| மதுபானம் | 138,836 | 167,681 | 20.8 |
| சிகரெட் மற்றும் புகையிலை | 99,042 | 89,040 | -10.1 |
| மோட்டார் வாகனங்கள் | 27,778 | 47,542 | 71.2 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 106,338 | 176,139 | 65.6 |
| ஏனையவை | 3,746 | 6,414 | 71.2 |
| **மொத்தம்** | **375,739** | **486,816** | **29.6** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

*(அ) தற்காலிகமானது*

**வரைபு 2.3 : உற்பத்தி வரியின் செயலாற்றுகை (2024 சனவரி - ஒக்தோபர்)**




*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

## சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (SSCL)

2022 அக்டோபர் 01 முதல் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களிடமிருந்து கடப்பாடுடைய வருமானத்தில் SSCL 2.5 சதவீத விகிதத்தில் வசூலிக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு ரூபா 120 மில்லியனாக இருந்த SSCL புரள்வு வரம்பு 2024 ஜனவரி 01 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ரூபா 60 மில்லியனாக குறைக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் 177.9 பில்லியன் ரூபாயுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் SSCL நிறுவனத்தின் வருமானம் 14.7 சதவீதம் அதிகரித்து 204.1 பில்லியன்

ரூபாயாக அதிகரித்துள்ளதுடன், இது 2024 ஆம் ஆண்டிற்கான SSCL வருமான மதிப்பீட்டில் 81.6 சதவீத அடைவுமட்டமாகும்.

### தொலைத்தொடர்பாடல் விதிப்பனவு (TL)

2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் ரூபா 15.0 பில்லியனாக இருந்த தொலைத்தொடர்பாடல் விதிப்பனவு வருமானம் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 9.8 சதவீதத்தால் ரூபா 13.6 பில்லியனாக சிறிதளவு குறைந்துள்ளது.

### சுங்க இறக்குமதித் தீர்வை (CID)

2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் பதிவு செய்யப்பட்ட 77.0 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் CID இலிருந்து பெறப்பட்ட வருமானம் 16.7 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 89.8 பில்லியனாக அதிகரித்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட பெரும்பாலான பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதே இந்த அதிகரிப்புக்கு முக்கிய காரணமாகும். காப்பு வரிகளை படிப்படியாக நீக்குவதற்கு ஏற்பாடு செய்யும் வகையில், 2023 மார்ச் 29 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் CID வீதங்களை 0 சதவீதம் மற்றும் 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகவும், 15 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாகவும் உயர்த்தியமை CID யின் வருமானம் அதிகரிப்புக்கு சாதகமாக பங்களித்தது.

### விசேட வியாபாரப் பண்ட அறவீடு (SCL)

2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் பதிவு செய்யப்பட்ட 43.7 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் SCL வருமான சேகரிப்பு 97.7 சதவீதத்தால் கணிசமாக அதிகரித்து ரூபா 86.4 பில்லியனாக அதிகரித்துள்ளது. பிரதான பொருட்களின் இறக்குமதியின் அளவு அதிகரித்ததே இதற்கு முக்கிய காரணமாகும்.

### துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு (PAL)

2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் பதிவு செய்யப்பட்ட ரூபா 142.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் PAL மூலம் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் 0.6 சதவீதத்தால் ரூபா 143.8 பில்லியனாக அதிகரித்துள்ளதுடன். முக்கிய பொருட்களின் இறக்குமதியின் அளவு அதிகரித்ததே இதற்கு முக்கிய காரணமாகும். வர்த்தகம் மற்றும் முதலீட்டை மேம்படுத்தும் அதேவேளையில் பொருளாதார போட்டித்தன்மையை ஆதரிப்பதற்காக காப்பு வரிகளை சீராக்கம் செய்வதற்காக 2023 வரவு செலவுத் திட்டத்திற்கு இணங்க 05 ஆண்டுகளுக்குள் PAL ஐ படிப்படியாக அகற்றும் நோக்கத்துடன் 2023 ஏப்ரல் 04 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மொத்த PAL பொறுப்புள்ள பொருட்களில் 20 சதவீதம் அல்லது 1,631 பொருட்களின் மீது PAL நீக்கப்பட்டதன் காரணமாக PAL இலிருந்து சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை வெளிப்படுத்த முடியவில்லை.

### பொருட்கள் ஏற்றுமதி மானியத் திட்டம் (CESS)

செஸ் வரியிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானமானது 2023 இன் முதல் பத்து மாதங்களில் ரூபா 45.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 இன் இதே காலப்பகுதியில் 47.9 சதவீதத்தால் ரூபா 66.8 பில்லியனாக குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது. இறக்குமதி செய்யப்படுகின்ற பெரும்பாலான பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமை மற்றும் இறக்குமதி செய்யப்படும் சில பொருட்களின் இறக்குமதிக்கான செஸ் வரி வீதங்களின் 2024 அதிகரிப்பு ஆகியன இந்த அதிகரிப்புக்கு முக்கிய காரணமாகும்.

**அட்டவணை 2.7 : மோட்டார் வாகன இறக்குமதி மற்றும் புதிய வாகனப் பதிவு**

*அலகு : எண்*

| விபரம் | இறக்குமதிகள் சன - ஒக் | | | | புதிய பதிவுகள் சன - ஒக் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2023 | 2024 | மாற்றம் | % | 2023 | 2024 | மாற்றம் | % |
| மோட்டார் கார்கள் | 848 | 1,182 | 334 | 39 | 1,505 | 1,405 | -100 | -7 |
| பயணிகள் வேன்கள் மற்றும் பேருந்துகள் | 385 | 33 | -352 | -91 | 598 | 120 | -478 | -80 |
| முச்சக்கர வண்டிகள் | - | 5 | 5 | - | 50 | 70 | 20 | 40 |
| மோட்டார் சைக்கிள்கள் | 4,806 | 15,271 | 10,465 | 218 | 14,698 | 49,463 | 34,765 | 237 |
| பொருட்கள் போக்குவரத்து வாகனங்கள் (அ) | 117 | 309 | 192 | 164 | 384 | 1,006 | 622 | 162 |
| நில வாகனங்கள் (ஆ) | 2,324 | 4,190 | 1,866 | 80 | 3,024 | 4,175 | 1,151 | 38 |
| ஏனையவை (இ) | 18,362 | 3+1,692 | 13,330 | 73 | 407 | 855 | 448 | 110 |
| **மொத்தம்** | **26,842** | **52,682** | **25,840** | **96** | **20,666** | **57,094** | **36,428** | **176** |

*மூலம் : இலங்கைச் சுங்கம் மற்றும் வாகனப் போக்குவரத்து திணைக்களம்*

*(அ) லொறிகள், ஏனைய பொருட்கள் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் விசேட நோக்க வாகனங்கள்*

*(ஆ) ட்ராக்டர், கை ட்ராக்டர்கள் மற்றம் ஏனைய நில வாகனங்கள்*

*(இ) ஒற்றை வண்டி, இருநோக்க வாகனங்கள், குவாட்ரிசைக்கிள் மற்றும் மோட்டார் வீடுகள்*

**அட்டவணை 2.8 : சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் இறக்குமதி/ ஏற்றுமதிப் உற்பத்திப் பொருட்கள் மற்றும் பெறுமதி**

| சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | சன - நவ 2024 | | |
|---|---|---|---|
| | தீர்வை சலுகை வழங்கப்படும் பொருட்களின் எண்ணிக்கை (HS 8 Digit) | இறக்குமதி பெறுமதி (CIF/ ரூபா.மில்லியன்) | ஏற்றுமதி பெறுமதி (FOB/ரூபா. மில்லியன்) |
| ஆசியா - பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA) | 808 | 6,401 | 57,999 |
| இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA) | 5,329 | 94,169 | 135,508 |
| பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA) | 6,200 | 6,653 | 12,877 |
| தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA) | 5,932 | 3,753 | 46,465 |
| சிங்கப்பூர் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SSFTA) | 4,334 | - | 40 |
| **மொத்தம்** | | **110,976** | **252,889** |

*மூலம் : இலங்கை சுங்கம் மற்றும் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்*

**அட்டவணை 2.9 : சர்வதேச வர்த்தகத்திலிருந்தான செஸ் வரி வருமானம்**

*ரூபா.மில்லியன்*

| விடயம் | சன - ஒக் | |
|---|---|---|
| | 2023 | 2024 (அ) |
| **ஏற்றுமதிகள் மீதான செஸ்** | **1,901** | **1,667** |
| தேயிலை - தேயிலை (ஏற்றுமதி வரி மற்றும் கட்டுப்பாடு) சட்டம், இலங்கை தேயிலை சபை சட்டத்தின் கீழ் | **431** | **394** |
| இறப்பர் - இறப்பர் மீள்நடுகை மானிய சட்டத்தின் கீழ் | 5 | 12 |
| தேங்காய் - தெங்கு அபிவிருத்தி சட்டத்தின் கீழ் | 160 | 175 |
| ஏற்றுமதி அபிவிருத்தி சபை செஸ் - இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டம் | 1,305 | 1,087 |
| **இறக்குமதிகள் மீதான செஸ் -** இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழ் | 43,289 | 65,177 |
| **மொத்தம்** | **45,190** | **66,845** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

*(அ) தற்காலிகமானது*

## வரி அல்லாத வருமானம்

2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களின் ரூபா 212.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 இன் இதே காலப்பகுதியில் வரியல்லாத வருமானம் 20.3 சதவீதத்தால் ரூபா 255.5 பில்லியனாக கணிசமாக அதிகரித்துள்ளது. மொத்த வருவாயில் வரி அல்லாத வருமானம் 7.8 சதவீதமாகபங்களித்தது.அபராதம்,கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகள், வட்டி வருமானம் மற்றும் இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே இதற்கு முக்கிய காரணமாகும். இதன்படி, மொத்த வரியல்லாத வருமானத்தில் 48.5 சதவீதத்திற்கு பங்களிப்பு செய்த அபராதம், கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகளிலிருந்து கிடைக்கும் வருமானம் , 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் ரூபா 97.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 இன் இதே காலப்பகுதியில் ரூ.124.0 பில்லியனுக்கு 27.4 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம் மற்றும் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களங்களின் கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் உயர்த்தப்பட்டமையே இதற்கு காரணமாகும். 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் ரூபா 18.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் வட்டி வருமானம் 141.1 சதவீதத்தால் ரூபா 43.5 பில்லியனாக கணிசமாக அதிகரித்துள்ளது. சமூக பாதுகாப்பு பங்களிப்புகளிலிருந்து கிடைக்கும் வருமானமும் 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் 29.6 பில்லியன் ரூபாயுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 19.9 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 35.5 பில்லியனாக அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் பங்கிலாபங்களிலிருந்து பெறப்பட்ட வரியல்லாத வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் ரூபா 36.2 பில்லியனிலிருந்து 2024 இன் இதே காலப்பகுதியில் ரூபா 30.5 பில்லியனுக்கு 15.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. வாடகையிலிருந்தான வரியல்லாத வருமானமும் 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் ரூபா 5.0 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 10.3 சதவீதத்தால் ரூபா 4.5 பில்லியனாக வீழ்ச்சியடைந்துள்ளது. வரியல்லாத வருமானத்தின் மதிப்பீடு ரூபா 287.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் 89.0 சதவீத அடைவு காணப்பட்டது.

**அட்டவணை 2.10 : அரசாங்க வருமானத்தின் மாறுபாட்டிற்கான பகுப்பாய்வு**

| உருப்படி | 2023 ஜனவரி - அக்டோபர் | 2024 (ஆண்டு மதிப்பீடு) | 2024 ஜனவரி- அக்டோபர் (a) | மாறுபாட்டிற்கான முக்கிய காரணங்கள் |
|---|---|---|---|---|
| | | *ரூபா பில்லியன்* | | |
| வருமான வரி | 744.7 | 1,080.0 | 815.6 | 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் வருமான வரியிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் முந்தைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 9.5 சதவீதத்தால் அதிகரித்து, வருடாந்திர மதிப்பீட்டில் 75.5 சதவீதத்தை எட்டியது.<br>இது முக்கியமாக பின்வரும் காரணங்களால் ஏற்பட்டது:<br>- 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் 2023 இல் செயல்படுத்தப்பட்ட கொள்கை மாற்றங்களின் தாக்கத்தை உணர்தல்;<br>- பொது மற்றும் தனியார் துறையின் ஊதிய உயர்வு; மற்றும்<br>- பொருளாதார நடவடிக்கைகளின் படிப்படியான இயல்பாக்கம். இருப்பினும், வட்டி விகிதங்களின் வீழ்ச்சி வட்டி வருமானத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது. |
| பெறுமதி சேர் வரி (VAT) | 571.5 | 1,400.0 | 1,067.4 | 2024ஜனவரிமுதல்ஒக்டோபர்வரையானகாலப்பகுதியில் பெறுமதி சேர் வரி வருமானம் முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 86.8 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைப் பதிவுசெய்து, வருடாந்த மதிப்பீட்டிற்கு எதிராக 76.2 சதவீதத்தினை ஈட்டியுள்ளது. இது முக்கியமாக பின்வரும் காரணங்களால் அடையப்பட்டது:<br>- அதிகரித்த VAT விகிதம்;<br>- VAT பதிவு வரம்பைக் குறைத்தல்;<br>- பெரும்பாலான VAT விலக்குகளை நீக்குதல்; மற்றும்<br>- மொத்த இறக்குமதியில் 10.7 சதவீதம் அதிகரிப்பு. |
| உற்பத்தி தீர்வை (விசேட ஏற்பாடு) மற்றும் மது வரி | 375.7 | 545.0 | 486.8 | 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் உற்பத்தி தீர்வை (விசேட ஏற்பாடு) மற்றும் மது வரி சேகரிப்பு முந்தைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 29.6 சதவீதம் அதிகரித்துள்ளது. இது ஆண்டு மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் 89.3 சதவீத அடைவாகும். இந்த செயல்திறன் முதன்மையாக காரணமாக இருந்தது;<br>- அனைத்து வகையான பெட்ரோல் மற்றும் டீசல் இறக்குமதியின் நிகர அதிகரிப்பு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய இறக்குமதியின் அதிகரிப்பு காரணமாக பெட்ரோலியத்தின் மீதான உற்பத்தி தீர்வை அதிகரிப்பு;<br>- சில திட்டங்களின் கீழ் மோட்டார் வாகன இறக்குமதிகளை விரிவுபடுத்துவதன் மூலம் மோட்டார் வாகனங்கள் மீதான மேம்படுத்தப்பட்ட உற்பத்தி தீர்வை மற்றும்<br>- 2023 ஜூலையில் நடைமுறைப்படுத்தப்பட்ட மது வரி விகித திருத்தங்கள் மற்றும் பணவீக்கத்திற்கு உற்பத்தி தீர்வை (விசேட ஏற்பாடு) மற்றும் மது வரியின் குறியீட்டின் தாக்கத்தை உணர்ந்ததன் மூலம் மதுபானம் மீதான மது வரியிலிருந்து வருமானம் அதிகரித்தல்.<br>எவ்வாறாயினும், வரி விகிதங்களின் மேல்நோக்கிய திருத்தத்திலிருந்து உருவாகும் சிகரெட்டுகளின் குறைந்த விற்பனை வருடாந்திர மதிப்பீட்டிலிருந்து விலகலை விரிவுபடுத்த பங்களித்தது. |

| உருப்படி | 2023 ஜனவரி - அக்டோபர் | 2024 (ஆண்டு மதிப்பீடு) | 2024 ஜனவரி- அக்டோபர் (a) | மாறுபாட்டிற்கான முக்கிய காரணங்கள் |
|---|---|---|---|---|
| | | | *ரூபா பில்லியன்* | |
| இறக்குமதி வரிகள் | 77.0 | 175.0 | 89.8 | 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் இறக்குமதி வரியின் வருமானம் முந்தைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 16.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இறக்குமதி வரியின் அடைவு 51.3 சதவீதமாக இருந்தது. இது முக்கியமாக அடையப்பட்டது;<br>- சுங்க இறக்குமதி வரியின் (CID) மேல்நோக்கிய திருத்தத்தின் தாக்கத்தை உணர்தல்.; மற்றும்<br>- 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் இறக்குமதியின் அதிகரிப்பு 10.7 சதவீதம். |
| துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு (PAL) | 142.9 | 175.0 | 143.8 | துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு மூலமாக பதிவு செய்யப்பட்ட வருமானம் கீழ் வருவனவற்றின் தாக்கங்களில் இருந்தும் கூட 0.6 சதவீதத்தால் சிறிதளவு அதிகரித்தது.<br>- காப்பு வரிக் கட்டணத்தை படிப்படியாக நீக்குவதன் ஒரு பகுதியாக ஏப்ரல் 4, 2023 முதல் நடைமுறைக்கு வரும் மொத்த PAL ஏற்புள்ள பொருட்களுக்கு 20 சதவீத விலக்கு; மற்றும்<br>- இலங்கை – சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 3,117 விடயங்களுக்கு சலுகை வீதங்களை பிரயோகித்தல் மற்றும் சிங்கப்பூரிலிருந்து அத்தகைய பொருட்களை இறக்குமதி செய்யும் நேரத்தில் 595 விடயங்களுக்கு விலக்களித்தல் ( SLSFTA) மார்ச் 29, 2024 முதல் அமலுக்கு வருகிறது.<br>2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் இறக்குமதியின் அதிகரித்த அளவின் தாக்கத்தின் காரணமாக PAL இன் வருமானம் சேகரிப்பு வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டில் 82.2 சதவீதத்தை அடைந்தது. |
| விசேட வியாபாரப் பண்ட அறவீடு (SCL) | 43.7 | 95.0 | 86.4 | 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் SCL இன் வருமானம் சேகரிப்பு 97.7 சதவீதத்தால் கணிசமாக அதிகரித்து ரூ.86.4 பில்லியனாக இருந்தது, இது வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 91.0 சதவீத அடைவாகும். இதற்கு முக்கிய காரணம்;<br>- சீனி மற்றும் உருளைக்கிழங்கு மீதான வரி விகிதங்களை உயர்த்துதல்; மற்றும்<br>- முக்கிய பொருட்களின் இறக்குமதி அதிகரிப்பு |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (SSCL) | 177.9 | 250.0 | 204.1 | சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டிலிருந்து வருமான சேகரிப்பு 2024 ஆண்டு மதிப்பீட்டில் 81.6 சதவீதத்தை அடைந்துள்ளது. முக்கியமாக இதற்குக் காரணம்:<br>- 2024 ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடுக்கு பொருந்தக்கூடிய பதிவு வரம்பு ஆண்டுக்கு ரூபா 120 மில்லியனிலிருந்து ஆண்டுக்கு ரூபா 60 மில்லியனாக குறைக்கப்பட்டதன் காரணமாக வரி செலுத்துவோரின் அதிகரிப்பு மற்றும்<br>- 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் அதிகரித்த இறக்குமதியின் தாக்கம். |
| ஏனைய வரிகள் | 79.0 | 100.0 | 106.4 | ஏனைய வரிகளிலிருந்து கிடைக்கும் வருமானம் 34.6 சதவீதத்தால் அதிகரித்து 106.4 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மதிப்பீட்டில் 106.4 சதவீதத்தை எட்டியுள்ளது. இதற்கு முக்கிய காரணங்கள்:<br>- இறக்குமதிகளின் அதிகரிப்பு காரணமாக செஸ் வரி 47.9 சதவீதத்தால் அதிகரித்தமை மற்றும்<br>- பிற வரிகள் 39.3 சதவீதத்தால் அதிகரித்தமை<br>எனினும், தொலைத்தொடர்பாடல் வரியிலிருந்து பெறப்பட்ட குறைந்த வருமானம் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. |

| உருப்படி | 2023 ஜனவரி - அக்டோபர் | 2024 (ஆண்டு மதிப்பீடு) | ரூபா பில்லியன்<br>2024 ஜனவரி- அக்டோபர் (a) | மாறுபாட்டிற்கான முக்கிய காரணங்கள் |
|---|---|---|---|---|
| வரி அல்லாத வருமானம் | 212.3 | 287.0 | 255.5 | வரி அல்லாத வருமானம் சேகரிப்பு 20.3 சதவீதத்தால் கணிசமாக அதிகரித்துள்ளது, முக்கியமாக வட்டி வருமானம், சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு மற்றும் அபராதம், கட்டணங்கள் மற்றும் விதிப்பனவு ஆகியவற்றின் அதிகரித்த வருமான செயலாற்றுகையின் காரணமாகும்.<br><br>2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் வரியல்லாத வருமானத்தின் அடைவு 2024 ஆண்டு மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் 89.0 சதவீதமாகும். |
| **மொத்தம்** | **2,424.8** | **4,107.0** | **3,255.7** | |

*அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்டது*

*(a) தற்காலிகமானது*

**கட்டம் 2.1 : முக்கிய அரசிறை நடவடிக்கைகள்: 2024 சனவரி – 2025 சனவரி**

| நடைமுறைக்கு வரும் தேதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **வருமான வரி - 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கான திருத்தங்கள்** | |
| 01.04.2024 | 2024.03.21 ஆம் திகதிய 2376/25 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- அரச நிறுவனங்கள் உட்பட தனிநபர்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு கிரமம் செய்து கொள்ள வேண்டிய தகவல்களை விதித்துரைப்பதற்காக |
| **2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில்(ஒழுங்குபடுத்தல்) சட்டம்** | |
| 12.01.2024 | 2024.01.12 ஆம் திகதிய 2366/33 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் உரிம ஒழுங்குவிதியின் 05 ஆம் பிரிவை மாற்றீடு செய்வதற்காகவும் மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமக் கட்டணம் மற்றும் உரிமப் புதுப்பித்தல் கட்டணக் கட்டமைப்புகளைத் திருத்தும் அட்டவணை II ஐ இணைப்பதற்காகவும் |
| 02.02.2024 | 2024.02.02 ஆம் திகதிய 2369/42 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- ஒழுங்குவிதிமுறையின் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமக் கட்டணங்கள் மற்றும் உரிமப் புதுப்பித்தல் கட்டணங்களுடன் தொடர்புடைய முதலீட்டு அளவுகோல்களைத் திருத்துவதற்காக |
| 22.04.2024 | 2024.04.22 ஆம் திகதிய 2381/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2024 ஜனவரி 12 ஆம் திகதிய 2366/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2024 பெப்ரவரி 02 ஆம் திகதிய 2369/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் உள்ள சிங்கள மொழிபெயர்ப்பு பிழைகளைத் திருத்துவதற்காக. |
| 29.05.2024 | 2024.05.29 ஆம் திகதிய 2386/09 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- ஒழுங்குவிதிமுறையின் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமக் கட்டணங்கள் மற்றும் உரிமப் புதுப்பித்தல் கட்டணங்களுடன் தொடர்புடைய முதலீட்டு அளவுகோல்களைத் திருத்துவதற்காக |
| **சமூகப் பாதுகாப்பு உதவுத்தொகை அறவீடு (SSCL) - 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு உதவுத்தொகை அறவீட்டுச் சட்டம்** | |
| 1.1.2024 | **2024 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு உதவுத்தொகை அறவீட்டுச் (திருத்தச்) சட்டம்**<br>- சமூகப் பாதுகாப்பு உதவுத்தொகை அறவீட்டிற்குப் பொருந்தக்கூடிய பதிவு எல்லையை ஆண்டொன்றுக்கு ரூபா 120 மில்லியனிலிருந்து 60 மில்லியன் ரூபா வரை குறைப்பதற்காக |
| **பெறுமதி சேர் வரி (VAT) – 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம்** | |
| 01.01.2024 | 2023.12.19 ஆம் திகதிய 2363/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- பெறுமதி சேர் வரி வீதத்தை 15 வீதத்திலிருந்து 18 வீதமாக அதிகரிப்பதற்காக |
| 01.01.2024 | 2023 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச்(திருத்த) சட்டம்<br>- முக்கிய பொருட்கள் மீது பொருந்தக்கூடிய பெறுமதி சேர் வரி விலக்குகளில் பெரும்பான்மையை நீக்குவதற்காக |

| நடைமுறைக்கு வரும் தேதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 01.01.2024 | 2024 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரிச்(திருத்த) சட்டம்<br>- பெறுமதி சேர் வரி பதிவு எல்லையை வருடாந்தம் ரூபா 80 மில்லியனிலிருந்து 60 மில்லியன் ரூபாவாக குறைப்பதற்காக |
| **உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) - 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்** | |
| 01.01.2024 | 2023.12.31 ஆம் திகதிய 2364/36 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- உற்பத்தித் தீர்வை விதிக்கத்தக்க அனைத்துப் பொருட்களுக்கும் குறியீட்டு முறையின் அடிப்படையில் உற்பத்தித் தீர்வையை 14 சதவீதமும், பெற்றோல் மீதான உற்பத்தித் தீர்வையை லிட்டருக்கு 5 ரூபாயும், டீசல் மீதான உற்பத்தித் தீர்வையை லிட்டருக்கு 6 ரூபாயும் குறைப்பதற்காக |
| 11.01.2025 | 2025.01.10 ஆம் திகதிய 2418/43 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- வருடாந்திர பணவீக்க சீராக்கல் குறியீட்டின் அடிப்படையில் அலகு விகித உற்பத்தித் தீர்வை (பெட்ரோல் மற்றும் டீசல் நீங்கலாக) கொண்ட அனைத்துப் பொருட்களுக்கான உற்பத்தித் தீர்வையையும் 5.9 சதவீதம் உயர்த்துவதற்காக. |
| 01.02.2025 | 2025.01.31 ஆம் திகதிய 2421/42 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- மின்சார வாகனங்கள் மீதான உற்பத்தித் தீர்வையை அதிகரிப்பதற்காக |
| **மதுவரி (கட்டளைச் சட்டம்) – மதுவரிக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 52)** | |
| 01.01.2024 | 2023.12.31 ஆம் திகதிய 2364/35 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- மதுவரி வரிக்கான வருடாந்த பணவீக்க சீராக்கத்தை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் அனைத்து வகையான மதுபானங்கள் மீதான மதுவரி வரிகளை 14 சதவீதத்தால் அதிகரிப்பதற்காக. |
| 12.01.2024 | மதுவரி அறிவித்தல் இலக்கம் 01/2024 (2024.01.12 ஆம் திகதிய 2366/38 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- வருடாந்த மதுவரி அனுமதிப்பத்திரக் கட்டணத்தைத் திருத்துவதற்காக |
| 12.01.2024 | மதுவரி அறிவித்தல் இலக்கம் 02/2024 (2024.01.12 ஆம் திகதிய 2366/39 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- மதுவரி அறிவித்தல் இலக்கம் 902 இல் உள்ள ஏற்பாடுகளைத் திருத்துவதற்காக |
| 01.02.2024 | மதுவரி அறிவித்தல் இல.03/2024 (2024.02.01 ஆம் திகதிய 2369/32 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- வருடாந்த மதுவரி அனுமதிப்பத்திர கட்டணத்தை மீளாய்வு செய்தல் மற்றும் கைத்தொழிலில் பிரவேசிக்கும் பொருட்டு ஒரு தடவைக் கட்டணத்தை அறிமுகப்படுத்துவதற்காக |
| 13.08.2024 | மதுவரி அறிவித்தல் இலக்கம் 05/2024 (2024.08.13 ஆம் திகதிய 2397/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- மதுவரி அறிவித்தல் இலக்கம் 666 இல் உள்ள விதிகளைத் திருத்துவதற்காக |
| 11.01.2025 | மதுவரி அறிவித்தல் இல.01/2025 (2025.01.10 ஆம் திகதிய 2418/42 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- வருடாந்த பணவீக்க சீராக்கல் சுட்டெண்ணின் அடிப்படையில் மதுபானங்களுக்கான மதுவரி வரியை 5.9 சதவீதத்தால் அதிகரிப்பதற்காக. |
| **துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு (PAL) - 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்** | |
| 01.01.2024 | 2023.12.31 ஆம் திகதிய 2364/37 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2023 வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 34.6 (காப்பு வரிகளை படிப்படியாக நீக்குதல்) இன் படி PAL ஐந்து (05) ஆண்டுகளுக்குள் முழுமையாக அகற்றப்பட வேண்டும் என்பதற்காக பெற்றோல், டீசல் மற்றும் உரங்கள் உட்பட 26 அத்தியாவசிய பொருட்களுக்கு வரி விலக்கு அளிப்பதற்காக |
| 29.03.2024 | 2024.03.28 ஆம் திகதிய 2377/39 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- இலங்கை – சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக சிங்கப்பூரிலிருந்து அத்தகைய பொருட்களை இறக்குமதி செய்யும் போது 3,117 பொருட்களுக்கு சலுகை கட்டணங்களை அமுல்படுத்துவதற்காகவும் 595 பொருட்களுக்கு விலக்களிப்பதற்காகவும் |
| **செஸ் வரி விதிப்பனவு – 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்** | |
| 06.01.2024 | 2024.01.04 ஆம் திகதிய 2365/50 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- இலங்கை–சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் செஸ் வரியுடன் தொடர்புடைய வரி தாராளமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தை வெளியிடுவதற்காக |

| நடைமுறைக்கு வரும் தேதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 06.09.2024 | 2024.09.05 ஆம் திகதிய 2400/25 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2024.08.26 ஆந் திகதிய 24/1709/631/026-I ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானங்கள் மற்றும் 2024.08.12 ஆம் திகதிய 24/1541/622/002-II ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானங்களுக்கு அமைவாக செஸ் வரியை திருத்தம் செய்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்காக |
| **வரி அல்லாத (கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகள்) - 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டம்.** | |
| 01.02.2024 | 2024.01.12 ஆம் திகதிய 2366/34 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- சந்தை இடைத்தரகர்கள் மற்றும் சந்தை நிறுவனங்களுக்கு இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் விதிக்கப்படும் கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகளை திருத்தியமைப்பதற்காக |
| **வரி அல்லாத (கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகள்) - 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டம்** | |
| 23.12.2024 | 2024.12.22 ஆம் திகதிய 2415/79 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளுக்கான செலவுகளை ஈடுகட்டுவதற்காக காப்பீட்டாளர்களுக்கு பொருந்தக்கூடிய காப்பீட்டு வணிகங்களின் மொத்த காப்புறுதி தவணைக் கட்டணங்களின் மீதான வருடாந்திர கட்டணங்களை 0.125 சதவீதத்திலிருந்து 0.2 சதவீதமாக உயர்த்துதல்,. |
| **சுங்க இறக்குமதி தீர்வை(CID) – 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வருமானப் பாதுகாப்புச் சட்டம்** | |
| 06.01.2024 | வருமானப் பாதுகாப்பு கட்டளை இலக்கம் 06/2023 (2024.01.04 ஆம் திகதிய 2365/51 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் (SLSFTA) வரி தாராளமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் “6” வகையின் கீழ் சுங்க இறக்குமதி தீர்வையின் ஆறு வருடாந்த தவணைகளின் இரண்டாவது தவணையை 1,222 சுங்க குறியீட்டு வரிசைகளுக்கு நீக்குவதற்காக |
| 27.01.2025 | வருமானப் பாதுகாப்பு கட்டளை இலக்கம் 01/2025 (2025.01.27 ஆம் திகதிய 2421/05 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- 2023.03.24 ஆந் திகதிய 2324/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விலக்களிப்பு பட்டியலில் இருந்து 33 ஆம் இலக்க விடயத்தை நீக்குவதற்காக |
| **சுங்க மிகைக் கட்டணம் - சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235)** | |
| 01.02.2025 | 2024.01.31 ஆம் திகதிய 2421/43 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனங்களின் இறக்குமதி வரிகள் மீது மிகைக் கட்டணத்தை விதிப்பதற்காக |
| **விசேட வியாபார பண்ட அறவீடு (SCL) – 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்** | |
| 02.01.2024 | 2024.01.02 ஆம் திகதிய 2365/04 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 02.01.2024 முதல் 21.01.2024 வரையான காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்படும் அரிசி மீது ஒரு கிலோகிராமுக்கு ரூபா 64/- தீர்வைத் தள்ளுபடி செய்வதற்காக |
| 08.01.2024 | 2024.01.07 ஆம் திகதிய 2365/84 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- உருளைக்கிழங்கு இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட SCL வரியை டிசம்பர் 31, 2024 வரை தொடர்வதற்காக |
| 20.02.2024 | 2024.02.19 ஆம் திகதிய 2372/06 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- மக்காச்சோளம், உளுந்து மற்றும் பச்சைப் பயறு இறக்குமதி மீதான SCL இன் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்காகவும் தட்டைப்பயறு மற்றும் குரக்கன் மீதான அறவீட்டு வீதத்தை கிலோ ஒன்றுக்கு ரூ.70/-லிருந்து ரூ.300/-ஆக உயர்த்துவதற்காகவும் |
| 02.03.2024 | 2024.03.01 ஆம் திகதிய 2373/42 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2024 ஏப்ரல் 11 ஆம் திகதி வரை ரமலான் பண்டிகை காலத்தை கருத்திற்கொண்டு இறக்குமதி செய்யப்படும் பேரீச்சம் பழங்களுக்கு ஒரு கிலோவுக்கு ரூ.199/- தீர்வை விலக்கு வழங்குவதற்காக |
| 27.03.2024 | 2024.03.26 ஆம் திகதிய 2377/17 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2024 ஏப்ரல் 30 வரை பண்டிகை காலத்தை கருத்தில் கொண்டு சிவப்பு வெங்காய இறக்குமதிக்கு ஒரு கிலோ ரூ.10/- என்ற சலுகை SCL விகிதத்தை விதிப்பதற்கும் 02.01.2024 முதல் 21.01.2024 வரையிலான காலப்பகுதிக்கு அரிசி இறக்குமதிக்கு ஒரு கிலோவுக்கு ரூ.64/- தீர்வை தள்ளுபடியை நீடிப்பதற்கும் |
| 18.05.2024 | 2024.05.17 ஆம் திகதிய 2384/31 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 34 பொருட்களுக்கு விதிக்கப்பட்ட SCL இன் செல்லுபடியாகும் காலத்தை மேலும் ஒரு வருட காலத்திற்கு டிசம்பர் 31, 2024 வரை நீடிப்பதற்கும் |

| நடைமுறைக்கு வரும் தேதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 31.07.2024 | 2024.07.31 ஆம் திகதிய 2395/32 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 6 பொருட்களின் செல்லுபடியாகும் காலத்தை 2024 டிசம்பர் 31 வரை நீடிப்பதற்கும் மற்றும் மருந்து தொழில்துறையின் பயன்பாட்டிற்காக இறக்குமதி செய்யப்படும் உப்பு மீதான தீர்வை தள்ளுபடியை தொடர்வதற்கும் |
| 03.10.2024 | 2024.10.02 ஆம் திகதிய 2404/19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- உள்ளூர் அறுவடை காலத்தை கருத்திற்கொண்டு உருளைக்கிழங்கு இறக்குமதி மீது 60 ரூபா வரையும் பீ வெங்காயத்தின் இறக்குமதி மீது 30 ரூபாவையும் அதிகரிப்பதற்கு |
| 14.10.2024 | 2024.10.14 ஆம் திகதிய 2406/02 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- மீன், மாலத்தீவு மீன்,மைசூர் பருப்பு, மாங்கோஸ்டீன் மற்றும் கிவி பழங்கள் இறக்குமதி செய்வதற்கான தற்போதுள்ள SCL இன் செல்லுபடியாகும் காலத்தை 2024 டிசம்பர் 31 வரை நீடிப்பதற்கும் உள்ளூர் கலனிலடைத்த மீன் கைத்தொழில்துறையின் பயன்பாட்டிற்காக கானாங்கெளுத்தி மீன் இறக்குமதிக்கான SCL வரித் தள்ளுபடியை நீடிப்பதற்கும் |
| 02.12.2024 | 2024.11.01 ஆம் திகதிய 2408/15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- இறக்குமதி செய்யப்படும் வெள்ளை சீனிக்கான SCL விகிதத்தை டிசம்பர் 31, 2024 வரை ஒரு கிலோ ரூ .50/- என்ற விகிதத்தில் தொடர்வதற்காக |
| 01.12.2024 | 2024.11.30 ஆம் திகதிய 2412/38 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கிற்கு விதிக்கப்பட்ட SCL வீதத்தைத் தொடரவும், இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்திற்கு விதிக்கப்பட்ட SCL வரியை 2024 டிசம்பர் 31 வரை ஒரு கிலோவுக்கு ரூ .30 / - முதல் ரூ .10 / - வரை குறைப்பதற்காகவும் |
| 01.01.2025 | 2024.12.31 ஆம் திகதிய 2417/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- ஜனவரி 01, 2025 முதல் டிசம்பர் 31, 2025 வரையிலான காலப்பகுதிக்கு SCL இனை 63 பொருட்களை உள்ளடக்குவதற்காக தனி வர்த்தமானி அறிவித்தலைவெளியிடுவதற்கு |
| 28.01.2025 | 2025.01.27 ஆம் திகதிய 2421/03 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2025 மார்ச் 03 ஆம் திகதி வரை ரமழான் பண்டிகை காலத்தை கருத்திற்கொண்டு இறக்குமதி செய்யப்படும் பேரீச்சம் பழங்களுக்கு ஒரு கிலோவுக்கு ரூ.199/- தீர்வை விலக்கு வழங்குவதற்காக |
| **இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் – 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டம்** | |
| 11.01.2024 | 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2024.01.11 ஆம் திகதிய 2366/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>- பல்வேறு அரசாங்க நிறுவனங்களின் விசேட தேவைகளை நிறைவு செய்வதற்காக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த தெரிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதியளித்தல். |
| 07.02.2024 | 2024 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2024.02.07 ஆம் திகதிய 2370/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>- 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் (2023.01.01 ஆம் திகதிய 2312/78 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட) ஒழுங்குவிதி இலக்கம் 12(அ) ஐ திருத்துவதன் மூலம் வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு முழுமையாக மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிக்கப்பட்ட காலப்பகுதியை 2024.08.31 வரை நீடிப்பதற்கு.* |
| 19.02.2024 | 2024 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2024.02.19 ஆம் திகதிய 2372/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>- 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளின் (2023.01.01 ஆம் திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட) அட்டவணை V இல் வகைப்படுத்தப்பட்டு பட்டியலிடப்பட்டுள்ள) தெரிவு செய்யப்பட்ட வாசனைத் திரவியங்களை (எ.கா., மிளகு, சாதிக்காய் மற்றும் சோளம் போன்றவை) பதப்படுத்தல் மற்றும் மீள் ஏற்றுமதி நோக்கங்களுக்காக அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட "அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின்" மூலம் இறக்குமதி செய்ய அனுமதியளித்தல்.** |
| 29.02.2024 | 2024 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2024.02.28 ஆம் திகதிய 2373/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>- DP மற்றும் DA கொடுப்பனவு விதிமுறைகளின் முன் ஒப்புதல் தேவைப்பாடு தொடர்பான 2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இறக்குமதி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதியின் 6 ஆம் ஒழுங்குவிதியை நீக்குவதற்கு (2024.05.06 ஆம் திகதிய 2278/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது) |
| 19.03.2024 | 2024 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2024.03.19 ஆம் திகதிய 2376/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>- பல்வேறு அரசாங்க நிறுவனங்களின் விசேட தேவைகளை நிறைவு செய்வதற்காக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த தெரிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிப்பதற்கு |

| நடைமுறைக்கு வரும் தேதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 08.04.2024 | 2024 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2024.04.08 ஆம் திகதிய 2379/03 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>- இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் (STC), தேசிய உணவு ஊக்குவிப்பு சபை மற்றும் இலங்கை ஹதபிம அதிகாரசபை ஆகியன 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளின் (2023.01.01 ஆம் திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட) வகைப்படுத்தப்பட்டு வகைப்படுத்தப்பட்ட 2,000 மெட்ரிக் டன் உளுந்தை இறக்குமதி செய்வதற்கு அனுமதியளித்தல். |
| 17.05.2024 | 2024 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2024.05.17 ஆம் திகதிய 2384/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>- தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள தெரிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு சுற்றுலாத்துறைக்கு அனுமதி வழங்குதற்காக |
| 17.05.2024 | 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் தரப்படுத்தல் மற்றும் தரக்கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் (2024.05.17 ஆம் திகதிய 2384/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>- தெரிவு செய்யப்பட்ட இறக்குமதிப் பொருட்களுக்கான இலங்கை நியமங்களை விதித்துரைப்பதற்காக |
| 06.06.2024 | 2024 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2024.06.06 ஆம் திகதிய 2387/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>- 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளின் அட்டவணை V இல் பட்டியலிடப்பட்டுள்ள பாக்கு கொட்டைகளை (2023.01.01 ஆம் திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட) பதப்படுத்தல் மற்றும் மீள் ஏற்றுமதி நோக்கத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்ட “அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்” மூலம் இறக்குமதி செய்ய அனுமதியளிப்பதற்கு.** |
| 28.06.2024 | 2024 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2024.06.28 ஆம் திகதிய 2390/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>- தேர்ந்தெடுக்கப்பட்ட சமையல் தானியங்களுக்கு இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமம் (ICL) தேவையை நீக்குவதற்கும் ஆளில்லா விமானங்களுக்கு இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமம் (ICL) தேவைப்பாட்டை விதிப்பதற்கு |
| 18.07.2024 | 2024 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2024.07.18 ஆம் திகதிய 2393/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>- 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளின் அட்டவணை V இல் வகைப்படுத்தப்பட்டு பட்டியல்படுத்தப்பட்டுள்ள தெரிவு செய்யப்பட்ட சில வாசனைத் திரவியங்களை (எ.கா. மிளகு, சாதிக்காய் மற்றும் சோளம் போன்றவை) பதப்படுத்தல் மற்றும் மீள் ஏற்றுமதி நோக்கங்களுக்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற “அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின்” மூலம் இறக்குமதி செய்ய அனுமதியளித்தல். |
| 21.08.2024 | 2024 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொடுப்பனவு விதிமுறைகள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் (2024.08.21 ஆம் திகதிய 2398/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>- 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் திறந்த கணக்கு கொடுப்பனவு நியதியின் கீழ் பொருட்களை இறக்குமதி செய்ய அங்கீகரிக்கப்பட்ட நபர்களை அனுமதிப்பதற்கு |
| 11.09.2024 | 2024 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2024.09.11 ஆம் திகதிய 2401/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>- இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் இயங்கும் மோட்டார் வாகன பொருத்துகைக் கருத்திட்டங்களுக்காக அமைச்சரவையின் உரிய அங்கீகாரம் பெற்ற உடன்படிக்கையின் கீழ் புத்தம் புதிய செமி நாக்ட் டவுன் (SKD) கருவிகளை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குதல்.** |
| 04.12.2024 | 2024 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2024.12.04 ஆம் திகதிய 2413/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>- 2024 டிசம்பர் 20 வரை அரிசி இறக்குமதிக்கான இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமம் (ICL) தேவையை நீக்குவதற்காக * |
| 18.12.2024 | 2024 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2024.12.18 ஆம் திகதிய 2415/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>- அரச பயணிகள் போக்குவரத்து வாகனங்கள், விசேட நோக்க வாகனங்கள் மற்றும் மோட்டார் வாகனம் அல்லாத ஏனைய பொருட்களின் இறக்குமதி மீதான தற்காலிக இடைநிறுத்தத்தினை நீக்குவதற்காக.* |

| நடைமுறைக்கு வரும் தேதி | நடவடிக்கைகள் |
| --- | --- |
| 24.12.2024 | 2024 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2024.12.24 ஆம் திகதிய 2416/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>- 2024.12.04 ஆந் திகதிய 2413/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரிசி இறக்குமதிக்கான இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தின் (ICL) தேவை நீக்கத்தை 2025 ஜனவரி 10 ஆம் திகதி வரை தொடர்ந்தும் நீடிப்பதற்காக.* |
| 28.01.2025 | 2025 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2025.01.27 ஆம் திகதிய 2421/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>- வர்த்தக அல்லது சரக்கு போக்குவரத்து வாகனங்களின் இறக்குமதி மீதான தற்காலிக இடைநிறுத்தத்தை நீக்குவதற்காக.* |
| 01.02.2025 | 2025 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2025.01.31 ஆம் திகதிய 2421/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>- சொந்த பாவனை மோட்டார் வாகனங்கள் (கார்கள், வேன்கள், விளையாட்டு பயன்பாட்டு வாகனங்கள் போன்றவை) உட்பட மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீதான தற்காலிக இடைநிறுத்தத்தினை நீக்குவதற்கும் ஆகக்கூடிய வயது வரம்பை மீறும் மோட்டார் வாகனங்களுக்கான இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தை விதிப்பதற்கும் |
| **புறப்படுகை அறவீடு- 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதிச் சட்டம்** | |
| 01.02.2024 | 2024.02.01 ஆம் திகதிய 2369/27 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- கொழும்பு இரத்மலானை சர்வதேச விமான நிலையம் (CIAR) மற்றும் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் (JIA ) ஆகியவற்றிலிருந்து விமான சேவையை ஆரம்பிக்கும் விமானம் மூலம் இலங்கையை விட்டு வெளியேறும் நபருக்கு 60 அமெரிக்க டொலர் விதிக்கப்படும் புறப்படுகை அறவீட்டிலிருந்து 30 அமெரிக்க டொலரை சலுகை வீதமாக ஒரு வருட காலத்திற்கு நீடிப்பதற்கு. |
| 07.03.2024 | 2024.03.06 ஆம் திகதிய 2374/19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2024 மார்ச் 07 ஆம் திகதி முதல் 2026 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான அண்ணளவாக மூன்று வருட காலப்பகுதிக்கு ஏற்புடையதான 60 அமெரிக்க டொலர் புறப்படுகை அறவீட்டிலிருந்து படகு மூலம் இலங்கையிலிருந்து பயணிக்கும் நபருக்கு 05 அமெரிக்க டொலரும் கப்பல் பயணத்தின் மூலம் வெளியேறும் நபருக்கு 20 அமெரிக்க டொலரும் சலுகை வீதமாக வழங்குவதற்காக |
| 31.01.2025 | 2025.01.31 ஆம் திகதிய 2421/30 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திலிருந்து சர்வதேச விமான சேவையின் ஊடாக இலங்கையை விட்டு வெளியேறும் நபர்களுக்கான வரி விலக்குக் காலத்தை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்கு நீடித்தல்.<br>- CIAR மற்றும் JIA ஆகியவற்றிலிருந்து விமான சேவையை ஆரம்பிக்கும் விமானங்களின் மூலம் இலங்கையை விட்டு வெளியேறும் நபருக்கு 60 அமெரிக்க டொலர் ஏற்புடைய வரியிலிருந்து 30 அமெரிக்க டொலரை சலுகை வீதமாக ஒரு வருட காலத்திற்கு நீடிப்பதற்கு |
| **மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி – 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டம்** | |
| 24.01.2024 | 2024.01.24 ஆம் திகதிய 2368/24 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2023.02.10 ஆம் திகதிய 2318/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பணம் அனுப்புதல், நாணயக் கடிதங்களை திறத்தல் மற்றும் வாகனங்களைப் பதிவு செய்தல் ஆகியவற்றுக்கான பரிசீலனைக் காலத்தை மேலும் நீடிப்பதற்கு (புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு முழுமையான மின்சார மோட்டார் வாகனங்களின் வரியற்ற வரம்பை ரூபா 6 மில்லியனிலிருந்து ரூபா 12 மில்லியனாக அதிகரித்தல்). |
| 01.02.2025 | 2024.12.31 ஆம் திகதிய 2421/41 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரிக்கான வரம்பை மாற்றியமைப்பதற்கு |

** தற்போது நடைமுறையில் இல்லை*
*** தற்போது செல்லுபடியாகாது*

## 2.3 அரசாங்க செலவினம்

அரசாங்க செலவினம் 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் ரூபா 4,327.7 பில்லியனாக இருந்ததுடன், அதில் ரூபா 3,796.0 பில்லியன் மீண்டெழும் செலவினமாகக் காணப்பட்டதுடன், ரூபா 531.6 பில்லியன் மூலதனச் செலவினம் மற்றும் நிகரக் கடன் செலவினமாகக் காணப்பட்டது. அரசாங்க செலவினங்கள் ஆண்டுதோறும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும். அதன்படி, 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டதுடன், இதன் மூலம் அரசாங்கம் 2024 ஆம் ஆண்டில் செலவினங்களைச் செய்ய முடியும்.

**அட்டவணை 2.11 : அரசாங்க செலவின செயலாற்றுகை**

ரூபா.மில்லியன்

| விடயம் | சன - ஒக் 2023 | சன - ஒக் 2024 (அ) |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **3,532,249** | **3,796,046** |
| சம்பளங்கள் | 774,315 | 839,000 |
| ஓய்வூதியம் | 294,560 | 323,756 |
| வட்டி | 1,772,387 | 1,891,451 |
| ஏனைய | 690,987 | 741,839 |
| **மூலதனம் மற்றும் தேறிய கடன்** | **448,801** | **531,645** |
| **மொத்த செலவினம்** | **3,981,050** | **4,327,692** |

*மூலம் : தேசிய வரவுசெலவுதிட்ட திணைக்களம், அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

*(அ) தற்காலிகமானது*

### சம்பளம் மற்றும் ஓய்வூதியம்

மாகாண சபைகள் உட்பட அரச ஊழியர;களின் சம்பளம் மற்றும் சம்பளத்திற்கான செலவு 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 774.3 பில்லியனாக இருந்த நிலையில், 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் 8.4 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 839.0 பில்லியனாகக் காணப்பட்டது. அதேவேளை, ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மீதான செலவினம் 2023 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 294.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 இன் முதல் 10 மாதங்களில் ரூபா 323.8 பில்லியனாக 9.9 சதவீதத்தினால் அதிகரித்தது. இந்த அதிகரிப்பானது பிரதானமாக வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்ட கொள்கைத் தீரமானம் மற்றும் நிலுவைகளை இல்லாதாக்கி உரிய நேரத்திற்கு பணிக்கொடை கொடுப்பனவை செலுத்தியமை என்பவற்றினால் ஏற்பட்டதாகும்.

### வட்டிக் கொடுப்பனவுகள்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2024 இன் முதல் பத்து மாதங்களில் ரூபா 1,891.5 பில்லியனாகக் காணப்பட்டதுடன் 2023 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 1,772.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 6.7 சதவீதத்தினால் அதிகரித்தது.

2024 இன் முதல் 10 மாதங்களின் போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வட்டிக் கொடுப்பனவு கூறுகள் 2023 இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் முறையே 5.5 சதவீதம் மற்றும் 29.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளன. இதற்கமைவாக 2023இன் இதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2024 இன் முதல் 10 மாதங்களில் உள்நாட்டு படுகடன் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் ரூபா 1,683.4 பில்லியனிலிருந்து ரூபா 1,776.0 பில்லியனாக அதிகரித்துள்ள அதேவேளை வெளிநாட்டு படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூபா 89.0 பில்லியனிலிருந்து ரூபா 115.4 பில்லியனாக அதிகரித்துள்ளது.

**அட்டவணை 2.12 : அரசாங்க பிணையங்கள் மற்றும் நாணய விகிதங்கள் மீதான விளைவு வீதங்களின் போக்கு 2023 - 2024**

| காலப்பகுதி | | திறைசேரி உண்டியல்கள் (%) | | | திறைசேரி முறிகள் (%) | | | | நாணய மாற்று வீதங்கள் ரூபா/ ஐ.அ.டொ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | 2 வருடம் | 3 வருடம் | 4 வருடம் | 5 வருடம் | |
| 2023 | சன | 29.91 | 28.72 | 27.78 | 32.19 | 30.85 | 29.21 | 29.79 | 362.42 |
| | பெப் | 29.72 | 28.67 | 27.67 | – | – | 29.37 | – | 361.98 |
| | மார் | 25.99 | 25.79 | 24.31 | 29.99 | – | 28.11 | – | 329.47 |
| | ஏப் | 25.74 | 25.27 | 23.00 | – | – | – | – | 321.42 |
| | மே | 25.65 | 25.29 | 22.91 | – | – | – | – | 310.16 |
| | யூன் | 23.00 | 19.49 | 16.99 | – | – | – | – | 301.26 |
| | யூலை | 19.96 | 17.69 | 14.29 | – | – | – | 15.74 | 319.29 |
| | ஆகஸ் | 18.48 | 15.36 | 13.58 | – | 15.80 | – | 15.03 | 321.58 |
| | செப் | 17.42 | 15.13 | 13.30 | – | 15.64 | – | 14.52 | 322.77 |
| | ஒத் | 16.10 | 14.93 | 13.02 | – | 15.24 | – | – | 324.73 |
| | நவ | 14.86 | 14.52 | 12.89 | – | 14.48 | 14.52 | 14.52 | 328.25 |
| | திசெ | 14.51 | | 12.93 | | 14.52 | | | 326.74 |
| 2024 | சன | 11.97 | 12.20 | 12.00 | 13.83 | 13.08 | 14.21 | 13.65 | 321.17 |
| | பெப் | 9.87 | 9.95 | 10.05 | – | 10.81 | – | 11.90 | 312.58 |

| காலப்பகுதி | திறைசேரி உண்டியல்கள் (%) | | | திறைசேரி முறிகள் (%) | | | | நாணய மாற்று வீதங்கள் ரூபா/ ஐ.அ.டொ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | 2 வருடம் | 3 வருடம் | 4 வருடம் | 5 வருடம் | |
| மார் | 10.07 | 10.23 | 10.28 | – | 11.33 | – | 12.25 | 305.67 |
| ஏப் | 9.61 | 9.89 | 9.99 | – | 11.44 | 11.72 | 12.37 | 299.42 |
| மே | 8.62 | 9.04 | 9.18 | – | – | 11.01 | – | 299.69 |
| யூன் | 10.07 | 10.19 | 10.31 | – | 10.69 | 11.90 | 11.78 | 303.81 |
| யூலை | 9.14 | 9.34 | 9.95 | – | 12.07 | – | – | 303.76 |
| ஆகஸ் | 9.49 | 9.84 | 10.01 | – | – | – | 12.98 | 300.69 |
| செப் | 10.49 | 10.72 | 10.05 | – | 13.79 | – | 13.98 | 301.15 |
| ஒத் | 9.35 | 9.68 | 9.95 | – | 11.79 | 11.84 | – | 293.79 |
| நவ | 8.73 | 8.97 | 9.08 | 11.63 | 10.62 | – | 11.28 | 292.01 |
| திசெ | | | | | | | | 291.68 |

*மூலங்கள் : திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம், பொதுப் படுகடன் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி*

## நலன்புரிச் செலவுகள்

அரசாங்கம் சமூகத்திலுள்ள பாதிக்கப்பட்ட மற்றும் விளிம்புநிலையில் உள்ள சமூகங்களின் மீது விசேட கவனம் செலுத்தி அனைத்து பிரசைகளுக்கும் சமமான ஆதரவு வழங்கல் மற்றும் வலுவூட்டலினை உறுதிப்படுத்துவதற்கு சமூக பாதுகாப்பு வலையினை வலுப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது. இந்த முன்னெடுப்பானது உள்ளீட்டு பொருளாதார அறவீடு மற்றும் நிலையான வளர்ச்சிக்கான உறுதியான அத்திவாரமொன்றினை கட்டியெழுப்புவதை நோக்காகக் கொண்டுள்ளது.

2024 இன் முதல் பத்து மாதங்களின் போது அரசாங்கத்தின் பிரதான நலன்புரிச் செலவினமானது, சமூக நலன்புரி, சமூகப் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம்; மற்றும் போசாக்கு, அபிவிருத்தி உதவி உள்ளடங்களாக ரூபா 670.2 பில்லியனாக காணப்பட்டதுடன் உற்பத்தி மீதான மானிய நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஊழிய சந்தை உள்ளீடு என்பன 2023 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 610 பில்லியன் உண்மையான செலவினத்துடன் ஒப்பிடுகையில் ஏறக்குறைய 10 சதவீத அதிகரிப்பினை பதிவாக்கியுள்ளது. 2024 சனவரியில் இருந்து ஒக்றோபர் வரை அரசாங்கம் சமூக நலன்புரி மற்றும் பாதுகாப்பு வலைச் செலவினங்கள் மீது ரூபா 506.9 பில்லியனை செலவிட்டுள்ளது. இது, வயது முதியோருக்கான கொடுப்பனவு அங்கவீனமுற்றவர்களுக்கான கொடுப்பனவு மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கான கொடுப்பனவுகள் உள்ளடங்களாக "அஸ்வெசும" நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 141 பில்லியனையும் உள்ளடக்கியுள்ளது. இது 2023 இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 35 சதவீத அதிகரிப்பினை பதிவாக்கியுள்ளது.

மேலும், 2024 சனவரி முதல் ஒக்ரோபர் வரை சுகாதார மற்றும் போசாக்கு மீதான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான அரசாங்க செலவினம் 2024 இன் முதல் பத்து மாதங்களின் போது 2023 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 96 பில்லியனிலிருந்து ரூபா 116 பில்லியனாக அதிகரித்துள்ளது. இது 20 சதவீத அதிகரிப்பாகும்.

**அட்டவணை 2.13 : நலன்புரி செலவினம்**

ரூபா.மில்லியன்

| நிகழ்ச்சித்திட்டம் | சன - ஒக் | |
|---|---|---|
| | 2023 | 2024 (அ) |
| **சுகாதாரம் மற்றும் போசாக்கு** | **96,269** | **116,483** |
| அனைவருக்கும் இலவச மருத்துவம் | 76,675 | 92,888 |
| பாடசாலை போசணை உணவுத் திட்டம் | 14,961 | 15,435 |
| திரிபோசா நிகழ்ச்சித்திட்டம் | 1,306 | 1,794 |
| முன்பள்ளி சிறுவர்களுக்கான காலை உணவு | 308 | 950 |
| போசன மல்ல | 3,019 | 5,416 |
| **கல்வி** | **29,513** | **18,085** |
| இலவச பாடப் புத்தகங்கள் | 18,159 | 4,573 |
| இலவச பாடசாலை சீருடைகள் | 2,537 | 1,085 |
| பாடசாலை பருவகாலச் சீட்டுக்கள் | 6,000 | 7,773 |

ரூபா.மில்லியன்

| நிகழ்ச்சித்திட்டம் | சன - ஒக் | |
|---|---|---|
| | 2023 | 2024 (அ) |
| கடின மற்றும் அதிகடின பிரதேச பாடசாலை மாணவர்களுக்கான காலணிகள் | – | 858 |
| தரம் ஐந்து புலமைப் பரிசில்கள் | 603 | 704 |
| மகாபொல புலமைப் பரிசில்கள் | 1,576 | 2,250 |
| முற்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு 'குரு அபிமனி' | 276 | 414 |
| அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கான உதவி | 362 | 428 |
| **வாழ்வாதார உதவி** | **45,509** | **28,611** |
| உர மானியம் | 43,395 | 26,436 |
| தேயிலை, இறப்பர், தென்னை, மரமுந்திரி மற்றும் ஏனைய பயிர்களுக்கான மானியம் | 836 | 1,163 |
| ஏற்றுமதி பயிர் அபிவிருத்திக்காக விவசாயிகளுக்கான உதவி | 198 | 170 |
| உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் | 1,080 | 842 |
| **சமூக நலன்புரி மற்றும் பாதுகாப்பு வலை** | **438,818** | **506,990** |
| அசுவெசும பண மானியம் | 85,294 | 121,070 |
| மாற்றுத் திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான உதவி | 3,731 | 6,573 |
| முதியோருக்கான உதவி | 14,883 | 12,926 |
| ரணவிரு பெற்றோர் சமூகப் பராமரிப்பு | 1,856 | 1,763 |
| உணவு உதவி, வெள்ளம் மற்றும் வரட்சி நிவாரணம் | 59 | 283 |
| வருமானம் ஈட்டாத பாதையில் பேரூந்து சேவை | 2,800 | 1,725 |
| ஓய்வூதியம் | 294,557 | 323,756 |
| இறந்த மற்றும் காயமடைந்த வீரர்களுக்கான சேவை இழப்பீடு | 35,638 | 38,894 |
| **மொத்தம்** | **610,109** | **670,169** |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

*(அ) தற்காலிகமானது*

### பொது முதலீடு

பின்வரும் துறைகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளுடன் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான செலவினம் ஏறக்குறைய ரூபா 553.7 பில்லியனாகக் காணப்பட்டது.

1. கிராமிய பாதைகள், பாலங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் அதிவேகப் பாதைகளின் பராமரிப்பு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்காக ரூபா 181.0 பில்லியன்.

2. குழாய்நீர் வழங்கல் திட்டம், வீடமைப்புத் திட்டங்களின் அபிவிருத்தி மற்றும் நகர பிரதேசங்களில் வசதி ஏற்பாடுகள் என்பவற்றின் அபிவிருத்தி மற்றும் விரிவாக்கலுக்காக ரூபா 35.3 பில்லியன்.

3. புகையிரதங்கள், புகையிரதப் பாதைகள் மற்றும் போக்குவரத்து வலையமைப்பு என்பவற்றின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுக்காக ரூபா 15.8 பில்லியன்.

4. நவீன தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துவதன் மூலம் விவசாய பெறுமதிச் சங்கிலியின் உற்;பத்தித்திறன் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக ரூபா 21.0 பில்லியன்.

5. உயர் எலஹெர, களுகங்கை, மொறகஹகந்த மாற்றல் கால்வாய் மற்றும் வடமேல் மாகாண கால்வாய் போன்ற கால்வாய்களை நிர்மாணிப்பதன் மூலம் விவசாய நோக்கங்களுக்காக நீர்ப்பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு ரூபா 43.0 பில்லியன்

6. கல்வித் தரத்தினை மேம்படுத்தும் நோக்கத்துடன் பாடசாலைகள், உயர்கல்வி நிறுவனங்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் ஆசிரிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் புனரமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக ரூபா 20.8 பில்லியன்

7. வைத்தியசாலைகள் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி, வைத்தியசாலைகளுக்கு உபகரணங்கள் வழங்குதல் என்பவற்றுக்காக ரூபா 16.4 பில்லியன்

8. மின்சாரம் வழங்குதல் தொடர்பான உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக ரூபா 14.7 பில்லியன்

9. மாகாண சபைகள் மற்றும் மாவட்டச் செயலகங்களின் கீழ் கிராமிய மற்றும் பிராந்திய பிரதேசங்களில் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக ரூபா 35.9 பில்லியன்

## 2.4 திறைசேரி செயற்பாடுகள்

பொது திறைசேரியின் காசுப் பாய்ச்சல் செயலாற்றுகை அரசாங்கத்தினால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட வருமானத்தினை அடிப்படையாகக் கொண்ட அரசிறை வளர்ச்சியின் பிரதிபலிப்பாக மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 3,377.2 பில்லியனுக்கு எதிராக வருமானம் மற்றும் ஏனைய பெறுகைகளாக திறைசேரி காசுப் பாய்ச்சலின் மூலம் ரூபா 3,188.3 பில்லியன் பெறப்பட்டது. இது 2024 இன் முதல் பத்து மாதங்களில் செய்யப்பட்ட மதிப்பீட்டில் 94.4 சதவீதமாகக் காணப்பட்டது. 2023 இன் அதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 2,375.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 34 சதவீத அதிகரிப்பொன்றாக உணரப்பட்டது. அதேவேளை மீண்டெழும் மற்றும் பொது முதலீடு இரண்டுக்குமான காசுப் பாய்ச்சல் 2023 இல் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 4,229 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 இன் முதல் 10 மாதத்தில் ரூபா 4,554.8 பில்லியனாக 7.7 சதவீதத்தினால் அதிகரித்தது.

வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் பயனாக 2024 ஒக்ரோபர் 31 அன்று தேறிய காசுப் பற்றாக்குறை 2023 ஒக்ரோபர் இறுதியில் காணப்பட்ட ரூபா 1,854.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,366.5 பில்லியனாக 26.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதே போன்று வருடத்தின் ஆரம்பத்தில் காணப்பட்ட சாதகமான வங்கி மீதியான ரூபா 401 பில்லியன் 2024 ஒக்ரோபர் இறுதியில் சாதகமான மீதியான ரூபா 1,005.1 பில்லியன் வரை அதிகரித்ததுடன், பல்தரப்பு கொடை வழங்குநர்கள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்திலிருந்து கடன்பெற்றதன் மூலம் பெறப்பட்ட டொலருக்குச் சமனான பெறுகை ரூபா 259 பில்லியனையும் உள்ளடக்கியிருந்தது.

**அட்டவணை 2.14 : அரசாங்க திறைசேரி காசுப்பாய்ச்சல் தொழிற்பாடுகள் மீதான கூற்று**

ரூபா.பில்லியன்

| விடயம் | சனவரி - ஒக்தோபர் | | |
|---|---|---|---|
| | 2023 | 2024 | |
| | உண்மையான | மதிப்பிடப்பட்ட | உண்மையான |
| ஆரம்ப காசு மீதி | -84.2 | 599.5 | 599.5 |
| வருமானம் மற்றும் பிற பெறுகைகளிலிருந்தான மொத்த காசு உட்பாய்ச்சல் | 2,375.5 | 3,377.2 | 3,188.3 |
| மீண்டெழும் செலவினங்களுக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல் | -3,633.0 | -4,113.3 | -3,734.7 |
| மூலதனக் கொடுப்பனவுகளுக்காக மொத்த காசு வெளிப்பாய்ச்சல்* | -596.5 | -1,464.1 | -820.1 |
| தேறிய காசு மிகை/ (பற்றாக்குறை) | -1,854.0 | -2,200.2 | -1,366.5 |
| மொத்த பெறுகை * | 10,091.4 | 3,355.6 | 2,940.0 |
| படுகடன் மீள்கொடுப்பனவு | -7,752.8 | -1,050.0 | -1,121.5 |
| தேறிய பெறுகை | 2,338.7 | 2,305.6 | 1,818.4 |
| சரிபடுத்தல் கணக்கு மீதி (TEB, தேறிய வைப்புகள் ஏனைய மாற்றல்கள் போன்றன) | 0.5 | – | -46.3 |
| **இறுதி காசு மீதி** | **401.0** | **704.9** | **1,005.1** |

*மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்*

**2024 ஒக்தோபர் 31 வரைக்குமான கருத்திட்ட, நிகழ்ச்சித் திட்ட கடன் பகிர்வுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.*

### அரசாங்க படுகடன் முகாமைத்துவம்

2024 நிதி வருடத்திற்கான பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட மொத்த கடன் பெறுகைகளின் வரையறை ரூபா 7,350 பில்லியனாகும். 2024 சனவரி 01 ஆம் திகதிகளிலிருந்து ஒக்ரோபர் 31 ஆம் திகதிவரை அரசாங்க கடன்களின் பயன்பாடு ரூபா 2,507.8 பில்லியனாகக் காணப்பட்டது (ஏட்டுப் பெறுமதி நியதி). இக்காலப்பகுதியில் செயலாற்றுகை மேம்பாட்டின் மூலம் உள்நாட்டு படுகடன் மீள் கொடுப்பனவின் ஒரு பகுதியாக நிதியளிப்பதற்கு வருமான மிகையிலிருந்து ரூபா 454 பில்லியனை வழங்க முடியுமாகவிருந்தது. காசுப்பாயச்சல் தொழிற்பாடுகளுக்கு நிதியளிப்பதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் பெறுகைகள் உள்ளடங்களாக மொத்த கடன்பெறுகை பயன்பாடு 2024 ஒக்ரோபர் 31 அன்றுள்ளவாறு முறையே ரூபா 2,104.8 பில்லியன் மற்றும் ரூபா 417.0 பில்லியனாகக் காணப்பட்டது.

**அட்டவணை 2.15 : 2024 சனவரி - ஒக்தோபர் வரையான மொத்த உள்நாட்டுக் கடன்கள்**

ரூபா. பில்லியன்

| மூலங்கள் | 2024 சன - ஒக் |
|---|---|
| திறைசேரி முறிகள் | 2,031.1 |
| திறைசேரி உண்டியல்கள் (தேறிய) | 73.7 |
| **மொத்தம்** | **2,104.8** |

*மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்*

**வரைபு 2.4 : மொத்த உள்நாட்டுப் படுகடன்கள் 2024 சனவரி - ஒக்தோபர்**




மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

## 2.5 வெளிநாட்டு நிதியுதவி

### மேன்நோக்கு

2024 ஆம் ஆண்டில், இலங்கை கடன் மறுசீரமைப்பு செயல்பாட்டில் குறிப்பிடத்தக்க மைல்கற்களை எட்டியது, இது பேரினப்பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கான பாதைக்கு அத்தியவசியமாக காணப்பட்டது. 2024 ஜூன் மாதத்தில், இலங்கையின் முக்கிய இருதரப்பு கடன் வழங்குநர்களின் அதிகாரப்பூர்வ கடன் வழங்குநர் குழு உறுப்பினர்களுடன் அரசாங்கம் அதன் கடன் மறுசீரமைப்பு குறித்து இறுதி உடன்பாட்டை எட்டியதுடன் சீனாவின் எக்ஸிம் வங்கிக்கு இலங்கை செலுத்த வேண்டிய கடன்கள் தொடர்பாக இருதரப்பு கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களிலும் கையெழுத்திட்டது2024 . செப்டம்பரில், இலங்கை அதன் சர்வதேச நாட்டுக்கான முறிகளை வைத்திருப்பவர்களுடன் சுமார் ஐஅடொ 14.2 பில்லியன் நாட்டுக்கான கடனை 2023) ஆம் ஆண்டின் இறுதியில் (மறுசீரமைப்பது குறித்து கொள்கையளவில ் உடன்பாடு எட்டப்பட்டது. இந்த முறிபரிமாற்றத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவது இலங்கை நாட்டுக்கான கடன் ் நிலைத்தன்மையை அடையவும் நாட்டின் பொருளாதார மீட்சியை துரிதப்படுத்தவும் உதவும்4 . வருட சர்வதேச நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டக் காலத்தில் இலங்கை சுமார் 9.5 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் சேவை கொடுப்பனவு குறைப்பைப் பெறுவதுடன், இலங்கையின் முறிகளின் கூப்பன் வீதத்தில் 31 சதவீதம் குறைப்பு 4.4 சதவீதமாக இருக்கும். மேலும5 ் ஆண்டுகளுக்கும் மேலான சராசரி முதிர்வு சுயவிவரத்தின் நீ;டிப்பும் இருக்கும். முறி பரிமாற்றத்தை வெற்றிகரமாக முடிப்பது முறிதாரர்களுடனான உறவுகளை இயல்பு நிலைக்கு கொண்டு வரும்.

### வெளிநாட்டு நிதியுதவி உறுதிமொழிகள்

2024 ஆம் ஆண்டின் ஜனவரி தொடக்கம் ஒக்டோபர் மாதம் வரை வெளிநாட்டு அபிவிருத்தி பங்காளிகள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களுடன் பதினாறு உடன்படிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் அரசாங்கம் 955.5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை வெளிநாட்டு நிதியுதவியாகப் பெற்றுள்ளது .இதில் 904.7 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் கடன்வடிவிலான உறுதிமொழிகளாகும் .நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு, மொத்த உறுதிமொழிகளில் 43 சதவீதம், அதாவது ஐக்கிய அமெரிக்க டொலர் 408 மில்லியன் வரவுசெலவுத்திட்ட ஆதரவு நோக்கங்களுக்காக திரட்டப்பட்டுள்ளது.

மொத்த கடன்களில், 511.5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் மற்றும் 393 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் முறையே உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றிலிருந்து வாங்கப்பட்ட கடன்களாகும்.

கடன் ஒப்பந்தங்களைத் தவிர, 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் அதிகாரப்பூர்வ அபிவிருத்தி உதவியின் கீழ் ஜப்பான் அரசு, அவுஸ்திரேலிய அரசு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் மேற்கொள்ளப்பட்ட எட்டு மானிய ஒப்பந்தங்கள் மூலம் 50.8 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் உறுதிமொழியாக மேற்கொள்ளப்பட்டன.

**அட்டவணை 2.16 : விதிமுறைகளுடன் வெளிநாட்டு நிதியுதவி கடப்பாடுகள் -2023 சனவரி 1 முதல் ஒக்தோபர் 31 வரை**

| அபிவிருத்தி பங்காளர்கள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்கள் | சாதன வகைகள் | ஒப்பந்த திகதி | கருத்திட்டம் / நிகழ்ச்சித்திட்டம் / சாதனப் பெயர் | கடப்பாட்டுத் தொகை (மில்லியன்) | | | | நிதிப் பெறுமானத்தில் | | | | வேறு முறையில் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | வட்டி | | | | | |
| | | | | நாணயம் | சாதன நாணயம் | ரூபா | ஐ.அ.டொ. | வகை | ஆண்டு வீதம் (%) | வரம்பு (100 அடிப்படைப்புள்ளிகள்) | பிற விதிப்பனவுகள் | கருணைக் காலம் (வருடங்கள்) | ஒப்பமிட்ட திகதியிலிருந்து முதிர்ச்சி / இடைக்கணக்கூடிய காலம் (வருடங்கள்) |
| **இருதரப்பு** | | | | | | | | | | | | | |
| அவுஸ்திரேலியா | மானியம் | 30/01/2024 | வளர்ச்சித் திட்டத்திற்கான நிர்வாகம் | அவுஸ்திரேலியா டொலர் | 30.0 | 6,307.2 | 19.8 | ஏற்புடையதல்ல | | | | | 3 |
| அவுஸ்திரேலியா | மானியம் | 30/01/2024 | சந்தை அபிவிருத்தி வசதித் திட்டம் 2ஆம் கட்டம் | அவுஸ்திரேலியா டொலர் | 12.1 | 2,543.9 | 8.0 | ஏற்புடையதல்ல | | | | | 3 |
| ஜப்பான் | மானியம் | 14/02/2024 | இலங்கையில் உள்ள மருத்துவமனைகளில் புதுப்பிக்கத்தக்க சக்தியைப் பயன்படுத்தி மின்சார விநியோகத்தை உறுதிப்படுத்தும் கருத்திட்டம் | ஜப்பான் யென் | 1,230.0 | 2,560.6 | 8.2 | ஏற்புடையதல்ல | | | | | 3 |
| ஜப்பான் | மானியம் | 18/03/2024 | வட மாகாணத்தில் உள்ள பிரதான மருத்துவமனைகளில் தாய் மற்றும் குழந்தை பராமரிப்புக்கான துணை உபகரணங்கள் | ஜப்பான் யென் | 404.0 | 827.2 | 2.7 | ஏற்புடையதல்ல | | | | | 3 |
| ஜப்பான் | மானியம் | 18/03/2024 | இலங்கை கடலோர காவற்படையின் எண்ணெய் கசிவு எதிர்வினை மற்றும் மேலாண்மையை மேம்படுத்துதல் | ஜப்பான் யென் | 1,000.0 | 2047.6 | 6.7 | ஏற்புடையதல்ல | | | | | 1 |
| ஜப்பான் | மானியம் | 18/03/2024 | வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மீனவர்களின் பாதுகாப்பிற்கான துணை உபகரணங்கள் | ஜப்பான் யென் | 200.0 | 409.5 | 1.3 | ஏற்புடையதல்ல | | | | | 3 |
| ஜப்பான் | மானியம் | 19/07/2024 | மனிதவள அபிவிருத்தி புலமைப்பரிசில் கருத்திட்டம் | ஜப்பான் யென் | 304.0 | 587.1 | 1.9 | ஏற்புடையதல்ல | | | | | 7 |
| **பலதரப்பு** | | | | | | | | | | | | | |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | கடன் | 25/03/2024 | சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்களை மேம்படுத்துவதற்கான நிதித் திட்டம் | ஐ.அ.டொ. | 100.0 | 30,354.9 | 100.0 | நிலையான | 2 | த.இ. | த.இ. | 5 | 25 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | கடன் | 5/8/2024 | மின்சாரத் துறை சீர்திருத்தங்கள் மற்றும் நிதி நிலைத்தன்மை கருத்திட்டம் (துணைக் கருத்திட்டம் 1) | ஐ.அ.டொ. | 100.0 | 30,208.9 | 100.0 | நிலையான | 2 | த.இ. | த.இ. | 5 | 25 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | கடன் | 20/09/2024 | நீர் வழங்கல் மற்றும் சுகாதார சீர்திருத்த திட்டம் - துணைத் திட்டம் 1 | ஐ.அ.டொ. | 100.0 | 30,455.0 | 100.0 | நிலையான | 2 | த.இ. | த.இ. | 5 | 25 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | கடன் | 20/09/2024 | மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுக் கருத்திட்டம் - பகுதி 3 | ஐ.அ.டொ. | 93.0 | 28,323.2 | 93.0 | மாறக் கூடியது | எஸ்ஓஎப் ஆர் | 0.7 | அர்ப்பணிப்பு கட்டணம் 0.15% | 8 | 29 |
| ஐரோப்பிய ஒன்றியம் | மானியம் | 12/8/2024 | சமூக ஒற்றுமை மற்றும் அமைதியை வலுப்படுத்தும் கருத்திட்டம் (SCOPE) - மேம்பாடு | யூரோ | 2.0 | 656.2 | 2.2 | ஏற்புடையதல்ல | | | | | 5 |
| சர்வதேச அபிவிருத்திச் சங்கம் | கடன் | 31/01/2024 | நிதித்துறை பாதுகாப்பு வலையை வலுப்படுத்தும் கருத்திட்டம் | வி.எ.உ. | 112.8 | 47,614.7 | 150.0 | நிலையான | 1.25 | த.இ. | அர்ப்பணிப்பு கட்டணம் 0.5%<br>சேவைக் கட்டணம் 0.75% | 5 | 30 |
| சர்வதேச அபிவிருத்திச் சங்கம் | கடன் | 10/9/2024 | ஆரம்ப சுகாதார அமைப்பை மேம்படுத்தும் கருத்திட்டம் (Credit A) | வி.எ.உ. | 38.0 | 15,368.1 | 51.2 | நிலையான | 1.25 | த.இ. | அர்ப்பணிப்பு கட்டணம் 0.5%<br>சேவைக் கட்டணம் 0.75% | 5 | 30 |
| சர்வதேச அபிவிருத்திச் சங்கம் | கடன் | 7/10/2024 | இரண்டாவது மீள்தன்மை, ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதாரத் திருப்பம் மேம்பாட்டுக் கொள்கை நிதியுதவி | வி.எ.உ. | 150.6 | 61,149.4 | 208.1 | நிலையான | 1.25 | த.இ. | அர்ப்பணிப்பு கட்டணம் 0.5%<br>சேவைக் கட்டணம் 0.75% | 5 | 30 |

| அபிவிருத்தி பங்காளர்கள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்கள் | சாதன வகைகள் | ஒப்பந்த திகதி | கருத்திட்டம் / நிகழ்ச்சித்திட்டம் / சாதனப் பெயர் | கடப்பாட்டுத் தொகை (மில்லியன்) | | | | நிதிப் பெறுமானத்தில் | | | | வேறு முறையில் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | வட்டி | | | | | |
| | | | | நாணயம் | சாதன நாணயம் | ரூபா | ஐ.அ.டொ. | வகை | ஆண்டு வீதம் (%) | வரம்பு (100 அடிப்படையிலான புள்ளிகள்) | பிற விதிப்பனவுகள் | கருணைக காலம் (வருடங்கள்) | ஒப்பமிட்ட திகதியிலிருந்து (முதிர்ச்சி / இடைக்கூடிய காலம் (வருடங்கள்) |
| மீள்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி | கடன் | 10/9/2024 | ஆரம்ப சுகாதார அமைப்பை மேம்படுத்தும் கருத்திட்டம் (Credit B- SML) | வி.எ.உ. | 75.9 | 30,695.8 | 102.3 | வட்டி இல்லை | | | அர்ப்பணிப்பு கட்டணம் 0.5% | 6 | 12 |
| **மொத்தம்** | | | | | | 290,109.2 | 955.5 | | | | | | |

*மூலம் : பொதுத் தனிசு (கடன்) முகாமைத்துவ அலுவலகம்*

*குறிப்பு : பாதுக்காப்பான ஓரிரவு நிதியுதவி விகிதம்*

*வேறுபட்ட நாணயங்களின் ஒதுக்கப்பட்ட நிதித் தொகைகள், ஒவ்வொரு ஒப்பந்த திகதியிலும் இலங்கை மத்திய வங்கியின் மற்றும் விகிதங்களின் அடிப்படையில் ஐ.அ.டொ. மற்றும் ரூபாவாக மாற்றப்பட்டுள்ளது.*

*SDR இனை ஐ. அ. டொலராக மாற்றுவதக்கு இலங்கை மத்திய வங்கியினால் முந்தைய மாத இறுதியில் நிலவிய SDR இன் மாற்று விகிதம் பயன்படுத்தப்பட்டது.*

## வெளிநாட்டு நிதி வழங்கல்கள் மற்றும் பயன்பாடு

2024 சனவரி 1 முதல் ஒக்டோபர் 31 வரையிலான காலகட்டத்தில் மொத்த வெளிநாட்டு நிதி வழங்கல்கள் 1,482.3 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தன .இதில்1,458.4*, மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் கடன்களாகவும், 23.9 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் மானியங்களாகவும் வழங்கப்பட்டுள்ளன.

மொத்த வழங்கல்களில் 37 சதவீதத்தை பதிவு செய்த ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அதிகபட்ச தொகை வழங்கப்பட்டது, அதைத் தொடர்ந்து உலக வங்கி (33% வீதம்) மற்றும் சர்வதேச நாணய நிதியம் (23 சதவீதம்) ஆகியவற்றுடன் கடன் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

மொத்தக் வழங்கல்களில் 50 சதவீத பெரும்பகுதி வரவு செலவுத்திட்ட ஆதரவுத் துறையில் பயன்படுத்தப்பட்டது, அதைத் தொடர்ந்து இவ்வழங்கல்களானது நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் துறைக்கு 8 சதவீதமாகவும், சிறு நடுத்தர தொழில் மேம்பாட்டுத் துறைக்கு 7 சதவீதமாகவும், நிதி காப்புறுதி துறைக்கு 5 சதவீதமாகவும் இருந்தன.

**அட்டவணை 2.17 : 2024 சனவரி முதல் ஒக்தோபர் 31 வரை வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் மானியங்கள் வழங்கல்கள்**

| அபிவிருத்தி பங்காளிகள்/ கடன்வழங்கும் முகவர்கள் | வழங்கல்கள்* (ஐ.அ.டொ. மில்லியன்) | | |
|---|---|---|---|
| | கடன் | மானியம் | மொத்தம் |
| **இருதரப்பு** | **45.5** | **4.7** | **50.2** |
| ஜப்பான் | 24.4 | 2.0 | 26.4 |
| சவூதி நிதி | 17.0 | - | 17.0 |
| ஜேர்மன் | | 2.7 | 2.7 |
| நெதர்லாந்து | 2.1 | - | 2.1 |
| கொரியா | 2.0 | - | 2.0 |
| **பலதரப்பு** | **1,412.8** | **19.3** | **1,432.1** |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 549.5 | 2.3 | 551.8 |
| உலக வங்கி | 469.1 | 17.0 | 486.1 |
| **சர்வதேச நாணய நிதியம் | 334.0 | - | 334.0 |
| ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி | 40.7 | - | 40.7 |
| ஒபெக் நிதி | 15.5 | - | 15.5 |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | 4.0 | - | 4.0 |
| **மொத்தம்** | **1458.4** | **23.9** | **1,482.3** |

*மூலம் : பொதுத் தனிசு (கடன்) முகாமைத்துவ அலுவலகம்*

** தற்காலிகமானது. மறுசீரமைக்கப்பட்ட கடன்களின் மூலதனமாக்கப்பட்ட செலுத்தப்படாத வட்டி மற்றும் இயல்புநிலை வட்டியான ஐ.அ.டொ 200.9 மில்லியன் இதில் சேர்க்கப்படவில்லை.*

*வெவ்வேறு நாணயங்களில் செய்யப்படும் பணப்பரிமாற்றங்களை ஐ.அ. டொலராக மாற்றுவதற்கு, இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட ஒவ்வொரு பணப்பரிமாற்ற திகதியிலும் நிலவும் குறியீட்டு மாற்று விகிதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

*** விசேட எடுப்பனவு உரிமத்தினை ஐ.அ.டொலராக மாற்றுவதற்கு, இலங்கை மத்திய வங்கியினால் வெளியிட்ட முந்தைய மாத இறுதிக்கு பயன்படுத்தப்படும் விசேட எடுப்பனவு உரிமத்தின்; மாத இறுதி மாற்று விகிதம் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

**வரைபு 2.5 : அபிவிருத்தி பங்காளிகள்/ கடன் வழங்கும் நிறுவனங்களின்படி 2024 ஜனவரி 1 முதல் ஒக்டோபர் 31 வரையிலான வழங்கல்கள் (ஐஅடொ மில்லியன்)**




*மூலம் :பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*

*பிற :ஜெர்மனி, நெதர்லாந்து, கொரியா*

**வரைபு 2.6 : பிரதான பொருளாதார துறைகளினால் 2024 ஜனவரி 1 முதல் ஒக்டோபர் 31 வரை பயன்படுத்தப்பட்ட வழங்கல்கள் (ஐஅடொ மில்லியன்)**




*மூலம் :பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*

*** பிற = கல்வி மற்றும் பயிற்சி, நீர்ப்பாசனம் மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாடு, விவசாயம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், காணி அபிவிருத்தி, மின்வளம், பெருந்தோட்டம்*

வெளிநாட்டு கடன் இருப்பு மற்றும் வெளிநாட்டு கடன் சேவை கொடுப்பனவுகள்

ஒக்டோபர் 2024 இறுதி நிலவரப்படி அரசாங்கத்தின் வெளிநாட்டு கடன் 38.2 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக இருந்தது.

2024 ஜனவரி 1 முதல் ஒக்டோபர் 31 வரையிலான மொத்த கடன் சேவை கொடுப்பனவுகள் 812.8 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக இருந்தன, இதில் 424.7 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் அசல்தொகையினை திருப்பிச் செலுத்துதலுக்காகவும், மீதமுள்ள 388.1 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள வட்டி செலுதுதலுக்காகவும் இருந்தன.

அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடன் நிறுத்தத்தின் இடைக்காலக் கொள்கையின்படி, இருதரப்பு மற்றும் வணிகக் கடன் வழங்குநர்களிடமிருந்து பெறப்பட்ட பாதிக்கப்பட்ட கடன்களின் வெளிப்புறக் கடனை செலுத்துவது 2022 ஏப்ரல் 12 முதலான இடைக் காலத்திற்கு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது .இதன்படி, 6095 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள்; அசல்தொகையாகவும்; 2986 மில்லியன ஐக்கிய அமெரிக்க டொலர்கள்; வட்டி தொகையாகவும்; செலுத்துதப்படாத கடன் கொடுப்பனவாக 2024 ஒக்டோபர் மாத இறுதியில் திரண்டிருந்தன.

---

தற்காலிகமானது, மத்திய அரசின் வெளிநாட்டுக் கடன் நிலுவையில் உள்ளவை மட்டுமே சித்தரிக்கப்பட்டுள்ளன.

- கடன் நிறுத்தக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து திரட்டப்பட்ட செலுத்தப்படாத அசல் தொகையும் இதில் அடங்கும்.
- குடியுரிமை பெறாதவர்கள் வைத்திருக்கும் திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல்கள்; சேர்க்கப்படவில்லை.
- ஐஎஸ்பீக்கள் உட்படுத்தப்பட்டுள்ளது .இருப்பினும், நிலுவையில் உள்ள ஐஎஸ்பீக்கள் அவற்றின் தற்போதைய குடியிருப்பாளர் / குடியுரிமை பெறாதவர்களின் அடிப்படையில் வகைப்படுத்தப்படவில்லை.
- சீனா எக்ஸிம் வங்கியால் வழங்கப்பட்ட 39 மறுசீரமைக்கப்பட்ட கடன்களின் வட்டி மற்றும் திருப்பிச் செலுத்தப்படாத வட்டியின் மூலதனமாக்கல் காரணமாக திரட்டப்பட்ட 200.9 மில்லியன் அமெரிக்க டொலர்களும் இதில் அடங்கும்.

[2]கடன் சேவை =அசல் கொடுப்பனவுகள் + வட்டி கொடுப்பனவுகள்

[3]மறுசீரமைப்பு விவாதங்களின் போது கடன் வழங்குநர்களுடன் சமரசம் செய்து கொள்ளப்படும்.

# பொருளாதார முன்னோக்குகள் | 03

### 3.1 மேன்நோக்கு

இலங்கையின் பொருளாதாரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தலையீடுகளைத் தொடர்ந்து ஸ்திரமடைந்துள்ளது. குறிப்பாக 2024 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க மறுமலர்ச்சியுடன் பொருளாதாரம் 5 சதவீதத்திற்கும் மேலாக விரிவடைந்ததுள்ளது. அதே வகையில் 2025 மற்றும் அதற்கு பிறகு ஒரு வலுவான மீட்பு எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக 2024 ஆம் ஆணடின் பிற்பகுதியில் செப்டெம்பர் 2022 இல் 70 சதவிகித உச்சத்தில் இருந்த பணவீக்கம் எதிர்மறையான பாதையில் குறைந்துள்ளது. பணவீக்கம் 2025 ஆம் ஆண்டில் நடுத்தர ஒற்றை இலக்க மட்டத்தில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2024 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த அலுவல்சார் இருப்பு 6.1 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியதுடன் மேலும் வலுவான சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணம் அனுப்புதலால் ஆதரிக்கப்பட்டு வெளிவாரித்துறையில் நடைமுறைக்கணக்கு 2024 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.4 சதவீத உபரியை நிலைநிறுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வலுவான வருமான அளவீட்டு நடைமுறைப்படுத்தல்களைத் தொடர்ந்து வரி வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12.4 சதவீதமாக அதிகரித்துள்ளது. 2025 ஆம் ஆண்டில் வரி வருமானம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 13.9 சதவீதத்தை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து பலப்படுத்தப்பட்ட வரி நிர்வாகத்தின் புதிய வருமானம் நடவடிக்கைகள் கடன் மறுசீரமைப்பின் இறுதியானது கடன் நிலைத்தன்மையை உறுதிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நிதி நிலைத்தன்மையை பராமரிப்பது வங்கித் துறையில் மூலதன இடையகங்களை அதிகரிக்க உதவியது. CCC+ மதிப்பீட்டில் பிரதிபலிக்கும் வகையில் முதலீட்டாளர்களின் நம்பிக்கை மேம்பட்டுள்ளது. முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கவும், உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும் மிகவும் தேவையான மற்றும் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஊழல் எதிர்ப்பு மற்றும் வளர்ச்சியை மேம்படுத்தும் நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுகின்றன.

**வரைபு 3.1 : மொ. உ. உ. வளர்ச்சி**




*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

இலங்கையின் பொருளாதாரம் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் காணப்பட்ட 4.5 சதவீதச் சுருக்கத்துடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 5.2 வீதத்தால் விரிவடைந்தது. பொருளாதாரத்தின் மூன்று பிரதான துறைகளும் சாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்தன. 2024 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் விவசாயத் துறை 1.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இதற்கு முக்கிய காரணம் தானியங்களின் வளர்ச்சி (அரிசி நீங்கலாக), விலங்கு உற்பத்தி, கடல் மீன்பிடித்தல் மற்றும் கடல் மீன்வளர்ப்பு போன்ற துணைத் துறைகளின் நேர்மறையான வளர்ச்சியாகும். 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 13.3 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் கைத்தொழில் துறை 11.2 சதவீதத்தால் கணிசமாக விரிவடைந்தது. இது கட்டுமானம் மற்றும் சுரங்கம் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது. சேவைத்துறையானது 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் காணப்பட்ட 1.3 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 2.6 சதவீதமாக விரிவடைந்தது. இதற்கு சுற்றுலா தொடர்பான நடவடிக்கைகளின் விரிவாக்கம் மற்றும் காப்பீடு முக்கிய காரணமாகும்.

**வரைபு 3.2 : மொ. உ. உற்பத்தி வகுதி - 2024 இன் முதல் ஒன்பது மாதங்கள்**




*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

2024 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில், வேலையின்மை விகிதம் அதே ஆண்டின் முதல் காலாண்டில் பதிவு செய்யப்பட்ட 4.5 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 4.7 சதவீதமாக அதிகரித்துள்ள. அதேவேளை, தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் காணப்பட்ட 47.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 47.8 சதவீதமாக சற்று அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி 2024 ஆம் ஆண்டில் அதன் இணக்கமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டைத் தொடர்ந்தது. 2024 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்தவாறு, மத்திய வங்கி அதன் இரட்டைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறையிலிருந்து ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறைக்கு நகர்ந்தது. 8.00 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்ட ஓரிரவு கொள்கை வீதமானது இனிமேல் அதன் நாணயக்கொள்கைநிலைப்பாட்டினைசமிக்ஞை

செய்வதற்கும் செயற்படுத்துவதற்கும் மத்திய வங்கியின் முதன்மை நாணயக் கொள்கைக் கருவியாகச் செயற்படும். இதன்படி, கொள்கை வட்டி வீதத்தில் பயனுள்ள குறைப்பானது நெகிழ்வுத்தன்மையுள்ள பணவீக்க இலக்கு (FIT) கட்டமைப்பின் தொழிற்பாட்டு இலக்காக தொடர்ந்தும் சேவையாற்றும் சராசரி நிறையிடப்பட்ட அழைப்பு பண வீதத்தின் (AWCMR) தற்போதைய மட்டத்திலிருந்து சுமார் 50 அடிப்படை புள்ளிகளாக இருக்கும்.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (CCPI, 2021=100) ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம் 2025 சனவரியில் -4.0 சதவீதமாக மேலும் வீழ்ச்சியடைந்தது. இதே வீரியத்தில், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (NCPI, 2021=100) ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம் 2024 திசெம்பரில் -2.0 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. மின்சாரம், எரிபொருள் மற்றும் போக்குவரத்து செலவுகளில் குறிப்பிடத்தக்க கீழ்நோக்கிய திருத்தங்கள் மற்றும் நிலையற்ற உணவுப் பொருட்களின் விலைகளின் வீழ்ச்சி காரணமாக முதன்மைப் பணவீக்கம் எதிர்வரும் மாதங்களில் எதிர்மறையான நிலையில் இருக்கும்.

தற்போதைய பொருளாதார மற்றும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளால் தூண்டப்பட்ட முதலீட்டாளர்களின் நம்பிக்கையின் அதிகரிப்பு காரணமாக பங்குச் சந்தை 2024 ஆம் ஆண்டில் வலுவான வளர்ச்சியை நிரூபித்தது. அனைத்து பங்கு விலைச் சுட்டெண் (ASPI, 1985 = 100) 2023 ஆம் ஆண்டு இறுதியில் 10,654 புள்ளிகளிலிருந்து 2024 ஆம் ஆண்டு இறுதியில் 15,945 புள்ளிகளுக்கு 49.6 சதவீதத்தால் அதிகரித்தது.

இலங்கையின் வெளிநாட்டுத் துறை 2024 இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் ஈர்க்கக்கூடிய செயற்திறனை வெளிப்படுத்தியமைக்கு ஏற்றுமதிகள், தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் சுற்றுலா என்பவற்றில் காணப்பட்ட வலுவான மீளெழுச்சி மற்றும் இறக்குமதிகளில் 10.4 சதவீத வளர்ச்சி என்பன ஆதரவளித்தன. 2024 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் ஏற்றுமதி வருமானம் 7.0 சதவீதத்தால் அதிகரித்து 11,670.2 மில்லியன் ஐ.அ.டொலராக பதிவான அதேவேளை, இறக்குமதிக்கான செலவினம் 10.4 சதவீதத்தால் அதிகரித்து 16,916.9 மில்லியன் ஐ.அ.டொலராக அதிகரித்துள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வருகையின் அதிகரிப்பின் காரணமாக 2024 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் சுற்றுலாத் துறையிலிருந்தான வருமானம் 56.0 சதவீதத்தால் அதிகரித்து 2,806.5 மில்லியன் ஐ.அ.டொலர்களாக அதிகரித்த அதேவேளை, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான வெளியேற்றங்களின் அதிகரிப்புடன் 2024 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 10.4 சதவீதத்தால் அதிகரித்து 5,961.6 மில்லியன் ஐ.அ.டொலர்களுக்கு அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் 1.908.0 மில்லியன் ஐ.அ.டொலர் உபரியுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில சென்மதி நிலுவை (BoP) 2,912.5 மில்லியன் ஐ.அ.டொலர் உபரியைப் பதிவு செய்தது.

கொழும்பு பங்குச் சந்தை 2023 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் தேறிய உட்பாய்ச்சலில் பதிவு செய்த 19.9 மில்லியன் ஐ.அ.டொலருடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 34.5 மில்லியன் ஐ.அ.டொலராக அதிகரித்துள்ளது. சீன மக்கள் வங்கியின் பரிமாற்ற வசதி உள்ளடங்கலாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் 6.1 பில்லியன் ஐ.அ.டொலர்களாகக் காணப்பட்ட அதேவேளை, 2024 ஆம் ஆண்டு இறுதியில் இலங்கை ரூபாவின் பெறுமதி ஐ.அ.டொலருக்கு எதிராக 10.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

### 3.2 பொருளாதார வளர்ச்சி

2024 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பொருளாதாரம் 5.2 சதவீதத்தால் விரிவடைந்தது, பொருளாதாரத்தின் மூன்று துறைகளிலும் அதாவது விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் ஆகியவற்றின் நேர்மறையான வளர்ச்சியிலிருந்து பயனடைந்தது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களின் 2.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் விவசாயத் துறை 1.9 சதவீதத்தால் ஓரளவு வளர்ச்சியடைந்தது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 13.3 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் கைத்தொழில் துறை 11.2 சதவீதத்தால் விரிவடைந்தது.

சேவைகள் துறையானது 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் காணப்பட்ட 1.3 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 2.6 சதவீதமாக விரிடைந்துள்ளது. பெறுமதி சேர் நியதிகளின் அடிப்டையில் 2023 ஆம் ஆண்டு முதல் ஒன்பது மாதங்களில் 1.2 சதவீதமாக சுருங்கிக் காணப்பட்ட வரிகள் குறைவான பொருட்கள் மீதான மானியங்கள் 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 8.8 சதவீதமாக அதிகரித்துள்ளது.

**அட்டவணை 3.1 : மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான வகுதிகள் (2015 நிலையான விலைகள்)**

ரூபா. மில்லியன்

| | துறை | 2021 | 2022(அ) | 2023(அ) | முதல் ஒன்பது மாதங்கள் 2023(அ) | முதல் ஒன்பது மாதங்கள் 2024(ஆ) | வளர்ச்சி (%) 2023(அ) | வளர்ச்சி (%) 2024(ஆ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **விவசாயம், காடாக்கம், மீன்பிடி** | **950,548** | **910,842** | **934,248** | **687,832** | **701,121** | **3.3** | **1.9** |
| 1 | தானியங்கள் (அரிசி நீங்கலாக) | 21,949 | 16,507 | 16,989 | 11,027 | 14,243 | -3.7 | 29.2 |
| 2 | நெல் | 107,359 | 94,730 | 113,690 | 74,476 | 75,672 | 31.2 | 1.6 |
| 3 | மரக்கறிகள் | 109,147 | 103,161 | 106,494 | 84,023 | 83,635 | 5.8 | -0.5 |
| 4 | கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய பருவ காலப் பயிர்கள் | 3,729 | 3,797 | 3,507 | 2,646 | 2,645 | -9.0 | -0.1 |
| 5 | பழங்கள் | 72,949 | 73,310 | 78,566 | 62,593 | 65,709 | 7.4 | 5.0 |
| 6 | எண்ணெய் பிரித்தெடுக்கும்; பழங்கள் (தேங்காய், இளநீர், பாம் விதைகள்) | 102,490 | 111,196 | 107,223 | 80,481 | 77,582 | -4.3 | -3.6 |
| 7 | தேயிலை (பச்சை இலை) | 74,604 | 62,867 | 61,912 | 46,895 | 47,014 | -2.8 | 0.3 |
| 8 | ஏனைய குடிபான பயிர்ச் செய்கை (கோப்பி, கொக்கோ முதலியன) | 1,352 | 1,229 | 1,135 | 852 | 831 | -7.6 | -2.4 |
| 9 | நறுமண, வாசனைத் திரவியங்கள், மருந்து மற்றும் மருந்தாக்கல் பயிர்கள். | 97,767 | 101,234 | 99,559 | 68998 | 71,220 | -0.1 | 3.2 |
| 10 | இறப்பர் | 26,464 | 23,871 | 22,025 | 18131 | 15,983 | 0.5 | -11.9 |
| 11 | ஏனைய குறுங்காலப் பயிர்கள் | 26,963 | 27,533 | 29,979 | 23108 | 21,946 | 10.5 | -5.0 |
| 12 | விலங்கு வேளாண்மை | 94,039 | 83,322 | 84,812 | 63021 | 70,317 | -1.6 | 11.6 |
| 13 | தாவர வளர்ச்சி | 813 | 965 | 727 | 624 | 512 | 15.2 | -18.0 |
| 14 | விவசாயத் துறைக்கான ஒத்தழைப்புச் செயற்பாடுகள் | 29,019 | 33,062 | 33,569 | 24514 | 24,170 | 2.1 | -1.4 |
| 15 | காடாக்கம், விறகு மற்றும் பலகை உற்பத்தி | 44,348 | 50,931 | 47,221 | 34,752 | 33,310 | -5.7 | -4.1 |
| 16 | சமுத்திர மீன் பிடிப்பு மற்றும் கடல் வாழ் உயிரின வளர்ப்பு | 112,814 | 95,447 | 100,099 | 72,506 | 76,830 | 3.7 | 6.0 |
| 17 | நன்நீர் மீன் பிடிப்பு மற்றும் நன்நீர் வாழ் உயிரின வளர்ப்பு | 24,742 | 27,682 | 26,739 | 19,184 | 19,503 | -5.0 | 1.7 |
| | **கைத்தொழில்** | **3,937,895** | **3,308,578** | **3,003,096** | **2,313,194** | **2,572,159** | **-13.3** | **11.2** |
| 18 | கனிய அகழ்வும் சுரங்க செயற்பாடுகளும்; | 287,969 | 198,612 | 154,291 | 117,894 | 143,471 | -28.1 | 21.7 |
| 19 | உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி தயாரிப்புகள் | 1,014,150 | 869,373 | 899,777 | 682,512 | 725,331 | 0.8 | 6.3 |
| 20 | பிடவை, தைக்கப்பட்ட ஆடை மற்றும் தோற்பொருட்களுடன் சம்பந்தப்பட்ட உற்பத்தி தயாரிப்புக்கள் | 473,911 | 511,863 | 450,498 | 394,878 | 432,124 | 12.0 | 9.4 |
| 21 | மரம் மற்றும் தயாரிப்புக்கள், தக்கை, தளபாடங்கள் நீங்கலாக | 35,579 | 29,758 | 23,807 | 15,797 | 17,608 | -25.9 | 11.5 |
| 22 | காகிதங்கள் உற்பத்தி, ஊடக உற்பத்திகளின் மீள் உற்பத்தி மற்றும் அச்சடித்தல் | 56,811 | 52,069 | 47,259 | 36,925 | 38,132 | -8.3 | 3.3 |
| 23 | கற்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்தி தயாரிப்புக்கள் | 15,492 | 6,474 | 21,895 | 16,170 | 13,981 | 194.2 | -13.5 |
| 24 | இரசாயன உற்பத்திகள் மற்றும் அடிப்படை மருந்தாக்கல் உற்பத்தி தயாரிப்புக்கள் | 95,793 | 82,349 | 82,949 | 63,082 | 72,654 | -3.6 | 15.2 |
| 25 | இறப்பர் மற்றும் பிளாஸ்திரிக் உற்பத்திகள் | 97,436 | 67,505 | 56,157 | 44,734 | 48,483 | -21.4 | 8.4 |
| 26 | ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்தி தயாரிப்புக்கள் | 119,973 | 85,182 | 84,671 | 60,129 | 61,972 | -7.4 | 3.1 |
| 27 | அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருத்தப்பட்ட உலோக உற்பத்தி தயாரிப்புகள் | 81,174 | 58,780 | 60,303 | 34,723 | 44,160 | -16.9 | 27.2 |
| 28 | இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரண உற்பத்திகள்; | 73,090 | 59,181 | 50,229 | 33,394 | 34,564 | -19.4 | 3.5 |

ரூபா. மில்லியன்

| | துறை | 2021 | 2022(அ) | 2023(அ) | முதல் ஒன்பது மாதங்கள் 2023(அ) | 2024(ஆ) | வளர்ச்சி (%) 2023(அ) | 2024(ஆ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 29 | தளபாட உற்பத்திகள் | 82,694 | 60,837 | 56,089 | 46,027 | 48,069 | -14.1 | 4.4 |
| 30 | ஏனைய தயாரிப்புகள், உபகரணங்கள், சானங்கள்; பொறுத்தல் மற்றும் பழுது பார்த்தல் | 101,048 | 79,088 | 66,747 | 53,505 | 57,905 | -18.3 | 8.2 |
| 31 | மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் | 188,924 | 178,057 | 174,018 | 129,591 | 151,007 | -5.9 | 16.5 |
| 32 | நீர் சேகரிப்பு, துப்புரவாக்கல் மற்றும் விநியோகம் | 13,099 | 14,059 | 11,590 | 9,561 | 10,058 | -14.4 | 5.2 |
| 33 | கழிவு நீர், கழிவு அகற்றல் செயற்பாடுகள் | 27,992 | 28,070 | 27,955 | 21,334 | 21,245 | -0.8 | -0.4 |
| 34 | நிர்மாணம் | 1,172,761 | 927,321 | 734,859 | 552,938 | 651,395 | -26.5 | 17.8 |
| | **சேவைகள்** | **7,410,705** | **7,218,205** | **7,200,438** | **5,256,350** | **5,393,082** | **-1.3** | **2.6** |
| 35 | மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் | 1,675,083 | 1,675,534 | 1,677,928 | 1,266,181 | 1,278,860 | 0.0 | 1.0 |
| 36 | களஞ்சிய சாலை உள்ளடங்கலாக பொருட்கள் மற்றும் நபர்கள் போக்குவரத்து | 1,325,233 | 1,364,679 | 1,418,410 | 1,024,454 | 1,051,235 | 4.4 | 2.6 |
| 37 | தபால், கூரியர்/ விரைவுத் தபால் செயற்பாடுகள் | 18,886 | 19,780 | 20,349 | 14,632 | 15,827 | 2.4 | 8.2 |
| 38 | தங்குமிடம், உணவு மற்றும் குடிபான சேவை செயற்பாடுகள் | 130,743 | 166,030 | 209,140 | 152,457 | 194,668 | 21.2 | 27.7 |
| 39 | நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஒளிபரப்புச் செயற்பாடுகள், ஒலி/ ஒளி தயாரிப்புக்கள் | 42,161 | 37,350 | 36,551 | 27,598 | 28,640 | -6.1 | 3.8 |
| 40 | தொலைத்தொடர்பு | 131,952 | 140,524 | 137,403 | 102,573 | 106,590 | -3.3 | 3.9 |
| 41 | தகவல் தொ.து. நிகழ்ச்சித் திட்ட மதியுரை மற்றும் இணைச் செயற்பாடுகள் | 243,971 | 238,455 | 187,341 | 142,283 | 153,343 | -22.5 | 7.8 |
| 42 | நிதிச் சேவை செயற்பாடுகள் மற்றும் துணை நிதிச் சேவைகள் | 596,106 | 529,907 | 477,047 | 355,732 | 369,575 | -14.6 | 3.9 |
| 43 | காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவு | 148,658 | 78,728 | 99,192 | 71,477 | 80,822 | 19.3 | 13.1 |
| 44 | வதிவிட உரித்து உள்ளடங்களாக ஆதன விற்பனை | 630,570 | 554,456 | 521,465 | 386,206 | 401,648 | -9.4 | 4.0 |
| 45 | தொழில்வாய்மை சேவைகள் | 301,890 | 248,468 | 254,360 | 175,503 | 179,064 | -2.0 | 2.0 |
| 46 | பொது நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு, கட்டாய சமூகப் பாதுகாப்பு | 621,834 | 629,031 | 618,542 | 443,156 | 429,853 | -1.5 | -3.0 |
| 47 | கல்வி | 290,475 | 302,435 | 307,740 | 230,175 | 235,151 | 2.1 | 2.2 |
| 48 | மனித நல செயற்பாடுகள், வதிவிடப் பராமரிப்பு மற்றும் சமூகப் பணிச் செயற்பாடுகள் | 260,482 | 237,677 | 236,092 | 171,283 | 169,910 | -1.7 | -0.8 |
| 49 | ஏனைய தனிப்பட்ட சேவைகள் செயற்பாடுகள் | 992,662 | 995,154 | 998,877 | 692,637 | 697,895 | 0.5 | 0.8 |
| | **மொத்த பெறுமதி சேர்க்கப்பட்டவை, அடிப்படை விலைகளில்** | **12,299,149** | **11,437,626** | **11,137,782** | **8,257,375** | **8,666,362** | **-4.7** | **5.0** |
| | **(+) பொருட்கள் மீதான வரிகள் கழி - மானியங்கள்** | **826,356** | **723,576** | **743,954** | **536,372** | **583,456** | **-1.2** | **8.8** |
| | **மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ.உ.உ) சந்தை விலைகளில்** | **13,125,505** | **12,161,202** | **11,881,736** | **8,793,747** | **9,249,818** | **-4.5** | **5.2** |

*மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

*(அ) திருத்தப்பட்ட*

*(ஆ) தற்காலிகமானது*

## விவசாயம்

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.6 சதவீதத்தைக் கொண்ட விவசாயத் துறை, 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் காணப்பட்ட 3.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 1.9 சதவீத சிறிதளவு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இதற்கு முக்கியமாக தானியங்களை வளர்ப்பது (அரிசி தவிர), விலங்கு உற்பத்தி, கடல் மீன்பிடித்தல் மற்றும் கடல் மீன்வளர்ப்பு மற்றும் பழங்களை வளர்ப்பது போன்ற உபதுறைகளின் நேர்மறையான வளர்ச்சி காரணமாகும். எவ்வாறாயினும், இறப்பர் வளர்ப்பு மற்றும் தாவர இனப்பெருக்கம் போன்ற உப துறைகள் இக்காலப்பகுதியில் கணிசமாக சுருங்கின.

**வரைபு 3.3 : விவசாயத்துறை வகுதி - 2024 இன் முதல் ஒன்பது மாதங்கள்**




*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

## நெல்

அரிசி உப துறையின் வளர்ச்சி 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் காணப்பட்ட 31.2 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 1.6 சதவீதத்தினால் சிறிதளவு விரிவடைந்தது. 2023/2024 பெரும்போகத்திற்கான நெல் உற்பத்தி, 2024 மார்ச் மாத இறுதியில் அறிவிக்கப்பட்ட விதைப்பு அளவின் அடிப்படையில், 2.63 மில்லியன் மெட்ரிக் தொன் நெல் ஆகும், இது சுமார் 1.65 மில்லியன் மெட்ரிக் தொன் அரைத்த அரிசியாகும். இது 2022/2023 பெரும்போகத்தை விட 2.4 சதவீதம் குறைவாகும். எவ்வாறாயினும், 2024 செப்டெம்பர் மாத இறுதியில் அறிவிக்கப்பட்ட விதைப்பு அளவின் அடிப்படையில், 2024 ஆம் ஆண்டு சிறுபோகத்தில் எதிர்பார்க்கப்படும் நெல் உற்பத்தி 2.02 மில்லியன் மெட்ரிக் தொன் ஆகும். இது 2023 ஆம் ஆண்டு சிறுபோகத்தை விட 11.4 சதவீத அதிகரிப்பாகும். 2024/2025 பெரும்போகத்தின் நெல் உற்பத்தி 2.56 மில்லியன் மெட்ரிக் தொன் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை

பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை உற்பத்தி 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் காணப்பட்ட 2.8 சதவீத ஓரளவு வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 0.3 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 191.7 மில்லியன் கிலோகிராமாக காணப்பட்ட தேயிலை உற்பத்தி 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 195.6 மில்லியன் கிலோகிராமாக இருந்தது. பாதகமான வானிலை நிலைமைகளுக்கு மத்தியிலும் இரசாயன உரத் தடை நீக்கப்பட்டதன் மூலம் தேயிலைக் கைத்தொழிலின் படிப்படியான மீட்சியே இந்த சிறிய விரிவாக்கத்திற்கு காரணமாக இருக்கலாம். 2023 இன் இதே காலப்பகுதியில் 0.5 சதவீத சிறிதளவு அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இறப்பர் துணைத் துறை 11.9 சதவீதத்தினால் சுருங்கியது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 53.8 மில்லியன் கிலோகிராமாக காணப்பட்ட இறப்பர் உற்பத்தி 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 49.6 மில்லியன் கிலோவாக குறைவடைந்துள்ளது. மேலும், எண்ணெய் பிரித்தெடுக்கப்படும் பழங்கள் (தேங்காய், செவ்விளநீர், எண்ணெய் பனை) துணைத் துறையும் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் காணப்பட்ட 4.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 3.6 சதவீதமாகக் காணப்பட்டது. அதன்படி, 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 2,381 மில்லியன் காய்களாக காணப்பட்ட தென்னை உற்பத்தியானது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 4.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 2,286 மில்லியன் காய்களாக இருந்தது.

## தானியங்கள், காய்கறிகள், பழங்கள், மசாலாப் பொருட்கள் மற்றும் மருந்துப் பயிர்கள்

தானியங்களின் வளர்ச்சி (அரிசி நீங்கலாக) உபதுறையானது 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதக் காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 29.2 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்துள்ளது. இது இரசாயன உரத்தின் அதிகரித்த கிடைக்கும் தன்மையைப் பிரதிபலிக்கிறது. பெறுமதி சேர் நியதிகளின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 5.8 சதவீத அதிகரிப்புடன் காணப்பட்ட காய்கறி உப துறையின் வளர்ப்பு 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 0.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், பழங்களின் வளர்ச்சி 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாத கால 7.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 5.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. வாசனைத் திரவியங்கள், நறுமணப் பொருட்கள், மருந்து

மற்றும் மருந்துப் பயிர்களின் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி 2024 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 3.2 சதவீதத்தால் ஓரளவு அதிகரித்துள்ளது.

### மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு

கடல் மீன்பிடி மற்றும் கடல் மீன்வளர்ப்பு உப துறையானது பெறுமதி சேர்க்கப்பட்ட நியதிகளின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் காணப்பட்ட 3.7 சதவீத ஓரளவு விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 6.0 சதவீதத்தினால் விரிவடைந்தது. பெறுமதி சேர்க்கப்பட்ட நியதிகளில் நன்னீர் மீன்பிடித்தல் மற்றும் நன்னீர் மீன்வளர்ப்பு உப துறையும் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் காணப்பட்ட 5.0 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 1.7 சதவீதத்தால் ஓரளவு வளர்ந்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 294 மில்லியன் கிலோகிராமாக காணப்பட்ட மொத்த மீன் உற்பத்தி (கடல் மற்றும் உள்நாட்டு) 2024 ஆம் ஆண்டு இதே காலகட்டத்தில் சற்று அதிகரித்து 308 மில்லியன் கிலோகிராமாக இருந்தது. விலங்கு உப துறையின் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட 1.6 சதவீத இறுதிநிலை சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 11.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

### கைத்தொழில் மற்றும் உற்பத்தி

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 26.4 சதவீதத்தைக் கொண்டுள்ள கைத்தொழில் துறையானது 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதக் காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 13.3 சதவீத எதிர்மறை வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 11.2 சதவீத நேர்மறையான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. நிர்மாணம், சுரங்க அகழ்வு மற்றும் கல்லுடைத்தல், அடிப்படை உலோகங்கள் மற்றும் புனையப்பட்ட உலோக உற்பத்திகள், இரசாயன பொருட்கள் மற்றும் அடிப்படை மருந்தாக்கல் உற்பத்திகளின் உற்பத்தி, மற்றும் மின்சாரம், வாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் உப துறைகளில் முறையே 17.8 சதவீதம், 21.7 சதவீதம், 27.2 சதவீதம், 15.2 சதவீதம் மற்றும் 16.5 சதவீதம் என்ற நேர்மறை வளர்ச்சியை பதிவுசெய்த குறிப்பிடத்தக்க விரிவாக்கமே இதற்குக் காரணமாக அமைந்தது.

உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள் (6.3 சதவீதம்), புடவை உற்பத்தி, ஆடை அணிதல் மற்றும் தோல் தொடர்பான உற்பத்திகள் (9.4 சதவீதம்), தளபாடம் நீங்கலாக மரம் மற்றும் தக்கை உற்பத்திகள் (11.5 சதவீதம்), கடதாசி உற்பத்திகள், ஊடக உற்பத்திகளின் அச்சிடுதல் மற்றும் மீள் உற்பத்தி (3.3 சதவீதம்), இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் உற்பத்திகள் உற்பத்தி (8.4 சதவீதம்), ஏனைய உலோகமல்லாத கனிய உற்பத்திகளின் உற்பத்தி (3.1 சதவீதம்), இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் உற்பத்தி (3.5 சதவீதம்), தளபாட உற்பத்தி (4.4 சதவீதம்), ஏனைய உற்பத்தி (8.2 சதவீதம்) மற்றும் நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் (5.2 சதவீதம்) ஆகியவை 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2024 இன் முதல் ஒன்பது மாதங்களில் விரிவடைந்தன.

எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் கோக் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் உற்பத்தி 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 194.2 சதவீத வலுவான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 13.5 சதவீதத்தால் சுருங்கியது. மேலும், கழிவுநீர் அகற்றல், கழிவு சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் நடவடிக்கைகளும் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் காணப்பட்ட வெறும் 0.8 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 0.4 சதவீதத்தால் சிறிதளவு சுருங்கியது.

**வரைபு 3.4 : கைத்தொழில் துறை வகுதி - 2024 இன் முதல் ஒன்பது மாதங்கள்**




*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

**வரைபு 3.5 : தயாரிப்புத் துறை வகுதி - 2024 இன் முதல் ஒன்பது மாதங்கள்**




*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 11,740 GWh ஆகக் காணப்பட்ட மொத்த மின் உற்பத்தி 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 7.0 சதவீதத்தால் 12,565 GWh ஆக அதிகரித்தது. தொழில்துறை நடவடிக்கைகளின் விரிவாக்கம் காரணமாக 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் காணப்பட்ட 3,185 GWh உடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் தொழில்துறைகளுக்கான மின்சார விற்பனை 8.6 சதவீதம் அதிகரித்து 3,459 GWh ஆக அதிகரித்துள்ளது.

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 2,552 GWh ஆக காணப்பட்ட நீர் மூலம் மின்சார உற்பத்தி 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 50.8 சதவீதம் அதிகரித்து 3,848 GWh ஆக இருந்தது. நிலக்கரி மூலம் மின்சார உற்பத்தியும் 2024 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 12.5 சதவீதம் அதிகரித்து 4,397 GWh ஆக அதிகரித்துள்ளது. இது 2023 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 3,909 GWh ஆக இருந்தது. இருப்பினும், எரிபொருள் எண்ணெய் மூலம் மின்சார உற்பத்தி 36.3 சதவீதம் கணிசமாகக் குறைந்துள்ளது. மேலும் காற்று மூலம் மின்சார உற்பத்தியும் 2024 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 3.2 சதவீதம் குறைந்துள்ளது.

## சேவைகள்

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 56.7 சதவீதத்திற்கு பங்களிப்பு செய்த சேவைகள் துறை, 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் காணப்பட்ட 1.3 சதவீத சிறிய வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 2.6 சதவீத விளிம்பு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. தங்குமிடம், உணவு மற்றும் குடிபான சேவை நடவடிக்கைகள், மற்றும் காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியளிப்பு ஆகிய உப துறைகளின் விரிவாக்கம் முறையே 27.7 சதவீதத்தினாலும் 13.1 சதவீதத்தாலும் அதிகரித்ததே இதற்கு முக்கிய காரணமாகும்.

மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத்தின் துணைத் துறைகள் (1.0 சதவீதம்), பண்டசாலை உள்ளிட்ட பொருட்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்து (2.6 சதவீதம்), தபால் மற்றும் கூரியர் நடவடிக்கைகள் (8.2 சதவீதம்), நிரலாக்க மற்றும் ஒளிபரப்பு நடவடிக்கைகள் மற்றும் ஆடியோ வீடியோ தயாரிப்பு (3.8 சதவீதம்), தொலைத்தொடர்பு (3.9 சதவீதம்), தகவல் தொழில்நுட்ப நிரலாக்க ஆலோசனை மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள் (7.8 சதவீதம்), நிதி சேவை நடவடிக்கைகள் மற்றும் துணை நிதி சேவைகள் (3.9 சதவீதம்), குடியிருப்பு உரிமை உட்பட ரியல் எஸ்டேட் நடவடிக்கைகள் (4.0 சதவீதம்), தொழில்முறை சேவைகள் (2.0 சதவீதம்), கல்வி (2.2 சதவீதம்) மற்றும் பிற தனிப்பட்ட சேவை நடவடிக்கைகள் (0.8 சதவீதம்) ஆகியன 2024 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் விரிவடைந்தன. இருப்பினும், பொது நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு (3.0 சதவீதம்) மற்றும் மனித சுகாதார நடவடிக்கைகள், குடியிருப்பு பராமரிப்பு மற்றும் சமூகப் பணி நடவடிக்கைகள் (0.8 சதவீதம்) என்பன 2024 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் சுருக்கத்தைப் பதிவு செய்தன.

**வரைபு 3.6 : சேவைத் துறை வகுதி - 2024 இன் முதல் ஒன்பது மாதங்கள்**




*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

## போக்குவரத்து மற்றும் துறைமுக சேவைகள்

2024 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் போக்குவரத்துத் துறை 2.6 சதவீதமாக விரிவடைந்தது. 2023 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 17,547 ஆக இருந்த புதிய வாகன பதிவுகளின் எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 179.6 சதவீதம் அதிகரித்து 49,053 ஆக அதிகரித்துள்ளது.

முச்சக்கர வண்டிகள் (8.2 சதவீதம்), இரட்டை நோக்கு வாகனங்கள் (101.6 சதவீதம்), மோட்டார் சைக்கிள்கள் (239.1 சதவீதம்), சரக்கு போக்குவரத்து வாகனங்கள் (192.3 சதவீதம்) மற்றும் தரை வாகனங்கள் (52.8 சதவீதம்) ஆகியவற்றின் பதிவு 2024 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளதுடன், பேருந்துகளின் பதிவு (79.3 சதவீதம்) மற்றும் மோட்டார் கார்களின் பதிவு (13.4 சதவீதம்) 2024 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வீழ்ச்சியடைந்துள்ளது.

கையாளப்பட்ட மொத்த கொள்கலன்கள் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 5.8 மில்லியன் இருபது அடி சமமான அலகுகளாக (TEUs) இருந்து 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 9.9 சதவீதத்தால் 5.3 மில்லியனாக அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் உள்நாட்டு கொள்கலன் கையாளுதல் 19.8 சதவீதமும், சரக்கூடுமாற்றல் கொள்கலன் கையாளுதல் 6.7 சதவீதமும், மறு கொள்கலன் கையாளுதல் 64.7 சதவீதமும் அதிகரித்துள்ளது.

கையாளப்பட்ட மொத்த சரக்குகளின் எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 13.7 சதவீதம் அதிகரித்து 89.5 மில்லியன் மெட்ரிக் தொன்னாக இருந்ததுடன் இது 2023 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 78.7 மில்லியன் மெட்ரிக் தொன்னாக இருந்தது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில்

42.5 மில்லியன் மெட்ரிக் தொன்னாக இருந்த சரக்கு வெளியேற்றம் 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 15.9 சதவீதம் அதிகரித்து 49.2 மில்லியன் மெட்ரிக் தொன்னாக இருந்தது. ஏற்றப்பட்ட சரக்குகள் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலகட்டத்தில் 36.2 மில்லியன் மெட்ரிக் தொன்னிலிருந்து 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 11.1 சதவீதம் அதிகரித்து 40.2 மில்லியன் மெட்ரிக் தொன்னாக அதிகரித்துள்ளது.

### தொலைத்தொடர்பு

தொலைத்தொடர்பு உப துறையின் பெறுமதி சேர் சேவைகள் 2024இன் முதல் ஒன்பது மாதங்களில் 3.9 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. கையடக்க தொலைபேசிகள் உட்பட தொலைபேசி ஊடுருவல், 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 100 நபர்களுக்கு 142.6 ஆக இருந்து 0.5 சதவீதத்தினால் அதிகரித்து 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 100 நபர்களுக்கு 143.3 ஆக இருந்தது. மொபைல் இணைய இணைப்புகள் உட்பட இணைய சந்தாதாரர்களின் எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 4.0 சதவீதம் அதிகரித்து 22.9 மில்லியனாக உள்ளது. 2024 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் நிலையான தொலைபேசிகளின் எண்ணிக்கையும் 5.7 சதவீதத்தால் அதிகரித்துள்ள அதேவேளை கையடக்கத் தொலைபேசிகளின் எண்ணிக்கை இதே காலகட்டத்தில் 0.5 சதவீதத்தால் சிறிதளவு குறைந்துள்ளது.

**அட்டவணை 3.2 : சேவைத் துறையில் தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்**

| சுட்டி | 2020 | 2021 | 2022 | 2023 | 2023 | 2024(அ) |
|---|---|---|---|---|---|---|
| **துறைமுக சேவைகள்** | | | | | **சன - ஒக்** | **சன - ஒக்** |
| வருகை தந்த கப்பல்கள் (இல) | 4,337 | 4,180 | 4,073 | 4,809 | 4,016 | 3,780 |
| மொத்த சரக்கு கையாடல் (மெ.தொ '000) | 102,908 | 109,356 | 100,376 | 103,794 | 86,481 | 99,794 |
| மொத்த கொள்கலன் கையாடல் (TEU '000) | 6,855 | 7,249 | 6,862 | 6,950 | 5,796 | 6,461 |
| இடைமாற்றம் செய்யப்பட்டவை (TEU '000)(ஆ) | 5,765 | 6,050 | 5,832 | 5,754 | 4,844 | 5,248 |
| **தொலைதொடர்பாடல் சேவை** | | | | | **சன - செப்** | **சன - செப்** |
| நிலையான தொலைபேசி இணைப்பு (எண்.'000) | 2,613 | 2,852 | 2,651 | 2,308 | 2,389 | 2,526 |
| கையடக்க தொலைபேசி (எண். '000) | 28,739 | 29,959 | 28,838 | 28,986 | 29,035 | 28,884 |
| கம்பியல்லா தொலைபேசி (எண். '000) | 1,367 | 1,587 | 1,388 | 1,163 | 1,211 | 1,449 |
| இணைய, மின்னஞ்சல் வசதி (எண் '000) | 17,524 | 22,106 | 21,668 | 22,864 | 22,084 | 22,958 |
| **சுகாதாரத் துறை** | | | | | | |
| தனியார் வைத்தியசாலைகள் | 217 | 243 | 250 | த.இ. | த.இ. | த.இ. |
| அரசாங்க வைத்தியசாலைகள் | 609 | 618 | 617 | த.இ. | த.இ. | த.இ. |
| கட்டில்களின் எண்ணிக்கை (அரசாங்கம்) | 77,121 | 78,228 | 78,228 | த.இ. | த.இ. | த.இ. |
| வைத்தியர்களின் எண்ணிக்கை (அரசாங்கம்) | 18,218 | 20,209 | 21,045 | த.இ. | த.இ. | த.இ. |
| தாதிகள் எண்ணிக்கை (அரசாங்கம்) | 37,133 | 39,091 | 40,775 | த.இ. | த.இ. | த.இ. |
| **நிதித் துறை** | | | | | **செப் இறுதி** | **செப் இறுதி** |
| வங்கிக் கிளைகள், பிற விற்பனை நிலையங்கள் | 7,406 | 7,369 | 7,378 | 7,522 | 7,523 | 7,526 |
| பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் (உ) | 40 | 39 | 37 | 33 | 33 | 32 |
| விசேட குத்தகைக் கம்பனிகள் | 3 | 3 | 1 | 1 | 1 | **1** |
| பாவனையிலுள்ள கடன் அட்டைகள் | 1,984,525 | 2,054,985 | 2,054,896 | 1,987,857 | 1,989,403 | 1,950,204 |
| **சுற்றுலாத்துறை** | | | | | **சன - நவ** | **சன - நவ** |
| சுற்றுலாப் பயணிகளின் வருகை | 507,704 | 194,495 | 719,978 | 1,487,303 | 1,276,951 | 1,804,873 |
| சுற்றுலா சம்பாத்தியம் (ஐ.அடொ.மில்.) | 682 | 507 | 1,136 | 2,068 | 1,799 | 2,807 |
| அறை பயன்பாட்டு விகிதம் | 15.0 | 18.6 | 30.4 | 39 | த.இ. | த.இ. |
| **போக்குவரத்து சேவைகள் (புதிய பதிவு)** | | | | | **சன - ஒக்** | **சன - ஒக்** |
| பேருந்துகள் | 578 | 281 | 404 | 685 | 598 | 120 |
| கார்கள் | 21,021 | 3,495 | 1,489 | 1,816 | 1,505 | 1,405 |
| லொறிகள்(இ) | 3,941 | 4,432 | 1,833 | 523 | 378 | 995 |
| மோட்டார் சைக்கிள்கள் | 151,634 | 8,011 | 9,060 | 20,200 | 14,698 | 49,463 |
| முச்சக்கர வண்டிகள் | 7,150 | 2,093 | 36 | 60 | 30 | 62 |
| நில வாகனங்கள் மற்றும் இழுவை வண்டிகள் (ஈ) | 8,302 | 14,764 | 6,929 | 4,020 | 3,096 | 4,175 |
| ஏனைய (ஊ) | 10,002 | 774 | 760 | 586 | 361 | 874 |

*மூலம் : இலங்கை மத்திய வங்கி, போக்குவரத்துத் திணைக்களம், இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்கு**

*(அ) தற்காலிக*

*(ஆ) மீள்புதுப்பிக்கப்பட்டமை உள்ளடங்கலாக*

*(இ) பிரத்தியேக நோக்கம் கொண்ட வாகனங்கள், மோட்டார் லொறி மற்றும் ஏனைய லொறிகள் உள்ளடங்கியுள்ளது.*

*(ஈ) நில வாகனங்கள், கைநில வாகனங்கள், இழுவை வண்டிகள் உள்ளடங்கலாக*

*(உ) வரையறுக்கப்பட்ட ETI நிதி கம்பனி நீங்கலாக*

*(ஊ) இரட்டை பயன்பாட்டு வாகனங்கள், குவாட்ரிசைக்கிள்கள் மற்றும் மோட்டார் வீடுகள் ஆகியவை அடங்கும்.*

## வேலையின்மை

2024 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில், வேலையின்மை விகிதம் இதே ஆண்டின் முதல் காலாண்டில் பதிவு செய்யப்பட்ட 4.5 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 4.7 சதவீதமாக அதிகரித்ததுள்ளது. 2024 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் பெண்கள் மற்றும் ஆண்களிடையே வேலையின்மை விகிதம் முறையே 7.0 சதவீதம் மற்றும் 3.6 சதவீதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையில், 2024 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் இளைஞர் வேலையின்மை விகிதம் (வயது 15 - 24 வயது) 25.4 சதவீதமாக இருந்தது, இது அனைத்து வயதினரிடமும் மிக உயர்ந்த வேலையின்மை விகிதத்தைக் குறிக்கிறது. அனைத்து வயதினரிடையேயும், பெண்களிடையே வேலையின்மை ஆண்களை விட அதிகமாக உள்ளது.

இதற்கிடையில், தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 47.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 47.8 சதவீதமாக சற்று அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் பெண்கள் மற்றும் ஆண்களிடையே தொழிலாளர் பங்கேற்பு விகிதம் முறையே 30.0 சதவீதம் மற்றும் 68.1 சதவீதமாக பதிவாகியுள்ளது.

**வரைபு 3.7 : தொழிலாளர் பங்கேற்பு விகிதம் மற்றும் வேலையின்மை விகிதம்**




**அட்டவணை 3.3 : சுற்றுலாத் துறையின் செயலாற்றுகை**

| மாதம் | சுற்றுலாப் பயணிகளின் வருகை | | | | | சுற்றுலா சம்பாத்தியம் (ஐ.அ.டொ.மில்.) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2020 | 2021 | 2022 | 2023 | 2024(அ) | 2020 | 2021 | 2022 | 2023 | 2024(அ) |
| சனவரி | 228,434 | 1,682 | 82,327 | 102,545 | 208,253 | 307.0 | 4.4 | 151.7 | 153.5 | 341.8 |
| பெப்ரவரி | 207,507 | 3,366 | 96,507 | 107,639 | 218,350 | 278.9 | 8.8 | 169.4 | 161.6 | 345.7 |
| மார்ச் | 71,370 | 4,581 | 106,500 | 125,495 | 209,181 | 95.9 | 11.9 | 161.2 | 188.8 | 338.4 |
| ஏப்ரல் | 0 | 4,168 | 62,980 | 105,498 | 148,867 | 0.0 | 10.9 | 108.7 | 148.2 | 225.7 |
| மே | 0 | 1,497 | 30,207 | 83,309 | 112,128 | 0.0 | 3.9 | 43.5 | 100.0 | 154.0 |
| ஜூன் | 0 | 1,614 | 32,856 | 100,388 | 113,470 | 0.0 | 4.2 | 45.0 | 122.9 | 151.1 |
| ஜூலை | 0 | 2,429 | 47,293 | 143,039 | 187,810 | 0.0 | 6.3 | 85.0 | 219.0 | 328.3 |
| ஆகஸ்ட் | 0 | 5,040 | 37,760 | 136,405 | 164,609 | 0.0 | 13.1 | 67.9 | 210.5 | 282.1 |
| செப்தெம்பர் | 0 | 13,547 | 29,802 | 111,938 | 122,140 | 0.0 | 35.3 | 40.5 | 152.2 | 181.0 |
| ஒக்தோபர் | 0 | 22,771 | 42,026 | 109,199 | 135,907 | 0.0 | 59.3 | 54.9 | 136.7 | 185.6 |
| நவம்பர் | 0 | 44,294 | 59,759 | 151,496 | 184,158 | 0.0 | 115.4 | 81.0 | 205.3 | 272.9 |
| டிசெம்பர் | 393 | 89,506 | 91,961 | 210,352 | 248,592 | 0.5 | 233.3 | 127.4 | 269.3 | 362.1 |
| **மொத்தம்** | **507,704** | **194,495** | **719,978** | **1,487,303** | **2,053,465** | **682.4** | **506.8** | **1,136.3** | **2,068.0** | **3,168.6** |

*மூலம் : இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை*

*(அ) தற்காலிகமானது*

**அட்டவணை 3.4 : மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான பகிர்வு (%)**

| துறை | 2019 | 2020 | 2021 | 2022(ஆ) | 2023(ஆ) | முதல் ஒன்பது மாதங்கள் 2023(ஆ) | முதல் ஒன்பது மாதங்கள் 2024(அ) |
|---|---|---|---|---|---|---|---|
| **விவசாயம்** | **0.5** | **-0.9** | **1.0** | **-4.2** | **2.6** | **3.3** | **1.9** |
| தேயிலை | -3.3 | -6.5 | 9.8 | -15.7 | -1.5 | -2.8 | 0.3 |
| நெல் | 6.2 | 7.7 | -11.8 | -11.8 | 20.0 | -29.2 | 1.6 |
| இறப்பர் | -7.8 | 0.2 | 9.9 | -9.8 | -7.7 | 0.5 | -11.9 |
| தானியங்கள் | -9.0 | 59.8 | 2.8 | -24.8 | 2.9 | -3.7 | 29.2 |
| மரக்கறிகள் | -2.9 | 8.9 | -1.7 | -5.5 | 3.2 | 5.8 | -0.5 |
| கால்நடைகள் | -4.5 | -3.7 | 8.2 | -11.4 | 1.8 | -1.6 | 11.6 |
| காடாக்கம், விறகு | -3.3 | -1.3 | 4.1 | 14.8 | -7.3 | -5.7 | -4.1 |
| மீன்பிடி | -4.4 | -17.0 | 1.5 | -10.5 | 3.0 | 1.7 | 5.1 |
| **கைத்தொழில்** | **-4.1** | **-5.3** | **5.7** | **-16.0** | **-9.2** | **-13.3** | **11.2** |
| அகழ்வு, சுரங்கமறுத்தல் | -1.2 | -10.9 | 1.4 | -31.0 | -22.3 | -28.1 | 21.7 |
| தயாரிப்புச் செயற்பாடுகள் | 2.0 | -2.6 | -46.2 | -12.2 | -3.2 | -6.4 | 7.6 |
| ஏனைய கைத்தொழில்கள் | 4.3 | -1.3 | 2.2 | -4.3 | -3.0 | -5.8 | 13.6 |
| நிர்மாணம் | -14.8 | -9.4 | 4.4 | -20.9 | -20.8 | -26.5 | 17.8 |
| **சேவைகள்** | **2.9** | **-1.9** | **3.4** | **-2.6** | **-0.2** | **-1.3** | **2.6** |
| மொத்த, சில்லறை வர்த்தகம் | 3.6 | 0.9 | 1.5 | 0.0 | 0.1 | 0.0 | 1.0 |
| போக்குவரத்து, களஞ்சியசாலை | 2.0 | -6.1 | 0.9 | 3.0 | 3.9 | 4.4 | 2.6 |
| தங்குமிட வசதி, உணவுச் சேவைச் செயற்பாடுகள் | -6.0 | -40.8 | 1.7 | 27.0 | 26.0 | 21.2 | 27.7 |
| தகவல், தொடர்பாடல் | 17.6 | 15.0 | 11.0 | 6.5 | -2.2 | -3.3 | 3.9 |
| நிதி, காப்புறுதிச் செயற்பாடுகள் | 1.2 | 7.0 | 10.3 | -18.3 | -5.3 | -10.4 | 5.4 |
| ஆதன விற்பனை செயற்பாடுகள் | 5.1 | -1.0 | 4.4 | -12.1 | -6.0 | -9.4 | 4.0 |
| தொழிற்துறை சேவைகள் | 5.4 | -3.3 | 4.9 | -17.7 | 2.4 | -2.0 | 2.0 |
| கல்வி, தேகாரோக்கியம், சமூகப் பணிச் செயற்பாடுகள் | 4.6 | 2.5 | 3.7 | -2.0 | 0.7 | 0.5 | 0.9 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு | 0.8 | 1.7 | 0.9 | 1.2 | -1.7 | -1.5 | -3.0 |
| ஏனைய சேவைகள் (சுய சேவைகள் நீங்கலாக) | 2.0 | -6.6 | 0.9 | 0.3 | 0.4 | 0.5 | 0.8 |
| **மொ.உ.உ.** | **-0.2** | **-4.6** | **4.2** | **-7.3** | **-2.3** | **-4.5** | **5.2** |

*மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

*(அ) தற்காலிகமானது*

*(ஆ) திருத்தியது*

### 3.3 நாணயத் துறை அபிவிருத்திகள்

2024 சனவரியில், இலங்கை மத்திய வங்கி துணைநில் வைப்பு வசதி வீதம் (SDFR), துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் மற்றும் நியதி ஒதுக்கு விகிதம் என்பவற்றினை முறையே 9.00 சதவீதம், 10.00 சதவீதம் மற்றும் 2.00 சதவீதம் என 2023 நவம்பர் மாதத்தில் நிர்ணயிக்கப்பட்ட அதே மட்டத்தில் தொடர்ந்தும் பேணியது. 2024 மார்ச்சில், துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் தலா 50 அடிப்படை புள்ளிகளால் முறையே 8.50 சதவீதம் மற்றும் 9.50 சதவீதமாகக் குறைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, 2024 ஜூலையில், துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் முறையே 8.25 சதவீதம் மற்றும் 9.25 சதவீதமாக தலா 25 அடிப்படை புள்ளிகளால் குறைக்கப்பட்டன, அதே நேரத்தில் நியதி ஒதுக்கு விகிதம் 2.00 சதவீதமாக இருந்தது.

2024, நவம்பர் 27ஆம் திகதியிலிருந்து இலங்கை மத்திய வங்கி அதன் இரட்டைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறையிலிருந்து ஒற்றைக் கொள்கை வட்டி வீத முறைமைக்கு மாறியது. இதன் விளைவாக, 8.00 சதவீதமாக அமைக்கப்பட்ட ஓரிரவு கொள்கை வீதம் (OPR), இப்போது மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைப்பாட்டை சமிக்ஞை செய்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் முதன்மை கருவியாக செயல்படும். இதற்கு மேலதிகமாக, ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறைக்கு மாறுவதுடன், துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் ஆகியவை இனிமேலும் மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களாகக் கருதப்படமாட்டாது. துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம், இலங்கை மத்திய வங்கியுடனான ஒரே இரவில் கொடுக்கல் வாங்கல்களுக்காக பங்கேற்பு நிறுவனங்களுக்கு தொடர்ந்து கிடைக்கக்கூடிய நிலையான வசதிகளுக்கு பொருந்தக்கூடிய விகிதங்கள் இப்போது ± 50 அடிப்படை புள்ளிகள் வித்தியாசத்துடன் ஓரிரவு கொள்கை வீதத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, துணைநில் வைப்பு வசதி வீதம் 7.50 சதவீதமாகவும், துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் 8.50 சதவீதமாகவும் அமைக்கப்படும்.

2023 ஒக்டோபரில் 15.18 சதவீதமாகக் காணப்பட்ட சராசரி நிறையிடப்பட்ட கடன்வழங்கல் வீதம் (AWLR), 2024 நவம்பரில் 309 அடிப்படைப் புள்ளிகளால் 12.09 சதவீதமாகக் குறைந்த அதேவேளை 2023 நவம்பரில் 12.11 சதவீதமாக இருந்த சராசரி நிறையிடப்பட்ட வைப்பு வீதம் (AWDR) 2024 நவம்பரில் 452 அடிப்படைப் புள்ளிகளால் 7.59 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

விரிந்த பண ($M_{2b}$) வழங்கல் 2024 சனவரியின் ஆரம்பத்தில் ரூ.13,189 பில்லியனிலிருந்து 2024 ஒக்டோபர் இறுதியில் ரூ.14,009 பில்லியனுக்கு 6.2 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளையில் தனியார் துறைக்கான கொடுகடன் 2024 சனவரியின் ஆரம்பத்தில் ரூ.7,314 பில்லியனிலிருந்து 2024 ஒத்தோபர் இறுதியில் ரூ.7,871 பில்லியனுக்கு 6.9 சதவீதத்தால் அதிகரித்தது. எவ்வாறாயினும், அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் 2024 சனவரியின் ஆரம்பத்தில் ரூபா 8,285 பில்லியனிலிருந்து 2024 ஒத்தோபர் இறுதியில் ரூபா 7,954 பில்லியனுக்கு 4.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

**வரைபு 3.8 : விளைவு வீதங்கள், நாணய சராசரி தனியார்த்துறை கடன் வளர்ச்சி**




*மூலம்: இலங்கை மத்திய வங்கி*




*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

## பணவீக்கம்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100) ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம் 2024 செத்தெம்பரில் -0.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து 2015 செப்தெம்பருக்கு பின்னர் முதல் முறையாக எதிர்மறையான நிலையை அடைந்தது. இது முக்கியமாக எரிசக்தி விலைகளில் சாதகமான திருத்தம், வலுவான உண்மையான பரிமாற்ற வீதம் மற்றும் வழங்கல் பக்க மேம்பாடுகள் ஆகியவற்றால் உந்தப்பட்டது. பணவீக்கம் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் எதிர்மறையாகத் தோன்றி 2024 திசெம்பரில் -1.7 சதவீத பணவீக்கத்தைப் பதிவுசெய்ததுடன் 2025 சனவரியில் -4.0 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. அதே வீரியத்தில், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் (NCPI, 2021=100) ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கமும் 2024 செத்தெம்பரில் -0.2 இற்கு வீழ்ச்சியடைந்ததுடன், 2024 திசெம்பரில் -2.0 சதவீத பணவீக்கத்தைப் பதிவு செய்து ஆண்டின் எஞ்சிய காலப்பகுதிக்கு எதிர்மறையாகவே காணப்பட்டது. பணவீக்கத்தின் வீழ்ச்சி முக்கியமாக மின்சார கட்டணம், மற்றும் எரிபொருள் மற்றும் எல்பி எரிவாயு விலைகளில் கீழ்நோக்கிய திருத்தங்களால் தூண்டப்பட்டது. அதேபோல், அதிகரித்த உணவு உற்பத்தி, உலகளாவிய விநியோகச் சங்கிலிகளில் மீட்சி மற்றும் மந்தமான தேவை நிலைமைகள் காரணமாக உணவு விலைகளில் ஏற்பட்ட மிதமான தன்மையும் பணவீக்கத்தின் குறைவுக்கு பங்களித்தன.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100) ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான பொருளாதாரத்திலுள்ள உணவு, சக்தி மற்றும் போக்குவரத்துக் குழுக்களின் நிலையற்ற விடயங்களை தவிர்ப்பதன் மூலம் கீழமைந்த பணவீக்கப் போக்குகளைப் பிரதிபலிக்கும் மையப் பணவீக்கம் 2024 சனவரியில் பதிவுசெய்யப்பட்ட 2.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2025 சனவரியில் 1.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறான மையப்பணவீக்கமும் (2021=100) 2024 சனவரியின் 2.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 திசெம்பரில் 1.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

முதன்மைப் பணவீக்கம் முன்னர் கணிக்கப்பட்டதை விட அதிக வீழ்ச்சியுடன் எதிர்வரும் மாதங்களில் எதிர்மறையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எரிசக்தி விலைகள் மற்றும் போக்குவரத்து செலவுகளில் குறிப்பிடத்தக்க கீழ்நோக்கிய சரிசெய்தல்கள், அத்துடன் நிலையற்ற உணவு விலைகளில் குறைப்பு ஆகியவை இதற்கு முதன்மையாக காரணமாகும். இலங்கை மத்திய வங்கி 2025 நடுப்பகுதியில் பணவீக்கம் சாதகமாக மாறும் என்றும் பொருத்தமான கொள்கை சீராக்கங்களின் ஆதரவுடன் மத்திய காலத்தில் இலக்காக வைக்கப்பட்ட 5 சதவீதத்தை நோக்கி படிப்படியாக

ஒன்றுபடுமெனவும் எதிர்பார்க்கின்றது. மையப் பணவீக்கம் எதிர்வரும் மாதங்களில் மேலும் மெதுவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் மத்திய காலத்தில் மையப் பணவீக்கம் உறுதிப்பாட்டினை அடைவதுடன் சீரான நிலையை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**வரைபு 3.9 : தலைக்குரிய பணவீக்கம், மைய பணவீக்கம், உணவுப் பணவீக்க அசைவுகள் (அடிப்படை 2013=100)**




*மூலம்: தொகை மதிப்பு மற்றும் புள்விபரவியல் திணைக்களம்*
*(2022 ஜன முதல் 2023 ஜன வரை அடிப்படை ஆண்டு 2013 = 100, 2023 பெப் முதல் அடிப்படை ஆண்டு 2021 = 100)*

**அட்டவணை 3.5 : நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை : 2021 = 100)**

| மாதம் | 2023 (அடிப்படை ஆண்டு 2021=100) | | | | 2024 (அடிப்படை ஆண்டு 2021=100) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | முதன்மை பணவீக்கம் (வருடத்திற்கு வருடம்) | | மைய பணவீக்கம் (வருடத்திற்கு வருடம்) | | முதன்மை பணவீக்கம் (வருடத்திற்கு வருடம்) | | மைய பணவீக்கம் (வருடத்திற்கு வருடம்) | |
| | கொ.நு.வி.சு | தே.நு.வி.சு | கொ.நு.வி.சு | தே.நு.வி.சு | கொ.நு.வி.சு | தே.நு.வி.சு | கொ.நு.வி.சு | தே.நு.வி.சு |
| சனவரி | 54.2* | 53.2 | 45.6* | 52.0 | 6.4 | 6.5 | 2.2 | 2.2 |
| பெப்ரவரி | 50.6 | 53.6 | 43.6 | 50.1 | 5.9 | 5.1 | 2.8 | 2.7 |
| மார்ச் | 50.3 | 49.2 | 39.1 | 44.2 | 0.9 | 2.5 | 3.1 | 3.4 |
| ஏப்பிரல் | 35.3 | 33.6 | 27.8 | 31.8 | 1.5 | 2.7 | 3.4 | 3.0 |
| மே | 25.2 | 22.1 | 20.3 | 21.6 | 0.9 | 1.6 | 3.5 | 3.1 |
| யூன் | 12.0 | 10.8 | 9.8 | 11.3 | 1.7 | 2.4 | 4.4 | 3.9 |
| யூலை | 6.3 | 4.6 | 5.9 | 6.3 | 2.4 | 2.5 | 4.4 | 3.0 |
| ஆகஸ்ட் | 4.0 | 2.1 | 4.6 | 4.1 | 0.5 | 1.1 | 3.6 | 2.3 |
| செப்தெம்பர் | 1.3 | 0.8 | 1.9 | 1.7 | -0.5 | -0.2 | 3.3 | 1.9 |
| ஒக்தோபர் | 1.5 | 1.0 | 1.2 | 0.6 | -0.8 | -0.7 | 3.0 | 1.7 |
| நவம்பர் | 3.4 | 2.8 | 0.8 | 0.8 | -2.1 | -1.7 | 2.7 | 1.5 |
| திசெம்பர் | 4.0 | 4.2 | 0.6 | 0.9 | -1.7 | -2.0 | 2.7 | 1.3 |

*மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

** அடிப்படை ஆண்டு 2013=100*

### 3.4 பங்குச் சந்தை

பொருளாதார மீட்சி மற்றும் நிதிச் சந்தைகளின் நெகிழ்திறன் ஆகியவற்றில் மேம்பட்ட முதலீட்டாளர்களின் நம்பிக்கையுடன் பங்குச் சந்தை அதன் வளர்ச்சி வேகத்தை வெளிப்படுத்தியது. அனைத்து பங்கு விலைச் சுட்டெண் (ASPI, 1985 = 100) 49.6 சதவீத அதிகரிப்பைக் காட்டியது, இது 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 10,654 புள்ளிகளில் இருந்து 2024 டிசம்பர் இறுதியில் 15,944 புள்ளிகளாக அதிகரித்தது. தேர்தலுக்குப் பிறகு, 2024 நவம்பர் 13 அன்று அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 2022 சனவரி 31 இற்குப் பிறகு முதல் முறையாக 13,000 மதிப்பெண்களைத் தாண்டியது. 2024 திசெம்பர் 23 அன்று வரலாற்றில் முதல் முறையாக அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 15,000 மதிப்பெண்களைத் தாண்டியதால் பங்குகள் வலுவாக உள்ளன.

அதேவேளை, மிகவும் திரவ பங்குகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தரநிலை மற்றும் புவர்ஸ் ஸ்ரீலங்கா 20 (S&P SL20, 2004 = 1,000) சுட்டெண்ணும் 2023 திசெம்பர் இறுதியில் 3,068 புள்ளிகளிலிருந்து 2024 திசெம்பர் இறுதியில் 58.5 சதவீதத்தால் 4,862 புள்ளிகளாக கணிசமாக அதிகரித்தது. S&P SL20 திசெம்பர் 31 அன்று அதிகபட்சமாக 4,862 புள்ளிகளை எட்டியது மற்றும் 2024 சனவரி 31 அன்று 2,896 ஆக குறைந்தது.

2023 திசெம்பர் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 4,248 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 திசெம்பர் இறுதியில் சந்தை மூலதனமயமாக்கல் 34.0 சதவீதத்தினால் ரூபா 5,695 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்தது. குறிப்பிடத்தக்க வகையில், வெளிநாட்டு முதலீடுகள் 2023 திசெம்பர் மாத இறுதியில் ரூபா 62.9 மில்லியனிலிருந்து 465.8 சதவீதத்தால் ரூபா 355.9 மில்லியனாக குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது. அதேபோன்று, பங்குகளின் வெளிநாட்டு விற்பனையும் 2023 திசெம்பர் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 41.2 மில்லியனுக்கு மாறாக, 2024 திசெம்பர் இறுதியில் 448.5 சதவீதத்தால் ரூபா 226.0 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்தது.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை (CSE) 2023 திசெம்பர் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 642.4 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 திசெம்பர் இறுதியில் ரூபா 7,756.4 மில்லியனுக்கு தினசரி புரள்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிவுசெய்தது.

**அட்டவணை 3.6 : மூலதனச் சந்தை அசைவுகள்**

| குறிகாட்டிகள் | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | நவம்பர் இறுதியில் 2023 | நவம்பர் இறுதியில் 2024(அ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| அனைத்து பங்கு விலைச்சுட்டெண் (1985 = 100) | 6,052 | 6,129 | 6,774 | 12,226 | 8,490 | 10,654 | 10,594 | 13,189 |
| S&P SL 20 குறிகாட்டி | 3,135 | 2,937 | 2,638 | 4,233 | 2,636 | 3,068 | 3,010 | 3,905 |
| சந்தை மூலதனவாக்கம் (ரூ. பில்லியன்) | 2,840 | 2,851 | 2,961 | 5,489 | 3,847 | 4,249 | 4,261 | 4,782 |
| விற்பனை நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 297 | 289 | 283 | 296 | 290 | 290 | 290 | 284 |
| வருடாந்த புரள்வு (ரூ. பில்லியன்) | 200 | 171 | 397 | 1173 | 687 | 411 | 388 | 405 |
| வெளிநாட்டு விற்பனைகள் (ரூ. மில்லியன்) | 100,316 | 68,272 | 104,165 | 86,689 | 36,863 | 37,088 | 34,810 | 52,441 |
| வெளிநாட்டு கொள்வனவுகள் (ரூ. மில்லியன்) | 77,067 | 56,537 | 52,889 | 39,410 | 67,488 | 41,451 | 39,826 | 42,524 |
| தேறிய கொள்வனவுகள் (ரூ. மில்லியன்) | -23,249 | -11,735 | -51,276 | -47,279 | 30,625 | 4,363 | 5,017 | -9,917 |

*மூலங்கள் : கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம், இலங்கை மத்திய வங்கி*

*(அ) தற்காலிகமானது*

### 3.5 வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள்

ஏற்றுமதிகளிலிருந்தான அதிகரித்த வருமானங்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான உயர்ந்த உட்பாய்ச்சல்கள் மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருமானங்கள் என்பவற்றிலிருந்து நன்மையடைந்த இலங்கையின் வெளிநாட்டுத் துறை 2024இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் சாதகமான உத்வேகத்தை வெளிப்படுத்தியது. ஏற்றுமதி வருமானங்கள் 7.0 சதவீதத்தால் அதிகரித்து 11,670.2 மில்லியன் ஐ.அ.டொலராக அதிகரித்த வேளையில், இறக்குமதிக்கான செலவினம் 10.4 சதவீதத்தால் அதிகரித்து 16,916.9 மில்லியன் ஐ.அ.டொலராக மாறியது. இது 2023 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் 4,413.6 மில்லியன் ஐ.அ.டொலரிலிருந்து 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையை ஐ.அ.டொலர் 5,246.7 மில்லியனாக விரிவுபடுத்தியது. எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் மாதாந்த ஏற்றுமதி வருமானம் ஐ.அ.டொலர் 1.0 பில்லியனை விஞ்சியது. சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக 2023 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் 1,798.7 மில்லியன் ஐ.அ.டொலர்களிலிருந்து 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான வருமானம் 56.0 சதவீதத்தால் அதிகரித்து 2,806.5 மில்லியன் ஐ.அ.டொலராக அதிகரித்துள்ளது. அதேவேளை, 2023 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் 5,399.8 மில்லியன் ஐ.அ.டொலர்களாக காணப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்கள் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 10.4 சதவீதத்தால் அதிகரித்து 5,961.6 மில்லியன் ஐ.அ.டொலர்களாகக் காணப்பட்டது.

2023 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் 1.908.0 மில்லியன் அமெரிக்க டொலர் உபரியுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் சென்மதிநிலுவை (BoP) 2,912.5 மில்லியன் அமெரிக்க டொலர் உபரியைப் பதிவு செய்தது. கொழும்பு பங்குச் சந்தை 2024 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் தேறிய உட்பாய்ச்சலில் 34.5 மில்லியன் அமெரிக்க டொலர் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 19.9 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. அரச பிணையங்கள் சந்தைக்கான தேறிய பாய்ச்சல்கள் 2023 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் 232.7 மில்லியன் ஐ.அ.டொலர் உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 197.3 மில்லியன் ஐ.அ.டொலர் வெளிப்பாய்ச்சலாகப் பதிவுசெய்யப்பட்டன. சீன மக்கள் வங்கியின் பரிமாற்ற வசதி உட்பட மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (GOR) 2024 திசெம்பர் மாத இறுதியில் 6.1 பில்லியன் ஐ.அ.டொலராக காணப்பட்டது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் அதிகரிப்பானது 2024 நவம்பரில் தேறிய அடிப்படையில் ஐ.அ.அ.டொலர் 327 மில்லியனாகக் காணப்பட்ட உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகளினால் உந்தப்பட்டிருந்தது. மேலும், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெறப்பட்ட நிதிகள் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் அதிகரிப்புக்கு பங்களித்தன. அதேவேளை, 2024 நவம்பர் 29ஆம் திகதி இலங்கை ரூபாவின் பெறுமதி ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக 11.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

**வரைபு 3.10 : வர்த்தக மீதி, நாணய மாற்று வீத அசைவு**







*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

## ஏற்றுமதி

ஏற்றுமதிகளிலிருந்தான வருமானங்கள் 2023 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் காணப்பட்ட 10,908.9 மில்லியன் ஐ.அ.டொலர்களுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 7.0 சதவீதத்தால் அதிகரித்து 11,670.2 மில்லியன் ஐ.அ.டொலர்களாக அதிகரித்தமைக்கு பொருளாதார மறுமலர்ச்சியுடன் கைத்தொழில் மற்றும் விவசாய ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த வருமானங்களில் ஏற்பட்ட அதிகரிப்பே பிரதானமான காரணமாகும். மொத்த ஏற்றுமதி வருமானத்தில் கைத்தொழில் ஏற்றுமதி வருமானங்கள் 78.0 சதவீதத்திற்கு பங்களிப்பு செய்த அதேவேளை, விவசாய மற்றும் கனிய வள ஏற்றுமதி வருமானங்கள் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் முறையே 21.6 சதவீதமாகவும் 0.2 சதவீதமாகவும் இருந்தன.

கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருமானங்கள் 2023 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் காணப்பட்ட 8,486.8 மில்லியன் ஐ.அ.டொலரிலிருந்து 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 7.3 சதவீதத்தால் அதிகரித்து 9,105.3 மில்லியன் ஐ.அ.டொலராக அதிகரித்தது. இதற்கு முக்கியமாக புடவை மற்றும் ஆடைகள், பெற்றோலிய உற்பத்திகள், இறப்பர் உற்பத்திகள் மற்றும் உணவு, பானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள் ஆகியவற்றிலிருந்து அதிகரித்த ஏற்றுமதி வருமானங்கள் காரணமாகும். இதன்படி, 2024 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் புடவை மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருமானம் 3.9 சதவீதத்தால் அதிகரித்து 4,613.4 மில்லியன் ஐ.அ.டொலர்களாகவும், பெற்றோலிய உற்பத்திகளிலிருந்து ஏற்றுமதி வருமானங்கள் 104.0 சதவீதத்தினால் அதிகரித்து 975.5 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவும் காணப்பட்டன. தேயிலை, வாசனைத் திரவியங்கள், தெங்கு மற்றும் காய்கறிகளிலிருந்து அதிகரித்த வருமானங்களுடன் விவசாய ஏற்றுமதிகளிலிருந்தான வருமானங்கள் 2023 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் காணப்பட்ட 2,359.9 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரிலிருந்து 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 6.7 சதவீதத்தால் அதிகரித்து 2,517.9 மில்லியன் ஐ.அ.டொலராக அதிகரித்துள்ளது. தேயிலை ஏற்றுமதி அளவுகளின் அதிகரிப்புடன் 2024 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் தேயிலை ஏற்றுமதியின் வருமானங்கள் 8.8 சதவீதத்தால் அதிகரித்து 1,198.8 மில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 1,304.3 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. இதற்கு மேலதிகமாக, 2024 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் ஏற்றுமதி வருமானங்கள் 12.8 சதவீதத்தால் 407.9 மில்லியன் அமெரிக்க டொலராகவும், தேங்காய் 21.3 சதவீதத்தினால் 380.5 மில்லியன் அமெரிக்க டொலராகவும், காய்கறிகள் 1.3 சதவீதத்தினால் 25.6 மில்லியன் அமெரிக்க டொலராகவும் பதிவாகியுள்ள அதேவேளை, ஏற்றுமதி வருமானங்கள் 11.2 சதவீதத்தினால் 23.6 மில்லியன் அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கிடையில், கனிய ஏற்றுமதி வருமானங்கள் 2023 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் காணப்பட்ட 36.5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில் இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 37.1 சதவீதத்தினால் குறைவடைந்து 23.0 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராகக் குறைந்துள்ளது.

**வரைபு 3.11 : ஏற்றுமதிகளின் வகுதி**




*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

## இறக்குமதி

பொருளாதார நடவடிக்கைகளின் புத்துயிர்ப்பு, இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்குதல் மற்றும் உலகளாவிய சந்தைகளின் உயர்ந்த பண்ட விலைகளின் தாக்கம் ஆகியவற்றால் உந்தப்பட்ட நுகர்வோர், இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின்

காரணமாக 2023 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களின் 15,322.6 மில்லியன் ஐ.அ.டொலருடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இறக்குமதி மீதான செலவினம் 10.4 சதவீதத்தால் அதிகரித்து 16,916.9 மில்லியன் ஐ.அ.டொலர்களுக்கு அதிகரித்துள்ளது. மொத்த இறக்குமதிச் செலவில் நுகர்வோர், இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவு முறையே 18.1 சதவீதம், 63.8 சதவீதம் மற்றும் 18.0 சதவீதமாகும்.

உணவு மற்றும் குடிபானங்கள் மற்றும் உணவல்லா நுகர்வோர் பொருட்கள் மீதான அதிகரித்த இறக்குமதிச் செலவினத்தின் காரணமாக 2023 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் 2,771.2 மில்லியன் ஐ.அ.டொலராக காணப்பட்ட நுகர்வோர் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 10.7 சதவீதத்தால் அதிகரித்து 3,068.1 மில்லியன் ஐ.அ.டொலராக அதிகரித்துள்ளது. உணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2023 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் 1,541.0 மில்லியன் ஐ.அ.டொலரிலிருந்து 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 8.5 சதவீதத்தினால் அதிகரித்து 1,671.8 மில்லியன் ஐ.அ.டொலர்களுக்கு அதிகரித்துள்ளது. மருத்துவ மற்றும் மருந்துப் பொருட்களுக்கான இறக்குமதிச் செலவுகள் வீழ்ச்சியடைந்த போதிலும், ஆடைகள் மற்றும் உபகரணங்கள், வீட்டு உபகரணங்கள், தொலைத்தொடர்பாடல் சாதனங்கள், வீட்டு மற்றும் தளபாடப் பொருட்கள், பொருட்கள் மற்றும் தனிப்பட்ட வாகனங்கள் மீதான இறக்குமதிச் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக உணவல்லாத நுகர்வோர் பொருட்களின் இறக்குமதிக்கான செலவினம் 1,230.1 மில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து 1,396.3 மில்லியன் ஐ.அ.டொலர்களுக்கு 13.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

பிரதானமாக புடவை மற்றும் புடவை பொருட்கள், இரசாயன பொருட்கள், பிளாஸ்டிக் மற்றும் அதன் பொருட்கள், அடிப்படை உலோகங்கள் மற்றும் கடதாசி மற்றும் கடதாசி பலகைகள் மற்றும் கட்டுரைகள் மீதான செலவினங்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக இடைநிலைப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2023 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் 10,058.2 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரிலிருந்து 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 7.3 சதவீதத்தால் 10,789.7 மில்லியன் ஐ.அ.டொலராக அதிகரித்துள்ளது. புடவை மற்றும் புடவை பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவு 2023 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் 2,188.0 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரிலிருந்து 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 18.6 சதவீதத்தால் அதிகரித்து 2,594.5 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்திற்கான செலவினம் 1.7 சதவீதத்தால் அதிகரித்த போதிலும், 2024 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் எரிபொருள் மீதான இறக்குமதி செலவினம் 8.6 சதவீதத்தால் 3,920.4 மில்லியன் அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்ததுடன், நிலக்கரிஇறக்குமதிசெலவினம்39.6சதவீதத்தால் 260.1 மில்லியன் அமெரிக்க டொலராகவும், கச்சா எண்ணெய் 24.7 சதவீதத்தால் 749.8 மில்லியன் அமெரிக்க டொலராகவும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியடைந்துள்ளது. முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவு 2023 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் 2,477.5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரிலிருந்து 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 23.2 சதவீதத்தால் 3,051.6 மில்லியன் ஐ.அ.டொலராக அதிகரித்துள்ளது. இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்கான செலவினம் 22.4 சதவீதத்தினால் அதிகரித்து 2,072.8 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவும், கட்டுமானப் பொருட்கள் மீதான செலவு 18.8 சதவீதத்தினால் 838.1 மில்லியன் அமெரிக்க டொலராகவும், போக்குவரத்து உபகரணங்களுக்கான செலவினம் 80.7 சதவீதத்தினால் 137.8 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராகவும் அதிகரித்தமையே இதற்கு முக்கிய காரணமாகும்.

**வரைபு 3.12 : இறக்குமதிகளின் வகுதி**




*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

**அட்டவணை 3.7 : வெளிநாட்டு வர்த்தகம்**

ஐ.அ.டொ.மில்.

| வகை | | | | சன - நவ | |
|---|---|---|---|---|---|
| | 2021 | 2022 | 2023(ஆ) | 2023(ஆ) | 2024(அ) |
| **ஏற்றுமதி** | **12,502** | **13,106** | **11,911** | **10,909** | **11,670** |
| **விவசாய ஏற்றுமதிகள்** | **2,730** | **2,568** | **2,567** | **2,360** | **2,518** |
| தேயிலை | 1,324 | 1,259 | 1,310 | 1,199 | 1,304 |
| பிற விவசாய உற்பத்திகள் | 1,406 | 1,309 | 1,257 | 1,161 | 1,214 |
| **கைத்தெழில் ஏற்றுமதிகள்** | **9,705** | **10,465** | **9,278** | **8,487** | **9,105** |
| புடவை மற்றும் தைத்த ஆடைகள் | 5,435 | 5,952 | 4,879 | 4,439 | 4,613 |
| உணவு, குடிபானம், புகையிலை | 587 | 520 | 539 | 495 | 594 |
| இறப்பர் உற்பத்திகள் | 1,050 | 977 | 902 | 824 | 897 |
| இயந்திர மற்றும் உபகரணங்;கள் | 501 | 581 | 598 | 555 | 446 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 506 | 568 | 539 | 478 | 976 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 1,626 | 1,867 | 1,821 | 1,696 | 1,579 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **45** | **50** | **39** | **37** | **23** |
| **வகுக்கப்படாதவை** | **23** | **23** | **28** | **26** | **24** |
| **இறக்குமதிகள்** | **20,637** | **18,291** | **16,811** | **15,323** | **16,917** |
| **நுகர்வுப் பொருட்கள்** | **3,849** | **2,813** | **3,044** | **2,771** | **3,068** |
| உணவும் குடிபானமும் | 1,667 | 1,608 | 1,693 | 1,541 | 1,672 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 2,182 | 1,205 | 1,351 | 1,230 | 1,396 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **12,309** | **12,439** | **11,007** | **10,058** | **10,790** |
| பெற்றோலியம் | 3,743 | 4,897 | 4,703 | 4,289 | 3,920 |
| புடவை மற்றும் தைத்த ஆடைகள் | 3,067 | 3,065 | 2,371 | 2,188 | 2,595 |
| கோதுமை மற்றும் சோளம் | 418 | 303 | 338 | 318 | 324 |
| ஏனையவை | 5,081 | 4,174 | 3,595 | 3,263 | 3,951 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **4,463** | **3,030** | **2,745** | **2,478** | **3,052** |
| இயந்திரங்களும் உபகரணங்களும் | 2,810 | 1,969 | 1,868 | 1,693 | 2,073 |
| கட்டிடப் பொருட்கள் | 1,249 | 926 | 775 | 706 | 838 |
| போக்குவரத்து உபகரணம் | 399 | 132 | 99 | 76 | 138 |
| ஏனையவை | 6 | 3 | 3 | 3 | 3 |
| **வகுக்கப்படாதவை** | **17** | **9** | **16** | **16** | **8** |
| **வர்த்தகப் பற்றாக்குறை** | **-8,139** | **-5,185** | **-4,900** | **-4,414** | **-5,247** |

*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

*(அ தற்காலிகமானது.*

*(ஆ) திருத்தியமைக்கபட்ட*

## சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்

2023 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் 1,798.7 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராக காணப்பட்ட சுற்றுலாத்துறை வருமானம் 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 56.0 சதவீதம் உயர்ந்து 2,806.5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக 2023 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களின் 1,276,951 வருகையாளர்களுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகையானது 41.3 சதவீதம் அதிகரித்து 1,804,873 ஆக அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது. இந்தியா, ரஷ்யா, இங்கிலாந்து, ஜெர்மனி, சீனா, ஆஸ்திரேலியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து அதிக சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவாகியுள்ளது. அதேவேளை, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான அதிக புறப்பாடு மற்றும் உத்தியோகபூர்வ வழிகள் மூலம் பணம் அனுப்புவதை ஊக்குவிப்பதற்கான அரசாங்கத்தின் கொள்கை நடவடிக்கைகளுடன் முறையான வழிகள் மூலம் பணம் அனுப்புதல் ஆகியவற்றின் காரணமாக 2023 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாத காலப்பகுதியின் 5,399.8 மில்லியன் ஐ.அ.டொலருடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 10.4 சதவீதத்தால் 5,961.6 மில்லியன் ஐ.அ.டொலர்களாக அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான புறப்பாடு 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 274,562 நபர்களின் வெளியேற்றத்துடன் ஒப்பிடும்போது 3.2 சதவீதம் அதிகரித்து 283,618 நபர்களாக அதிகரித்துள்ளது.

### 3.6 உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம்

உலகப் பொருளாதாரம் 2024 ஆம் ஆண்டில் 3.2 சதவீதமாக வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது அதன் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் பின்னடைவை நிரூபிக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) உலக பொருளாதார கண்ணோட்டத்தின் 2025 சனவரி புதுப்பிப்பின்படி, 2025 மற்றும் 2026 ஆகிய இரண்டிற்கும் வளர்ச்சி 3.3 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, உலகளாவிய முதன்மைப் பணவீக்கம் 2025 இல் 4.2 சதவீதமாகவும் 2026 இல் 3.5 சதவீதமாகவும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிராந்தியங்களுக்கிடையேயான வேறுபாடு களுடன் நிதி நிலைமைகள் பெரும்பாலும் இடமளிக்கின்றன. வணிக நட்பு கொள்கைகளின் எதிர்பார்ப்புகளால் உந்தப்பட்ட முன்னேறிய பொருளாதாரங்களில் பங்குகள் அதிக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், வளர்ந்து வரும் சந்தைகள் மற்றும் வளரும் பொருளாதாரங்களில், சமபங்கு மதிப்பீடுகள் மிகவும் அடக்கமாக உள்ளன, மேலும் ஐக்கிய அமெரிக்க டாலரின் வலிமையின் காரணமாக நிதி நிலைமைகள் இறுக்கமாக உள்ளன, இது அமெரிக்காவில் புதிய கட்டணங்கள் மற்றும் அதிக வட்டி விகிதங்களின் எதிர்பார்ப்புகளால் உந்தப்படுகிறது.

பொருளாதாரக் கொள்கை நிச்சயமற்ற தன்மை உலகெங்கிலும் கூர்மையாக அதிகரித்துள்ளது, இருப்பினும் மாறுபட்ட அளவுகளில், குறிப்பாக வர்த்தகம் மற்றும் நிதிக் கொள்கைகள் தொடர்பாக. இந்த நிச்சயமற்ற தன்மைகள் பெரும்பாலும் பல நாடுகளில் 2024 இல் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களின் கீழ் எதிர்பார்க்கப்படும் கொள்கை மாற்றங்கள், சில ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளில் நிலையற்ற சந்தைகள் மற்றும் மத்திய கிழக்கில் புவிசார் அரசியல் பதட்டங்கள் ஆகியவற்றிலிருந்து உருவாகின்றன.

#### பிராந்திய கணிப்புகள்

முன்னேறிய பொருளாதாரங்களில், வளர்ச்சிக் கண்ணோட்டம் பல்வேறு அளவுகளில் இருந்தாலும் வலுவாக உள்ளது. அமெரிக்க பொருளாதாரம் 2025 ஆம் ஆண்டில் 2.7 சதவீதமாக வளரும் என்று கணிக்கப்பட்டுள்ளது, இது 2024 ஆம் ஆண்டில் 2.8 சதவீத வலுவான வளர்ச்சியை பிரதிபலிக்கிறது, இது வலுவான தொழிலாளர் சந்தைகள் மற்றும் மேம்பட்ட முதலீடுகளால் ஆதரிக்கப்படுகிறது. உற்பத்தியில் பலவீனமான வேகம் மற்றும் கொள்கை நிச்சயமற்ற தன்மை காரணமாக 2025 ஆம் ஆண்டில் ஐரோப்பிய பிரதேசங்கள் 1.0 சதவீதம் வளரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், வலுவான உள்நாட்டு தேவை, தளர்வான நிதி நிலைமைகள், மேம்பட்ட நம்பிக்கை மற்றும் குறைக்கப்பட்ட நிச்சயமற்ற தன்மை ஆகியவற்றுடன் 2026 ஆம் ஆண்டில் வளர்ச்சி அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2024 ஆம் ஆண்டில் 4.2 சதவீத வளர்ச்சியுடன் முன்னேறிய வளர்ந்து வரும் சந்தைகள் மற்றும் வளரும் பொருளாதாரங்கள் 2025 ஆம் ஆண்டிலும் அதே 4.2 சதவீத வளர்ச்சியையும், மேலும் 2026 ஆம் ஆண்டில் 4.3 சதவீத வளர்ச்சியையும் அடையும் என்று எதிர்பார்க்கப்பகின்றது. சீனப் பொருளாதாரம் 2024 ஆம் ஆண்டில் 4.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2025 ஆம் ஆண்டில் 4.6 சதவீதமாகவும், 2026 ஆம் ஆண்டில் 4.5 சதவீதமாகவும் வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2024 ஆம் ஆண்டில் 6.5 சதவீத வளர்ச்சியுடன், இந்தியப் பொருளாதாரம் 2025 மற்றும் 2026 ஆகிய இரண்டிலும் அதே வளர்ச்சி வேகத்தை 6.5 சதவீதமாக பராமரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசியாவின் வளர்ச்சி 2025 ஆம் ஆண்டில் 3.6 சதவீதமாகவும், 2026 ஆம் ஆண்டில் 3.9 சதவீதமாகவும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது 2024 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 2.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியனில், வளர்ச்சி 2024 இல் 2.4 சதவீதத்திலிருந்து 2025 இல் 2.5 சதவீதமாகவும், 2026 இல் 2.7 சதவீதமாகவும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2024 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, துணை-சஹாரா ஆப்பிரிக்கா 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் 4.2 சதவீதம் வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2024 இல் மதிப்பிடப்பட்ட 3.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் முறையே 2.2 சதவீதம் மற்றும் 2.4 சதவீத வளர்ச்சி விகிதங்களுடன், வளர்ந்து வரும் மற்றும் வளரும் ஐரோப்பாவின் வளர்ச்சி பின்தங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

#### உலக வர்த்தகம் மற்றும் பொருட் சந்தைகள்

2024 ஆம் ஆண்டில் உலகளாவிய வர்த்தக வளர்ச்சி மீட்சிக்கான அறிகுறிகளைக் காட்டியது. குறிப்பாக பொருட்கள் வர்த்தகத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது. உலகளாவிய வர்த்தக அளவு 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறிருப்பினும், பாதுகாப்புவாதக் கொள்கைகள் தீவிரப்படுத்தப்படுவதற்கு மத்தியில் கொள்கை நிச்சயமற்ற தன்மையால் வர்த்தகம் மோசமாக பாதிக்கப்படும். 2024 ஆம் ஆண்டில் புதிய வர்த்தகக் கட்டுப்பாடுகளை அமல்படுத்துவது 2010-2019 சராசரியை விட ஐந்து மடங்கு அதிகமாக இருந்தது.

புவிசார் அரசியல் பதட்டங்கள் இருந்தபோதிலும், 2024 இல் பொருட்களின் விலைகள் சுமார் 3 சதவீதம் வீழ்ச்சியடைந்தன. இதற்கு பெரும்பாலும் எரிசக்தி மற்றும் உணவுப் பொருட்களுக்கான சாதகமான விநியோக நிலைமைகள் காரணமாக இருந்தது. பொருட்களின் விலைகள் தொடர்ந்து சரியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பலவீனமான உலகளாவிய தேவை மற்றும் வலுவான ஒபெக் அல்லாத விநியோகம் காரணமாக எண்ணெய் விலைகளில் ஏற்படும் வீழ்ச்சியால் உந்தப்பட்ட எரிசக்தி பொருட்களின் விலைகள் 2025 ஆம் ஆண்டில் 2.6 சதவீதம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், வானிலை நிலைமைகள் மற்றும் மத்திய கிழக்கில் புவிசார் அரசியல் பதட்டங்கள் காரணமாக எரிவாயு விலை உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, உணவு மற்றும் பானங்களின் பாரிய உற்பத்திகளில் நிலவும் மோசமான வானிலை நிலைமைகள் காரணமாக உணவு மற்றும் பானங்களின் விலைகளில் ஏற்படும் அதிகரிப்பு எரிபொருள் அல்லாத பொருட்களின் விலைகள் 2.5 சதவீதத்தால் அதிகரிக்கக் காரணமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தினூடான கொள்கைகள்

கண்ணோட்டத்தைச் சுற்றியுள்ள நிச்சயமற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு, நுணுக்கமான கொள்கை பதில்கள் தேவைப்படுகின்றன. நாணயக் கொள்கைகள் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் வேலைவாய்ப்புக்கு ஆதரவளிக்கும் அதேவேளை விலை நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட வேண்டும், அதே நேரத்தில் அத்தகைய கொள்கைகள் நாடு சார்ந்த பணவீக்க நிலைமைகளின் அடிப்படையில் பின்பற்றப்பட வேண்டும்.

பொருளாதார வளர்ச்சிக்கு இடையூறு விளைவிக்காத வகையில் பொதுக்கடனின் நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் அரசிறை இடையகங்களை கட்டியெழுப்புவதற்கும் நிதிக் கொள்கைகள் தேவைப்படுகின்றன. பொருளாதார இயக்கத்தை மேம்படுத்துவதற்கும், வழங்கல் பக்கத்தை வலுப்படுத்துவதற்கும், பொருளாதார அபாயங்களை நிவர்த்தி செய்வதற்கும் வளர்ச்சிக்கு ஆதரவான கொள்கைகள் அவசியம்.

இத்தகைய அபாயங்கள் பாதுகாப்புவாதக் கொள்கைகளின் தீவிரம், புவிசார் அரசியல் அழுத்தங்கள், புதுப்பிக்கப்பட்ட பணவீக்க அழுத்தங்கள் மற்றும் சில நாடுகளில் நிதிய நிலைத்தன்மை மற்றும் நிதிய உறுதிப்பாடு பற்றிய கவலைகள் ஆகியவற்றால் எழக்கூடும். இதனால், கொள்கை வகுப்பாளர்கள் பொருளாதார வளர்ச்சியுடன் பணவீக்கக் கட்டுப்பாட்டை சமநிலைப்படுத்தும் சவாலை எதிர்கொள்கின்றனர். எனவே, இந்த சவால்களை எதிர்கொள்ளவும், பொருளாதார துண்டாடல்களைக் குறைக்கவும் வலுவான பலதரப்பு ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.

**அட்டவணை 3.8 : உலக பொருளாதாரத்தின் பிரதான குறிகாட்டிகள் - 2024 (கணிப்பு)**

| நாடு | மொ.உ.உ. வளர்ச்சி (வருடாந்த *) | பணவீக்கம் (%) | வேலையின்மை (%) | அரசிறை பற்றாக்குறை (மொ.உ.உ %) | தேறிய கடன் (மொ.உ.உ. %) |
|---|---|---|---|---|---|
| ஆர்ஜன்டீனா | -3.5 | 229.8 | 8.2 | -0.1 | 91.5 |
| அவுஸ்திரேலியா | 2.0 | 3.3 | 4.1 | -1.7 | 49.3 |
| பிரேசில் | 3.0 | 4.3 | 7.2 | -6.9 | 87.6 |
| கனடா | 1.3 | 2.4 | 6.2 | -2.0 | 106.1 |
| சிலி | 2.5 | 3.9 | 8.5 | -2.3 | 41.0 |
| சீனா | 4.8 | 0.4 | 5.1 | -7.4 | 90.1 |
| பிரான்ஸ் | 1.1 | 2.3 | 7.4 | -6.0 | 112.3 |
| ஜேர்மனி | 0.0 | 2.4 | 3.4 | -2.0 | 62.7 |
| கிரீஸ் | 2.3 | 2.9 | 10.5 | -1.0 | 159.0 |
| இந்தியா | 7.0 | 4.4 | – | -7.8 | 83.1 |
| இந்தோனேஷியா | 5.0 | 2.5 | 5.2 | -2.7 | 40.5 |
| இத்தாலி | 0.7 | 1.3 | 7.0 | -4.0 | 136.9 |
| ஜப்பான் | 0.3 | 2.2 | 2.5 | -6.1 | 251.2 |
| கொரியா | 2.5 | 2.5 | 2.9 | -0.5 | 52.9 |
| மலேசியா | 4.8 | 2.8 | 3.5 | -3.6 | 68.4 |
| மெக்சிகோ | 1.5 | 4.7 | 3.0 | -5.9 | 57.7 |
| ரஷ்யா | 3.6 | 7.9 | 2.6 | -1.9 | 19.9 |
| சிங்கப்பூர் | 2.6 | 2.6 | 1.9 | 4.5 | 175.2 |
| தென்னாபிரிக்கா | 1.1 | 4.7 | 33.7 | -6.2 | 75.0 |
| ஸ்பெயின் | 2.9 | 2.8 | 11.6 | -3.0 | 102.3 |
| இலங்கை | 2.6 | 3.5 | 4.4 | -6.8 | 93.3 |
| தாய்லாந்து | 2.8 | 0.5 | 1.1 | -2.4 | 65.0 |
| ஐக்கிய இராச்சியம் | 1.1 | 2.6 | 4.3 | -4.3 | 101.8 |
| ஐக்கிய அமெரிக்கா | 2.8 | 3.0 | 4.1 | -7.6 | 121.0 |
| வியட்நாம் | 6.1 | 4.1 | 2.1 | -2.6 | 33.8 |

*மூலங்கள் : உலக பொருளாதார பார்வை, சர்வதேச நாணய நிதியம், 2024 ஒக்தோபர் அரசிறை கண்காணிப்பு, சர்வதேச நாணய நிதியம், 2024 ஒக்தோபர், நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி*

# அரசுடமைத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை

# 04

### 4.1 மேன்நோக்கு

பிரதான 52 அரசுடமைத் தொழில்முயற்சிகள் இலாபமீட்டும் தன்மையின் அடிப்படையில் மேம்பட்ட செயலாற்றுகையை வெளிப்படுத்தியுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் முதல் பத்து மாத காலப்பகுதியில் பதிவான ரூபா 312.7 பில்லியன் மொத்த இலாபத்துடன் ஒப்பிடும் போது, 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் மொத்த இலாபமாக ரூபா 428.5 பில்லியன் பதிவாகியுள்ளது. மின்சாரம் மற்றும் எரிபொருளுக்கான செலவு-பிரதிபலிப்பு விலை அறிமுகம், தெரிவுசெய்யப்பட்ட முக்கிய அரசுடமைத் தொழில்முயற்சிகளின் ஐந்தொகையினை மறுசீரமைத்தமை அடங்கலாக அரசுடமைத் தொழில்முயற்சிகள் துறையில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய சீர்திருத்தங்கள் மற்றும் ரூபாயின் மதிப்பு உயர்வு, வட்டி வீதத்தில் ஏற்பட்ட குறைவு போன்ற மதிப்பாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் நிலவிய சாதகமான வெளிப்புற காரணிகள் என்பவையே இதற்கான பிரதான காரணமாகும்.

இலங்கை மின்சார சபையினது மின் உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம் என்பவற்றுக்கான பரந்தளவிலான செயற்பாட்டு மற்றும் நிதி தன்னாட்சி அதிகாரத்தினை வழங்குவதுடன், நாட்டின் மின்சாரத் துறையில் மேம்பட்ட செயல்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுடனான தனியார் துறையின் பங்களிப்பை அனுமதிக்கும் அதேவேளை, 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க மின்சார சட்டம் ஜூன் மாதத்தில் இயற்றப்பட்டது. 2024 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதம் அமைச்சரவை அனுமதித்ததற்கிணங்க, 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க மின்சார சட்டத்தினை திருத்துவது தொடர்பில் ஆராய்வதற்கும், கலந்தாலோசிப்பதற்கும், பரிந்துரைகளை வழங்குவதற்குமான குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதேவேளை, புனைறற் பெற்றோலிய நிறுவனம் தனது செயற்பாடுகளை 2024 ஆம் ஆண்டு செப்டம்பரில் ஆரம்பத்ததுடன் கீழ்நோக்கிய பெட்ரோலிய சந்தையின் பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை ஐந்தாகவும் அதிகரித்துள்ளது.

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத அமைச்சரவை தீர்மானத்திற்கிணங்க, வெளிப்படையான நடைமுறையின் கீழ் அரசுடமை வங்கிகளுக்கான சுயாதீன பணிப்பாளர்களை தெரிவு செய்வதற்கான குழு நியமிக்கப்பட்டுடன், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி என்பவற்றுக்கான அபேட்சகர்களை தேர்வு செய்யும் செயல்முறை நிறைவுற்றது. மேலும், அரசுடமைத் தொழில் முயற்சிகளுக்கான கொள்கை சீர்திருத்தத்தின் கீழ், அனைத்து அரசுடமைத் தொழில்முயற்சிகளையும் மேற்பார்வை செய்வதற்கு பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் கீழ் ஒரு விசேட பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டதுடன், அரசுடமைத் தொழில்முயற்சிகளிலுள்ள அரசினது பங்குகளை முகாமைத்துவம் செய்வதற்கும், அவற்றினது செயலாற்றுகையை கண்காணித்து அறிக்கையிடுவது குறித்த பிரிவினது பொறுப்பிலுள்ளதாகும்.
2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் அரசுடமைத் தொழில் முயற்சிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட வரிகள் மற்றும் பங்கிலாபமானது ரூபா 30.5 பில்லியனாக குறைவடைந்துள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 36.1 பில்லியனாகவும் இது காணப்பட்டது.

### 4.2 பிரதான பத்து அரசுடமை வணிகத் தொழில் முயற்சிகள் பற்றிய மீளாய்வு

#### இலங்கை வங்கி

இலங்கை வங்கியின் சொத்து அடித்தளமானது 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 4,412 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாத இறுதியில் ரூபா 4,720 பில்லியனாக, 7.0 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாத காலப்பகுதியில், வங்கியின் வைப்புத்தளமானது, 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட இது ரூபா 3,882 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 6.2 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 4,123 பில்லியனாக காணப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 5.07 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டிருந்த வங்கியின் மூன்றாம் கட்ட கடன் விகிதம், 2024 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாத இறுதியில் 6.02 சதவீதமாக சிறுதளவு குறைவடைந்துள்ளது. இலங்கை வங்கி 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 44.4 பில்லியனைப் பதிவு செய்துள்ளதுடன், இது 2023ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவான ரூபா 29.4 பில்லியன் வரிக்கு முந்திய இலாபத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பாகும். நிகர வட்டி வருமானம் மற்றும் வட்டி அல்லாத வருமானத்தில் ஏற்பட்ட கணிசமான முன்னேற்றங்களே இதற்கான பிரதான காரணமாகும்.

#### மக்கள் வங்கி

மக்கள் வங்கியின் சொத்து அடித்தளமானது 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 3,038 பில்லியனிலிருந்து 2024 ஆண்டின் ஒக்டோபர் மாத இறுதியில் ரூபா 3,285 பில்லியனாக 8.1 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாத முடிவில் வங்கியின் வைப்புத்தளமானது ரூபா 2,890 பில்லியனாக பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 2,653 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 8.9 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,709 பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்த கடன்களும் முற்கொடுப்பனவுகளும், 2024 ஆம் ஆண்டு

ஒக்டோபர் மாத இறுதியில் ரூபா 1,736 பில்லியனாக சிறிதளவு அதிகரிப்பினை பதிவு செய்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 8.8 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டிருந்த வங்கியின் மூன்றாம் கட்ட கடன் விகிதம், 2024 ஆண்டு ஒக்டோபர் மாத இறுதியில் 9.4 சதவீதமாக அதிகரித்து வீழ்ச்சி கண்டுள்ளது. மக்கள் வங்கி 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 32.2 பில்லியனைப் பதிவு செய்துள்ளதுடன், இது 2023ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவான ரூபா 8.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 270 சதவீத குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்பாகவும் காணப்படுகிறது.

### தேசிய சேமிப்பு வங்கி

தேசிய சேமிப்பு வங்கியின் சொத்து அடித்தளமானது, 2024 ஆண்டின் ஒக்டோபர் மாத இறுதியில் ரூபா 1,710 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 1,687 பில்லியனுடன் ஒப்பிடுகையில் சிறியதொரு அதிகரிப்பினைக் காட்டுகிறது. 2024 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாத வங்கியின் வைப்புத்தளமானது ரூபா 1,516 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 1,483 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2.2 சதவீத அதிகரிப்பாகவும் அமைந்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 527 பில்லியனாக காணப்பட்டகடன்களும்முற்கொடுப்பனவுகளும், 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத இறுதியில் ரூபா 518 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இது 1.7 சதவீத வீழ்ச்சியை காட்டுகிறது. தேசிய சேமிப்பு வங்கியானது, 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 28.5 பில்லியனைப் பதிவு செய்துள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 1.9 பில்லியனாக காணப்பட்டதுடன் நிகர வட்டி வருமானத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பே இம்மாற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

### இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

2011 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க காப்புறுதித் தொழில் (திருத்த) சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு இணங்க, வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் ஆயுள் மற்றும் பொது காப்புறுதி வர்த்தக பணிகளை இந்த கூட்டுத்தாபனத்தின் பூரண துணை நிறுவனங்களான ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கோர்பரேஷன் லைஃப் லிமிடெட் மற்றும் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடெட் என்றவாறு இரண்டாக பிரிக்கும் வேலைத்திட்டம் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்பட்டது.

தனித்தனியாக பிரிக்கப்பட்டதனைத் தொடர்ந்து வந்த 2024 இன் முதல் பத்து மாத காலப்பகுதியில், ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கோர்பரேஷன் ஆனது ரூபா 2.5 பில்லியனை வரிக்கு முந்திய இலாபமாகப் பதிவு செய்துள்ளதுடன், மேலும் ஒன்பது மாதக் காலப்பகுதியில் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடெட், ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கோர்பரேஷன் லைஃப் லிமிடெட் என்பன முறையே ரூபா 2.5 பில்லியன் மற்றும் ரூபா 22.6 பில்லியனை வரிக்கு முந்திய இலாபமாகப் பதிவு செய்துள்ளன.

அரசுடமை தொழில் முயற்சிகளை சீரமைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கோர்பரேஷன் நிறுவனத்தின் துணை நிறுவனமான கேன்வில் ஹோல்டிங்ஸ் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தினது பங்கு உரிமையானது 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திறைசேரியின் செயலாளருக்கு மாற்றப்பட்டது.

### இலங்கை மின்சார சபை

2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் மின்சார விற்பனை வருமானம் ரூபா 472.8 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 498.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 5.1 சதவீதமான சிறிதொரு விழ்ச்சியினை காட்டுகிறது. 2024 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட தொடர்ச்சியாக இரண்டு கட்டணக் குறைப்புகளே இதற்கான முக்கிய காரணங்களாகும். இருந்த போதிலும், 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாத காலப்பகுதியில் மின்சாரத்திற்கான தேவை 12,686 GWh ஆக இருந்ததுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 11,825 GWh உடன் ஒப்பிடுகையில் 7.2 சதவீத அதிகரிப்பினை காட்டுகிறது.

சாதகமான வானிலை நிலவியமை காரணமாக, இலங்கை மின்சார சபையின் நேரடி மின் உற்பத்தி செலவு 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் ரூபா 260.7 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 379.8 பில்லியனுடன் ஒப்பிடும் போது 31.4 சதவீதத்தால் கணிசமாக குறைவடைந்துள்ளது. இதன் விளைவாக, இலங்கை மின்சார சபை 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாத காலப்பகுதியில் ரூபா 112 பில்லியன் மொத்த இலாபத்தைப் பதிவு செய்ததுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 41.1 பில்லியனாக காணப்பட்டது. இலங்கை மின்சார சபையானது, தனது துணை நிறுவனமான லங்கா ட்ரான்ஸ்போர்மர்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் பங்குகளை விற்பனை செய்ததன் மூலம் ரூபா 26 பில்லியன் இலாபமீட்டப்பட்டுள்ளதுடன் நாணயமாற்று இலாபமாக ரூபா 10 பில்லியன் கிடைத்தமை மற்றும் நிதிச் செலவு ரூபா 30.6 பில்லியானால் குறைவடைந்தமை என்பவற்றின் பயனாக, 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து

மாதங்களில் வரிக்கு முந்திய நிகர இலாபமாக ரூபா 139.4 பில்லியனை பதிவு செய்துள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது ரூபா 362.3 மில்லியன் நிகர நட்டமாக காணப்பட்டது.

2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில், உற்பத்தி கலவை அனல் (நிலக்கரி): நீர்மின்: பாரம்பரியமற்ற மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, காற்று மற்றும் கூரை மீதான சூரிய மின்கலம்: அனல் (எரிபொருள்) என்பவை 34:30:21:15 எனும் விகிதத்தில் சாதகமாக மாறியதுடன் இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 33:24:20:23 என்பதாக பதிவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க, விற்பனைப் புள்ளியில் ஓர் அலகுக்கான செலவு 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் குறிப்பிடத்தகளவில் குறைவடைந்து KWh இற்கு ரூபா 30.75 ஆக காணப்பட்டதுடன், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் KWh இற்கு ரூபா 43.28 ஆகவும் இருந்தது.

2023 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா.79.2 பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன மின்வலு கொள்வனவாளர்களுக்கு இலங்கை மின்சார சபை செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள கடன் பொறுப்புக்கள், 2024 ஒக்டோபர் மாத இறுதியில் 74 சதவீதத்தால் குறைவடைந்து ரூபா 20.5 பில்லியனாக காணப்பட்டது. மேலும், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா.224.7பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்த நிலுவையிலுள்ள கடன் பொறுப்புக்கள், 2024 ஏப்ரல் இறுதியில் 13.2 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 254.3 பில்லியன் ஆக காணப்பட்டது.

2024 இல் மேற்கொள்ளப்பட்ட இரண்டு கட்டத் திருத்தங்கள், இறுதி பயனர் சராசரி கட்டணத்தில் 2024 மார்ச் மாதத்தில் 21.9 சதவீத குறைவினையும், தொடர்ந்து 2024 ஜூலை மாதத்தில் மேலதிகமாக 22.5 சதவீத குறைவினையும் ஏற்படுத்துவதாக அமைந்தன.

**அட்டவணை 4.1 : மின் உற்பத்தி மற்றும் கொள்ளளவு என்பவற்றின் கூட்டமைவு**

| | உற்பத்தி : 2023 ஜன - ஒக்டோ | | | உற்பத்தி: 2024 ஜன - ஒக்டோ (தற்காலிகமான) | | |
|---|---|---|---|---|---|---|
| | பொருத்தப்பட்டுள்ள கொள்ளளவு மெகாவோற் | மொத்த உற்பத்தியில் சதவீதமாக (%) | நிகர உற்பத்தி-ஜிகா வொற் மணித்தியாலம் | பொருத்தப்பட்டுள்ள கொள்ளளவு மெகாவோற் | மொத்த உற்பத்தியில் சதவீதமாக (%) | மொத்த உற்பத்தியில் சதவீதமாக (%) |
| நீர் | 1,413 | 24 | 3,099 | 1,413 | 30 | 4,237 |
| அனல் மின் - இ.மி.ச. எண்ணெய் | 811 | 15 | 1,944 | 801 | 10 | 1,399 |
| அனல் மின் - ஐ.பீ.பீ. எண்ணெய் | 386 | 8 | 1,114 | 482 | 5 | 698 |
| காற்று - இ.மி.ச. | 104 | 3 | 351 | 103.5 | 3 | 347 |
| அனல் மின் - நிலக்கரி | 900 | 33 | 4,264 | 900 | 34 | 4,795 |
| மரபுசாரா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, காற்று | 774 | 13 | 1,733 | 784 | 13 | 1,832 |
| கூரை சூரிய மின்கலம் | 631 | 4 | 532 | 1031 | 5 | 693 |
| **மொத்தம்** | **5,019** | **100** | **13,037** | **5,515** | **100** | **14,001** |

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

பெற்றோலிய சில்லறைச் சந்தையில் மூன்று புதிய போட்டியாளர்கள் நுழைந்தமையின் காரணமாக, 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாத காலப்பகுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வருமானம் 25.6 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 843 பில்லியனாக காணப்பட்டதுடன், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது ரூபா 1.132.6 பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்தது. குறைவான வருமானத்தின் விளைவாக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மொத்த இலாபம் 55 சதவீதத்தால் குறைவடைந்ததுடன் 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாத காலப்பகுதியில் ரூபா 65.7 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 146.4 பில்லியனாகவும் காணப்பட்டது.

2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிகர இலாபம் 76 சதவீதத்தினால் குறைவடைந்து, ரூபா 25.1 பில்லியனாக காணப்பட்டதுடன், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 106.7 பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்தது. நிதிச் செலவானது 2024 ஆம் ஆண்டின முதல் பத்து மாதங்களில் ரூபா 23.2 பில்லியனால் குறைவடைந்து ரூபா 1.1 பில்லியானாக காணப்பட்ட போதிலும், 2023 ஆம் ஆண்டின்

இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் நிகர இலாபத்தில் ஏற்பட்ட குறைவுக்கான காரணம் விற்பனை வருமானம் குறைவடைந்தாமையே ஆகும்.

2023 ஆம் ஆண்டின் முடிவில் 230.9 பில்லியன் அமெரிக்க டொலராக காணப்பட்ட தேசிய ஈரானிய எண்ணெய் கம்பனிக்கு செலுத்த வேண்டிய தொகையானது 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத இறுதியில் 170.9 பில்லியன் அமெரிக்க டொலராக குறைவடைந்துள்ள அதேவேளை, இறக்குமதி மற்றும் இயங்கு முறைமைகள் கட்டணங்களுக்காக இலங்கை வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையானது 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத இறுதியில் 53 மில்லியன் அமெரிக்க டொலராக காணப்பட்டது.

2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாத காலப்பகுதியில் திரட்டு நிதியத்திற்கு ரூபா 10 பில்லியன் தீர்வையினை செலுத்தியதன் மூலம் தனது நிதிப் பொறுப்புக்களை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நிறைவேற்றியது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் வர்த்தக கடன் மொத்த மீதியானது 60 சதவீதத்தால் குறைவடைந்து 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத இறுதியில் ரூபா 7.1 பில்லியனாக காணப்பட்டதுடன், 2023 ஆம் ஆண்டு முடிவில் ரூபா 17.7 பில்லியனாக இது பதிவு செய்யப்பட்டிருந்தது. இலங்கை மின்சார சபை, இலங்கை கடற்படை மற்றும் இலங்கை இராணுவம் அடங்கலாக முக்கிய கொள்வனவாளர்களால் நிலுவைத் தொகைகள் செலுத்தப்பட்டமையே இக்குறைவிற்கான காரணமாகும்.

### ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட் நிறுவனத்தை மறுசீரமைத்து தனியார்மயப்படுத்துவதற்கு அரசங்கம் முன்னர் முயற்சிகளை மேற்கொண்டது. இருப்பினும், புதிய அரசாங்கத்தின் நியமனத்துடன், தேசிய பொருளாதாரத்திற்கு விமான சேவை ஆற்றும் முக்கிய பங்களிப்பினை கருத்திற் கொண்டு தனியார்மயப்படுத்தாமல் விமான சேவையினை மறுசீரமைப்பதற்காக மிகச் சிறந்த மாற்று மாதிரியொன்றை ஆராய்வதன் மூலம் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு ஆதரவளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையானது திருத்தப்பட்ட வணிகத் திட்டத்திற்கான அனுமதியினை வழங்கியது.

2024 ஆம் ஆண்டின் ஏப்ரல் முதல் ஒக்டோபர் வரையான ஏழு மாத காலப்பகுதியில் ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் ரூபா 1,960 மில்லியன் வரிக்கு முந்திய நட்டத்தினை பதிவு செய்துள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் வரிக்கு முந்திய இலாபமானது ரூபா 4,133 மில்லியனாக காணப்பட்டதுடன், இதற்கான பிரதான காரணமாக 2024 ஆம் ஆண்டின் ஏப்ரல் முதல் ஒக்டோபர் வரையான காலப்பகுதியில் நிகர போக்குவரத்து வருமானம் 14.9 சதவீதத்தால் குறைவடைந்து ரூபா 152,322 மில்லியனாக காணப்பட்டதாகும் என்பதுடன், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 178,818 மில்லியனாக இது பதிவாகியிருந்தது. தேசிய விமான சேவையைப் பாதுகாக்கும் நோக்கில், அரசாங்கம் 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் தற்போதைய நிதிப்பாய்ச்சல்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் ரூபா 9.8 பில்லியன் பங்கு முதலீட்டினை வழங்கி உதவியது. மேலும் இயங்கு முறைமைகள் தீர்மானிக்கப்படாததாகவுள்ள 175 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உத்தரவாதமளிக்கப்பட்ட சர்வதேச இறையாண்மை பத்திரங்கள் மறுசீரமைப்பிற்கு அரசாங்கம் உதவும்.

### தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது நாட்டில் குழாய் நீர் மற்றும் பாதுகாப்பான குடிநீர் விநியோகத்தை முறையே 62.7 சதவீதம் மற்றும் 98.4 சதவீதமாக 2024 ஆண்டின் ஒக்டோபர் மாத இறுதியில் அதிகரித்துள்ளது. இது 2023 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாத இறுதியில் முறையே 61.4 சதவீதம் மற்றும் 97.1 சதவீதமாக காணப்பட்டிருந்தது.

2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில், 120,260 புதிய இணைப்புக்களை சேர்த்ததன் மூலம் 2024 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாத இறுதியில் மொத்த இணைப்புக்களின் எண்ணிக்கை 3.12 மில்லியனாக அதிகரித்துள்ளது. 2024 ஒகஸ்ட் மாதம் அமுல்படுத்தப்பட்ட நீர் வழங்கலுக்கான புதிய கட்டணத் திருத்தத்தை அமுல்படுத்தியதன் மூலம் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது இக்காலப்பகுதியில் ரூபா 70.8 பில்லியன் வருமானத்தைப் பதிவு செய்துள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 49 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 44.6 சதவீத அதிகரிப்பாக காணப்படுகின்ற அதேவேளை, மதிப்பாய்வு செய்யப்பட்ட இக்காலப்பகுதியில் சபையானது ரூபா 44.3 பில்லியன் மொத்த வருமானத்தை பதிவு செய்துள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 94 சதவீத அதிகரிப்பினை காட்டியுள்ளது. இதன் காரணமாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் நிகர இலாபமாக ரூபா 21.7 பில்லியனை பதிவு செய்துள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 9.5 பில்லியன் நிகர இலாபமாக காணப்பட்டிருந்தது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது, 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து

மாதங்களில் 695 மில்லியன் கன மீட்டர் நீரை பகிர்ந்தளித்துள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 672 மில்லியன் கன மீட்டராக பதிவு செய்யப்பட்டிருந்தது. மதிப்பாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியினது நீர் விற்பனை 524 மில்லியன் கன மீட்டராக பதிவாகியுள்ளதுள்ளது, 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியினது நீர் விற்பனையானது 503 மில்லியன் கன மீட்டராக பதிவு செய்யப்பட்டிருந்தது. மேலும், கடந்த வருடங்களில் வருமானம் தராத நீர் ஒரு வீழ்ச்சிப் போக்கினை காட்டுவதுடன், 2023 ஆம் ஆண்டில் 25.20 சதவீதமாக காணப்பட்ட வருமானம் தராத நீரின் அளவானது, மதிப்பாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் 24.65 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும், உள்நாட்டு வங்கிகளின் கடன்களை மீளச் செலுத்துவதற்கும் 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சி திட்டங்களின் கடன் பொறுப்புக்களை செலுத்துவதற்கான ஆதரவளிப்பதற்கும் பொதுத் திறைசேரியானது ரூபா 21.4 பில்லியனை பங்குகளாக வழங்கியது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது, பொதுத் திறைசேரி, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஆகிய தரப்பினருக்கிடையிலான முத்தரப்பு உடன்படிக்கையொன்றான கூட்டுறவு நோக்க அறிக்கையின் 1 ஆம் காலாண்டு செயலாற்றுகையினை சமர்ப்பித்திருந்தது. இக்காலப்பகுதியில் சபையானது, குறித்துக்காட்டப்பட்ட முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளுக்களின் சாதகமான அடைவொன்றினை காட்டுகின்றது.

### இலங்கை துறைமுக அதிகார சபை

இலங்கை துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான கொழும்புத் துறைமுகமானது சர்வதேச கடல் வணிகத்தின் முக்கிய பங்கேற்பாளர்களுள் ஒருவராக கருதப்படுகிறது. தற்போது அது அல்பா லைனர் தரப்படுத்தலில் உலகளாவிய ரீதியிலுள்ள அனைத்து துறைமுகங்களிலிருந்தும் 23 ஆவது இடத்தை பிடித்துள்ளது. கிழக்கு கொள்கலன் முனையம், கொழும்பு மேற்கு சர்வதேச முனையம் போன்ற தற்போது நடைபெற்றுவரும் இலட்சிய அபிவிருத்தி திட்டங்களின் உதவியுடன் துறைமுகத்தின் கயாளும் திறன் தற்போதைய 8.5 மில்லியன் TEU க்களிலிருந்து 14 மில்லியன் TEU களாக அதிகரிக்கும். இம்மாபெரும் பாய்ச்சலானது, உலகளாவிய விநியோகச் சங்கிலியின் தடையற்ற செயல்பாட்டை உறுதி செய்வதில் முக்கிய பங்கேற்பாளராக துறைமுகத்தினது நிலையை உறுதி செய்யும்.2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் இலங்கை துறைமுக அதிகார சபையானது 1,985,870 TEU க்கள் கொள்கலன் செய்யப்பட்ட சரக்குகளையும், 8,372,734 மெற்றிக் தொன் சாதாரண சரக்குகளை கையாண்டதுடன், செங்கடல் நெருக்கடி மற்றும் அதன் பாதிப்புக்கள் அடங்கலான பல்வேறு காரணங்களினால் முறையே 20 சதவீத மற்றும் 22 சதவீத அதிகரிப்பினை பதிவு செய்துள்ளது.

இலங்கை துறைமுக அதிகார சபையின் 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களுக்கான வருமானம் ரூபா 73.5 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 62.7 பில்லியனுடன் ஒப்பிடும்போது 17 சதவீத அதிகரிப்பினை காட்டியது. இருப்பினும், இலங்கை துறைமுக அதிகார சபையின் முதல் பத்து மாதங்களுக்கான வரிக்கு முந்திய இலாபமானது ரூபா 34.6 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ள அதேவேளை, 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 35.7 பில்லியனுடன் ஒப்பிடும்போது 3 சதவீத வீழ்ச்சியை காட்டியுள்ளதுடன், இதற்கான காரணம் இக்காலப்பகுதியில் தொழிற்பாட்டுச் செலவு 18.3 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 40 பில்லியனாக காணப்பட்டதுடன், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 33.8 பில்லியனாக பதிவுசெய்யப்பட்டிருந்தது.

### இலங்கை விமான நிலைய, விமான போக்குவரத்து சேவைகள் (பிரைவேட்) லிமிடெட்

இலங்கை விமான நிலைய, விமான போக்குவரத்து சேவைகள் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனமானது இலங்கையின் விமானப் போக்குவரத்து உட்கட்டமைப்பினை பலப்படுத்துவதற்கான முக்கியமான அபிவிருத்தி முன்னெடுப்புக்களையும் தொழில்நுட்ப முன்னேற்றங்களையும் தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் கொள்ளளவு தற்போதுள்ள கேள்வியை பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லாத நிலையில், இலங்கை விமான நிலைய, விமான போக்குவரத்து சேவைகள் நிறுவனமானது, தனது நிதியை பயன்படுத்தி, பகுதியளவு பூரணமாக்கப்பட்ட நிலையில் விடப்பட்டிருந்த டெர்மினல் 2 இனை ஆரம்ப நிகழ்ச்சித் திட்ட ஆலோசகரின் கீழ் உள்நாட்டு ஒப்பந்தக்காரொருவர் ஊடாக முடிப்பதற்கான பணியைச் செய்து வருகிறது.

இலங்கை விமான நிலைய, விமான போக்குவரத்து சேவைகள் நிறுவனமானது 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் ரூபா 35.5 பில்லியன் வருமானத்தை ஈட்டியுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 31.9 பில்லியான காணப்பட்ட அதேவேளை, அதிலே ரூபா 28.9 பில்லியன் வான்வழி சாராத வருமானம் ஊடாகவும், ரூபா 6.4 பில்லியன் வான்வழி சார்ந்த வருமானம் ஊடாகவும் பெறப்பட்டிருந்தது. இக்காலப்பகுதியின் மொத்த தொழிற்பாட்டுச் செலவாக ரூபா 19.4 பில்லியன் பதிவாகியுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 14.2 பில்லியனாக இது

காணப்பட்டது. அதற்கிணங்க, 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களுக்கான இலங்கை விமான நிலைய, விமான போக்குவரத்து சேவைகள் நிறுவனத்தினது தொழிற்பாட்டு இலாபம் 9 சதவீதத்தால் குறைவடைந்து ரூபா 16.1 பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 17.7 பில்லியனாக காணப்பட்டிருந்தது.

நிகர நிதி வருமானம் மற்றும் பரிமாற்ற ஆதாயத்தை சரிசெய்த பின்னர், விமான நிலைய, விமான போக்குவரத்து சேவைகள் நிறுவனம் 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 24.3 பில்லியனை பதிவு செய்துள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட வரிக்கு முந்திய இலாபமான ரூபா 33 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 26.4 சதவீத வீழ்ச்சியினை காட்டியது.

**அட்டவணை 4.2: பிரதான 52 அரசுடமைத் தொழில்முயற்சிகளின் வரிக்கு முன்னராக இலாபம்**

**(ரூபா.மில்)**

| | தொழில் துறை | 2022 உண்மையான | 2023 தற்காலிகமான | 2024 சன - ஒக் தற்காலிகமான |
|---|---|---|---|---|
| 1 | இலங்கை வங்கி | 30,977 | 40,342 | 44,350 |
| 2 | மக்கள் வங்கி | 21,338 | 15,345 | 32,209 |
| 3 | தேசிய சேமிப்பு வங்கி | 4,510 | 4,287 | 28,458 |
| 4 | அரச ஈட்டு, முதலீட்டு வங்கி | -89 | -1,165 | 76 |
| 5 | வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 303 | 2,800 | 289(அ) |
| 6 | பிராந்திய அபிவிருத்தி வங்கி | 359 | 1,183 | 1,100 |
| 7 | ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை | 43,428 | 64,959 | 50,497 |
| 8 | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானம் | 23,494 | 10,704 | 2,510 |
| 9 | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 8,530 | 12,547 | 14,212 |
| 10 | இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தபானம் | 711 | 1,056 | 805 |
| 11 | விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபை | 2,651 | -3,885 | 1,442 |
| 12 | இலங்கை மின்சார சபை | -298,189 | 61,236 | 139,363 |
| 13 | இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் | -617,588 | 120,346 | 25,118 |
| 14 | இலங்கை துறைமுக அதிகாரசபை | 57,027 | 40,359 | 34,582 |
| 15 | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை | -2,701 | 5,287 | 21,741 |
| 16 | விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) கம்பனி | 6,434 | 33,639 | 24,318 |
| 17 | ஶ்ரீ லங்கன் எயாரலைன்ஸ் லிமிடெட் | -73,264 | 1,124 | -1960(ஆ) |
| 18 | இலங்கை போக்குவரத்துச் சபை | 1,421 | 2,189 | -1,024 |
| 19 | இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தபானம் | -1,269 | -2,458 | -601 |
| 20 | மத்திய பொறியியல் ஆலோசனைச் சேவைப் பணியகம் | 69 | 748 | 354 |
| 21 | அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தபானம் | 27 | -2,261 | -485 |
| 22 | மில்கோ (பிரைவெட்) லிமிடட் | -392 | -216 | 63 |
| 23 | தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை | 133 | -122 | 440 |
| 24 | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தபானம் | 19 | -93 | -67 |
| 25 | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை | 20 | -156 | 6 |
| 26 | குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி | 511 | 534 | 335 |
| 27 | சிலோ பிளான்டேஷன்ஸ் லிமிடட் | 514 | 303 | 201 |
| 28 | கலுபோவிட்டியானை தேயிலைத் தொழிற்சாலைக் கம்பனி | 346 | 94 | 32 |
| 29 | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தபானம் | 17 | -5 | 5 |
| 30 | இலங்கை கனிம மணல் கம்பனி | 6,160 | 4,051 | -37 |
| 31 | இலங்கை பொஸ்பேட் கம்பனி | 61 | 363 | 353 |
| 32 | கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிடட் | 57 | 28 | 23 |
| 33 | அபிவிருத்தி லொத்தர் சபை | 3,267 | 3,516 | 3,373 |

(ரூபா.மில்)

| | தொழில் துறை | 2022 உண்மையான | 2023 தற்காலிகமான | 2024 சன - ஒக் தற்காலிகமான |
|---|---|---|---|---|
| 34 | தேசிய லொத்தர் சபை | 1,390 | 845 | 1,241 |
| 35 | அரச மருந்தாக்கற் கூட்டுத்தபானம் | 1,586 | 2,173 | 2,568 |
| 36 | இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தபானம் | -26 | 218 | 338 |
| 37 | அரசு மருந்துப்பொருட் கூட்டுத்தபானம் | -2,285 | 1,268 | 1,719 |
| 38 | ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியியசாலை | 247 | -2,139 | 769 |
| 39 | சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு | -370 | -205 | -24 |
| 40 | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தபானம் | -541 | -360 | -174 |
| 41 | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தபானம் | -235 | -532 | -81 |
| 42 | இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை | -99 | 57 | 68 |
| 43 | அரசாங்க மரக் கூட்டுத்தபானம் | 1,016 | 1,274 | 449 |
| 44 | அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன பொது வர்த்தகக் கம்பனி | 735 | 901 | 238 |
| 45 | லங்கா சதொச நிறுவனம் | -687 | 115 | -311 |
| 46 | அரசாங்க அச்சகக் கூட்டுத்தபானம் | -380 | 2,794 | 437 |
| 47 | இலங்கைப் கடற்தொழில் கூட்டுத்தபானம் | -193 | 4 | -7 |
| 48 | இலங்கை கடற்தொழில் துறைமுகக் கூட்டுத்தபானம் | 364 | 637 | 43 |
| 49 | லங்கா உரக் கம்பனி | 113 | 61 | -154(இ) |
| 50 | கொழும்பு கொமர்ஷல் பெர்டிலைசர் கம்பனி | 501 | 162 | -41(இ) |
| 51 | ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா பீஎல்சீ | -633 | -784 | -344 |
| 52 | லங்கா சீனிக் கம்பனி | 6,045 | 2,828 | -307 |
| | **மொத்தம்** | **-774,560** | **425,996** | **428,506** |

*மூலம்: அரசுடமைத் தொழல்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்*

(அ) 2024 ஜன - செப்

(ஆ) 2024 ஏப்ரல் - ஒக்டோ

(இ) 2024 ஏப்ரல் - ஜூன்

### அட்டவணை 4.3: அரசுடமைத் தொழில்முயற்சிகளிலிருந்தான அறவீடு / பங்கிலாப வருமானம்

(ரூபா.மில்)

| தொழில் துறை | உண்மையானவை | | | எதிர்பார்க்கப்படுவது | |
|---|---|---|---|---|---|
| | 2022 | 2023 | 31.10.2024 இல் உள்ளவாறு | 2025 | 2026 |
| **தீர்வை** | **22,004** | **60,497** | **27,645** | **49,610** | **52,091** |
| மக்கள் வங்கி | 441 | – | – | - | - |
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | – | 5,000 | 10,000 | 15,000 | 15,750 |
| தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு | 13,200 | 23,000 | 9,000 | 12,700 | 13,335 |
| அரசாங்க மரக் கூட்டுத்தபானம் | 320 | 641 | – | 100 | 105 |
| அரசு மருந்து உற்பத்திக் கூட்டுத்தபானம் | 100 | 300 | – | 300 | 315 |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 1,608 | 2,000 | 2,189 | 4,000 | 4,200 |
| புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் | 1,000 | 2,000 | 1,018 | 2,000 | 2,100 |
| தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை | 35 | 390 | 25 | 50 | 53 |
| இலங்கை முதலீட்டுச் சபை | 416 | 533 | 467 | 500 | 525 |
| தேசிய லொத்தர் சபை | 361 | 1,000 | 1,060 | 500 | 525 |

(ரூபா.மில்)

| தொழில் துறை | உண்மையானவை | | | எதிர்பார்க்கப்படுவது | |
|---|---|---|---|---|---|
| | 2022 | 2023 | 31.10.2024 இல் உள்ளவாறு | 2025 | 2026 |
| இலங்கை கட்டளைகள் நிறுவனம் | 10 | 40 | 13 | - | - |
| இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தபானம் | 50 | 620 | 35 | 150 | 159 |
| இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் | – | 500 | 500 | 600 | 630 |
| சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை | 1,000 | 4,000 | – | 1,000 | 1,050 |
| இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் | 350 | – | 100 | 100 | 105 |
| தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் | 290 | 150 | 700 | 250 | 263 |
| இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | 1,200 | 7,000 | – | 1,000 | 1,050 |
| தேசிய போக்குவரத்து ஆணைக்குழு | 10 | 300 | 200 | 250 | 262 |
| இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அணைக்குழு | – | 75 | – | - | - |
| இலங்கை நில மீட்பு மற்றும் மேம்பாட்டு ஆணைக்குழு | – | 500 | – | 50 | 52 |
| இலங்கை துறைமுக அதிகார சபை | 1,015 | 8,066 | 607 | 10,000 | 10,500 |
| தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை | 400 | 646 | 861 | 85 | 89 |
| வீதி அபிவிருத்தி அதிகார சபை | – | 75 | – | - | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு | – | 350 | 15 | 500 | 525 |
| கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை | 50 | 200 | – | 15 | 16 |
| தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவகம் | 33 | 115 | 85 | 30 | 31 |
| முகாமைத்துவத்திற்கான பட்டமேற்படிப்பு நிறுவகம் | 90 | 25 | 4 | 30 | 31 |
| நகர அபிவிருத்தி அதிகார சபை | – | – | 345 | 125 | 131 |
| ஏனைய அரசுடமைத் தெழில்முயற்சிகள் | 25 | 2,971 | 421 | 275 | 289 |
| **பங்கிலாபங்கள்** | **6,087** | **15,204** | **2,853** | **6,218** | **6,529** |
| தேசிய சேமிப்பு வங்கி | 60 | 30 | – | - | - |
| இலங்கை வங்கி | 346 | 173 | – | - | - |
| மக்கள் வங்கி | 316 | 158 | – | - | - |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 1 | – | 2 | - | - |
| வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானம் | 1,511 | 2,272 | – | 2,000 | 2,100 |
| விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் கம்பனி | 500 | 5,500 | – | 1,300 | 1,365 |
| இலங்கை கனிம மணல் கம்பனி | 759 | 2,500 | – | 1,200 | 1,260 |
| இலங்கை பொஸ்பேட் கம்பனி | 20 | 220 | 75 | 100 | 105 |
| லங்கா லேலாண்ட் லிமிடட் | 13 | 6 | – | 3 | 3 |
| ரக்னா ஆரக்ஷக லங்கா லிமிடட் | – | 125 | 75 | 50 | 53 |
| மாந்தை ஸோல்ட் லிமிடட் | – | 120 | – | 5 | 5 |
| சிலோன் பெர்டிலைசர்ஸ் லிமிடட் | 15 | 22 | – | | |
| கொழும்பு கொமர்ஷல் பெர்டிலைசர்ஸ் லிமிடட் | 10 | 60 | – | | |
| வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயனக் கம்பனி | 50 | 305 | 49 | 60 | 63 |
| அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன பொது வர்த்தகக் கம்பனி | 11 | 150 | 50 | 50 | 53 |
| ஸ்ரீலங்கா ரெலிகொம் பீஎல்சீ | 1,805 | 223 | – | 200 | 210 |
| டி லா ரூ லங்கா லிமிடட் | 313 | – | 1,324 | 350 | 368 |

(ரூபா.மில்)

| தொழில் துறை | உண்மையானவை | | | எதிர்பார்க்கப்படுவது | |
|---|---|---|---|---|---|
| | 2022 | 2023 | 31.10.2024 இல் உள்ளவாறு | 2025 | 2026 |
| வரையறுக்கப்பட்ட லங்கா மின்சாரக் கம்பனி | 218 | 697 | 436 | 350 | 368 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை பெருந்தோட்டக் கைத்தொழில்கள் | – | 174 | – | 100 | 105 |
| சிலோன் அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் | 24 | 167 | 202 | - | - |
| பெருந்தோட்டக் கம்பனிகள் | 95 | 554 | 540 | 295 | 309 |
| லங்கா சீனி கம்பெனி லிமிடட் | – | 1,597 | – | - | - |
| லங்கா திரிபோஷ லிமிடட் | 10 | 75 | 100 | 10 | 10 |
| ஏனையவை | 10 | 75 | – | 145 | 152 |
| **மொத்தம்** | **28,091** | **75,701** | **30,498** | **55,828** | **58,619** |

*மூலம் : அரசுடமைத் தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்*

# 05

# 2025 வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்க பயன்படுத்தப்பட்ட அடிப்படை

### 5.1 மேன்நோக்கு

2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் பேரண்டப் பொருளாதார மற்றும் அரசிறை மதிப்பீடுகள் அதன் தயாரிப்பின் போது நிதி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வுகள் மற்றும் மதிப்பீடுகளிலிருந்து பெறப்பட்டவை என்பதுடன், அவை தொடர்ச்சியான அனுமானங்களின் அடிப்படையில் அமைந்தவையாகும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தி, பணவீக்கம், வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள் மற்றும் வேலையின்மை உள்ளிட்ட வருமானம் மற்றும் செலவின மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்காக கருத்தில் கொள்ளப்படும் முக்கிய பேரண்டப் பொருளாதார குறிகாட்டிகளை இந்தப் பிரிவு கோடிட்டுக் காட்டுவதுடன், மதிப்பீடுகளின் உணர்திறனையும் எடுத்துக்காட்டுகிறது.

### 5.2 மொத்த உள்நாட்டு உற்பத்தி

சர்தேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதிய வசதித்திட்டம் மற்றும் ஏனைய பங்காளர்களின் ஆதரவுடன் அரசாங்கத்தின் விரிவான பேரண்டப் பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சிநிரலின் அமுலாக்கத்துடன், இலங்கையின் பொருளாதாரம் இரண்டு வருட பொருளாதார நெருக்கடியின் பின்னர் ஸ்திரமடைந்ததுடன் விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் போன்ற துறைகளின் பரந்த அடிப்படையிலான விரிவாக்கத்தை வெளிப்படுத்தியது. 2024 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் 5.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. 2025 ஆம் ஆண்டில், பொருளாதாரம் 3 - 5 சதவீத மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதத்துடன் பொருளாதார மீட்சியை நோக்கி கணிசமான முன்னேற்றத்தை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிகரித்த வெளிப்புற கேள்வி, மேம்பட்ட விநியோக சங்கிலி நிலைமைகள் மற்றும் சுற்றுலாத் துறையின் புத்துயிர் ஆகியவற்றால் தூண்டப்பட்ட உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளின் மீளெழுச்சியால் உந்தப்பட்ட பொருளாதாரத்தின் அனைத்து துறைகளிலும் பரவலான நேர்மறையான வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது.

பொருளாதாரத்தில் விவசாயத்தின் முக்கிய பங்கை அரசு விளங்கிக் கொண்டுள்ளதுடன், இத்துறையின் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் ஆராய்ச்சி ஆய்வகங்கள் மற்றும் புதிய விதை வகைகளின் முக்கியத்துவத்தை அங்கீகரித்துள்ளது. இந்த நடவடிக்கைகள் விவசாய உற்பத்தித் திறனை அதிகரிப்பதோடு அதன் மூலம் உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்யும் உற்பத்தியை அதிகரிப்பது மட்டுமில்லாமல் புதிய கண்டுபிடிப்புகளின் மூலம் ஏற்றுமதி சந்தையை பூர்த்தி செய்யவும் எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய முயற்சிகள் விவசாய துறைக்கு ஒரு புதிய உத்வேகத்தை அளித்து, ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2022 ஆம் ஆண்டின் பொருளாதார மற்றும் நிதி நெருக்கடியிலிருந்து உள்நாட்டு நடவடிக்கைகள் மீண்டு வருவதால், தொழில்துறை துறை கணிசமாக குறிப்பாக கட்டுமானம் மற்றும் உற்பத்தியில் விரிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மிகப்பெரிய பங்களிப்பாளரான சேவைத் துறை, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வர்த்தகம், தொலைத்தொடர்பு, சுற்றுலா, போக்குவரத்து, நிதி சேவைகள் மற்றும் ரியல் எஸ்டேட் ஆகியவற்றின் வளர்ச்சியால் உந்தப்பட்டு அதன் நிலையான வளர்ச்சியைத் தக்கவைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. போக்குவரத்து, தானியங்கி மற்றும் சேவைகளின் எண்ணிமமயமாக்கல் போன்ற பகுதிகளில் அதிகரித்த பொது முதலீடுகளால் இது ஆதரிக்கப்படும். மேலும், சேவை வழங்கலின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் பொதுமக்களின் நம்பிக்கையை அதிகரித்து, சேவைத் துறையின் வளர்ச்சியை மேலும் வலுப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.3 நுகர்வோர் விலைகள்

இலங்கை 2024 செப்டெம்பர் முதல் தொடர்ச்சியாக ஐந்து மாதங்களுக்கு ஒரு பணச்சுருக்கத்தைப் பதிவுசெய்து, 2025 ஜனவரியில் - 4.0 சதவீதத்தை எட்டியது. வலுசக்தி விலைகளின் குறைப்பு, வலுவான உண்மையான பரிமாற்ற வீதம் மற்றும் மேம்பட்ட விநியோக நிலைமைகள் ஆகியவற்றால் பணச்சுருக்கம் உந்தப்படுகிறது. 2025 ஜனவரி அளவில், உணவல்லாத பணச்சுருக்கம் 4.7 சதவீதமாகவும், உணவு பணச்சுருக்கம் 2.6 சதவீதமாகவும் இருந்தது.

தகுந்த நாணயக் கொள்கை வழிமுறைகளின் ஆதரவுடன் 2025 நடுப்பகுதியில் 5 சதவீத பணவீக்க இலக்கில் ஸ்திரமடைவதற்கு முன்னதாக, 2025இல் பல மாதங்களுக்கு பணச்சுருக்கப் போக்கு தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது. உலகளாவிய உணவு விலைகளில் சாத்தியமான அதிகரிப்பு, ஊதிய உயர்வுகள், விவசாய உற்பத்தியை பாதிக்கும் மோசமான வானிலை நிலைமைகள் மற்றும் புவிசார் அரசியல் பதட்டங்கள் மற்றும் உலகளாவிய கொள்கை மாற்றங்களுக்கு மத்தியில் உயர் உலகளாவிய பணவீக்கம் ஆகியவற்றால் பணவீக்கம் அதிகரிக்கக்கூடும்.

### 5.4 வேலைவாய்ப்பு மற்றும் வேலையின்மை

2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் 4.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் வேலையின்மை விகிதம் 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 4.1 சதவீதமாகக் குறைந்துள்ளது. எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 48.9 சதவீதமாக இருந்த தொழிலாளர் பங்கேற்பு வீதமும் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 46.6 சதவீதமாகக் குறைந்துள்ளது.

பொருளாதாரத்தின் படிப்படியான மீட்சி மற்றும் பொருளாதாரத்தின் மூன்று துறைகளின் எதிர்பார்க்கப்பட்ட விரிவாக்கங்களுடன், வேலையின்மை விகிதம் 2025 இல் மேலும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 5.5 வெளிநாட்டுத் துறை

இலங்கையின் வெளிநாட்டுத் துறை 2024இல் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை வெளிப்படுத்தியமை, தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டுக்கான வலுவான நடைமுறைக் கணக்கு உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிநாட்டு ஒதுக்குகளைப் பலப்படுத்துதல் என்பனவற்றால் உந்தப்பட்டது. 2024 ஆம் ஆண்டில், இறக்குமதி செலவினத்தின் பாரிய விரிவாக்கம் ஏற்றுமதி வருமானங்களின் வளர்ச்சியை விஞ்சியதுடன் வணிக வர்த்தக பற்றாக்குறை 2023 இல் 4,900 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரிலிருந்து 2024 இல் 6,069 மில்லியன் ஐ.அ.டொலராக விரிவடைந்தது. 2023 ஆம் ஆண்டில் 2,068 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறையிலிருந்து கிடைத்த வருமானம் 53.2 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து 3,169 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய சேவைத் துறை முதலீடுகள் 2023 ஆம் ஆண்டில் 3,348 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில் 3,714 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது. கடல் போக்குவரத்து சேவைகள் மற்றும் கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/வணிக செயல்முறை வெளிக்கொள்முதல் தொடர்பான சேவைகள் 2024 ஆம் ஆண்டில் உட்பாய்ச்சல்களுக்கு முக்கிய பங்களிப்பாளர்களாக இருந்தன. 2023 ஆம் ஆண்டில் 5,970 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 10.1 சதவீதத்தால் அதிகரித்து 6,575 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 4.4 பில்லியன் ஐ.அ.டொலரிலிருந்து 2024 ஆம் ஆண்டின் இறுதியில் 6.1 பில்லியன் ஐ.அ.டொலரினை எட்டியது. இது உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து மத்திய வங்கியினால் சாதனையளவிலான உயர்ந்த தேறிய கொள்வனவுகள் மற்றும் பல்தரப்பு நிறுவனங்களிலிருந்து உட்பாய்ச்சல்கள் என்பவற்றால் உந்தப்பட்டது.

வாகன இறக்குமதி மீதான தற்காலிக இடைநிறுத்தம் நீக்கப்பட்டதன் மூலம் 2025 ஆம் ஆண்டில் வணிக வர்த்தக பற்றாக்குறை மேலும் விரிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும், ஏற்றுமதி வருமானங்கள், சுற்றுலாத் துறையின் வருமானம் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் என்பவற்றில் தொடர்ந்தும் அதிகரிப்பதன் மூலம் நேர்மறையான வெளிநாட்டுத் துறையின் செயலாற்றம் நிலைபேறடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், கட்டமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் சாதகமான பொருளாதார சூழல் காரணமாக அந்நிய நேரடி முதலீடு போன்ற பிற கடன் அல்லாத வரவுகளும் மீளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு மேலதிகமாக, 2025 ஆம் ஆண்டில் பல்தரப்பு முகவர் நிறுவனங்களிடமிருந்து இலங்கை தொடர்ந்தும் உட்பாய்ச்சலைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் செலாவணி விகிதம் 2025 இல் நிலையானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 5.6 பண மொத்தங்கள்

பண நிரம்பல் பொருத்தமான மட்டத்தில் பேணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 2025 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.0 சதவீதம் வரை வருமானம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாலும், வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.7 சதவீதம் வரை குறையும் என்று எதிர்பார்க்கப்படுவதாலும், இது அரசாங்கத்தின் மொத்த நிதியிடல் தேவைகளைக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இது தனியார் துறை முதலீட்டுக்கு மிகவும் சாதகமான சூழலை உருவாக்கும்.

### 5.7 வருமானம்

வருமான மதிப்பீடுகளின் அடிப்படையிலான அனுமானங்கள் இணைப்பு III இல் விவரிக்கப்பட்டுள்ளன.

### 5.8 செலவினம்

செலவின மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான அடிப்படை பின்வருமாறு:

- **சம்பளம் மற்றும் ஊதியங்கள்:** மதிப்பீடுகள் சுமார் 1.3 மில்லியன் அரசதுறை ஊழியர்களை அடிப்படையாகக் கொண்டவை. 2025 ஆம் ஆண்டில் புதிய ஆட்சேர்ப்புகள் மூலம் அரச ஊழியர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரிக்கப்படாது என்று கருதப்படுகிறது. மேலும், அரச ஊழியர்களின் சாத்தியமான சம்பள அதிகரிப்புடன் வருடாந்த சம்பள அதிகரிப்பும் மதிப்பீட்டில் காரணியாக வைக்கப்பட்டுள்ளது.

- **ஓய்வூதியக் கொடுப்பனவுகள்:** ஓய்வூதியங்களுக்கான செலவின மதிப்பீடுகள் 723,000 ஓய்வூதியதாரர் களின் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை மற்றும் 2025 இல் ஓய்வூதியங்களின் சாத்தியமான அதிகரிப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை.

- **வட்டி கொடுப்பனவு**: திறைசேரி முறிகளின் மறுசீரமைப்பின் தாக்கத்தின் காரணமாக 2025 இல் வட்டிக் கொடுப்பனவிற்கான செலவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- **பொருட்கள் மற்றும் சேவைகள்:** பொருட்கள் மற்றும் சேவைகளுக் கான செலவினமாக 416 பில்லியன் ரூபாவை அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

- **குடும்பங்களுக்கான மானியங்கள்:** முதியவர்கள், ஊனமுற்றோர் மற்றும் நாள்பட்ட சிறுநீரக நோயாளிகளுக்கான வகைப்படுத்தப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அஸ்வெசுமா

திட்டங்ளை உள்ளடக்கிய சமூக பாதுகாப்பு வலையமைப்பு திட்டங்களுக்கான ஒதுக்கீட்டை அதிகரிப்பதன் மூலம் சமூக பாதுகாப்பு வலைகளுக்கான செலவு அதிகரிக்கும். மேலும், பாடசாலை மாணவர்களுக்கான ஆதரவு (சீருடைகள் மற்றும் பாடப்புத்தகங்கள்), மாற்றுத்திறனாளி வீரர்கள், கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ஊட்டச்சத்து திட்டங்கள், இலவச மருந்து மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான உர மானியங்கள் போன்ற பிற முக்கிய நலத்திட்டங்களுக்கான ஒதுக்கீடுகள் அதிகரித்த நிதியுடன் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- **அரச நிறுவனங்கள் மற்றும் கூட்டுத் தாபனங்களுக்கான இடமாற்றல்கள்:** அரசுக்கு சொந்தமான பிரதான வர்த்தக நிறுவனங்களின் மறுசீரமைப்பு மற்றும் அவற்றின் நிதி நிலைமைகளில் முன்னேற்றம் காரணமாக இவை சிறிதளவு அதிகரிப்பை மட்டுமே காணும்.

- **பொது முதலீடு:** 2025 ஆம் ஆண்டில், பொது முதலீடு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 4.0 சதவீதமாக இருக்கும் என்பதுடன் முன்னுரிமை துறைகளுக்கு முதலீடுகளை முடுக்கிவிடும், அதே நேரத்தில் முன்னுரிமை அல்லாத மற்றும் அத்தியாவசியமற்ற செலவினங்களைக் குறைக்கும்.

- **அரச முதலீட்டின் வினைத்திறன்:** 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதி முகாமைத்துவச் சட்டமானது, பொது முதலீட்டுக் குழுவை நிறுவுதல் மற்றும் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏனைய ஆளும் வழிமுறைகளினூடாக அரச முதலீட்டின் வினைத்திறனை மேம்படுத்தும்.

- **2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டம்:** இச்சட்டம் 2024 ஆகஸ்ட் 8 ஆம் திகதி நடைமுறைக்கு வந்ததுடன் 2025 டிசம்பர் இறுதிக்குள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும். இச்சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட கட்டமைப்பு, நடைமுறை மற்றும் நிறுவன ரீதியான திருத்தங்கள், மற்றும் அவற்றுக்கிடையில், செலவின முகாமைத்துவம் உட்பட பொது நிதிகளின் முகாமைத்துவத்தில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக் கூறல், ஒழுக்கம், செயல்திறன், செயல்திறன் மற்றும் சிக்கனம் ஆகியவற்றை மேம்படுத்தும்.

- **தகவல் தொழில்நுட்பம் மற்றும் எண்ணிம தீர்வுகள்:** அனைத்து அரசாங்க கொடுப்பனவுகளையும் எண்ணிம மயமாக்குவதற்கான 'GovPay' தளத்தை அறிமுகப்படுத்து வதன் மூலம் நாட்டை எண்ணிம சமூகமாக மாற்றுவதற்கான முயற்சிகள் பொது சேவை வழங்கல் மற்றும் செயல்பாட்டு செயல்திறனை மேம்படுத்தும்.

- **முகவர் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு:** பொது நிறுவனங்களிடையே மேம்பட்ட ஒத்துழைப்பு மற்றும் முறையான மேற்பார்வை ஆகியவை வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளின் செயல்திறனை உறுதி செய்யும், அதே நேரத்தில் இரட்டிப்பாவதைத் தவிர்க்கும்

- **அர்ப்பணிப்பு கட்டுப்பாட்டு வழி முறைகள்:** 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டம், நிதி மற்றும் பணப்புழக்க முகாமைத்துவத்தை வலுப்படுத்தும் ஒரு பயனுள்ள அர்ப்பணிப்பு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவுவதற்கு வழங்குகிறது.

### 5.9 கடன்கள்

2025 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் மொத்த கடன் தேவைகள் பற்றிய மதிப்பீடுகள் ரூபா 4,000 பில்லியனாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2024 இல் பதிவுசெய்யப்பட்ட 6.8 சதவீத தற்காலிக வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில், அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை 2025 இல் 0.1 சதவீத புள்ளிகளால் 6.7 சதவீதமாக மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், பொது தனிசு (கடன்) முகாமைத்துவ அலுவலகமானது அரசாங்கப் படுகடன் முகாமைத்துவம், கடன் உத்தரவாதங்களை வழங்குதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல், கடன்வழங்கல் தொழிற்பாடுகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் பொதுப்படுகடன் பதிவுசெய்தல் மற்றும் அறிக்கையிடல் போன்ற முக்கிய பொறுப்புகளுடன் தாபிக்கப்பட்டுள்ளது. திறமையான மற்றும் வெளிப்படையான கடன் நடைமுறைகளை அமல்படுத்துவதை பொதுத் தனிசு (கடன்) முகாமைத்துவ அலுவலகம் உறுதி செய்யும்.

### 5.10 மதிப்பீடுகளுக்கு உணர்திறன்

பொருளாதார கணிப்புகள் பல அபாயங்கள் மற்றும் சவால்களால் பாதிக்கப்படலாம், அவற்றுள்:

- **வெளிப்புற அதிர்ச்சிகள்:** புவிசார் அரசியல் பதட்டங்களிலிருந்து எழக்கூடிய உலகளாவிய பொருளாதார அதிர்ச்சிகளை சரிசெய்வது சவாலானதாக இருக்கும். இந்த வெளிப்புற அதிர்ச்சிகள் உள்நாட்டு சர்வதேச வர்த்தகம், பணவீக்கம் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியை பாதிக்கலாம்.

- **இயற்கை பேரழிவுகள் மற்றும் சாதகமற்ற வானிலை நிலைமைகள்:** பாதகமான வானிலை விவசாயம், நீர்மின் உற்பத்தி மற்றும் அரசாங்க நிதிகளை எதிர்மறையாக பாதிக்கும்.

- **நிர்வாக மற்றும் கொள்முதல் தாமதங்கள்:** அதிகாரத்துவ திறமை யின்மை மற்றும் தாமதங்கள் பொருளாதார முன்னேற்றம் மற்றும் நிதி நடவடிக்கைகளை மெதுவாக்கும்.

- **சட்டமன்ற தாமதங்கள்:** பாராளுமன்றத்தில் முக்கிய நிதி தொடர்பான சட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பதில் தாமதம் ஏற்படுவது அரசாங்கத்தின் நிதி நிலையை பொருளியல் ரீதியாக பாதிக்கும்.

- **அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சி நிறுவனங்களின் (SOEs) செயல்திறன்:** அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சி நிறுவனங்களின் குறைவான செயல்திறன் மற்றும் மறுசீரமைப்பு முயற்சிகளில் தாமதம் ஆகியவை பொருளாதார செயல்திறன் மற்றும் நிதி ஒருங்கிணைப்புக்கு தடையாக இருக்கலாம்.

# பகுதி III

## வரிச் செலவினங்கள் பற்றிய கூற்று 2023/24

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சரினால் வெளியிடப்பட்டது.

தற்போதுள்ள வரி செலவினங்களின் மொத்த ஆகுசெலவு மற்றும் புதிய வரி செலவினங்களின் வெளிப்படுத்துகை உள்ளடங்கலாக வரிச் செலவினங்கள் பற்றிய கூற்று வருடாந்த வரவு செலவுத் திட்டத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

# வரிச் செலவினங்கள் பற்றிய கூற்று 2023/2024

# 06

## 6.1 அறிமுகம்

இந்த வரிச் செலவினங்கள் (வரி வருமான இழப்பு) பற்றிய அறிக்கை வரி செலவினங்களிலிருந்து இழந்த வருமான மதிப்பீடுகளை அறிக்கையிடுகின்றதுடன் வெளிப்படைத்தன்மையினையும் மற்றும் தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் வணிகம் உள்ளிட்ட சமூகத்தின் மீதான அரசாங்கக் கொள்கைகளின் தாக்கத்தைப் புரிந்துகொள்வதற்கான ஒரு தளத்தையும் வழங்குகின்றது. இந்த அறிக்கை, வரி செலவினங்களின் அரசிறைச் செலவு மற்றும் அனுமானங்கள் மற்றும் இந்த மதிப்பீடுகளைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் முறைமை ஆகியவற்றில் அரசாங்கத்தின் சமீபத்திய மதிப்பீடுகளை முன்வைக்கிறது. 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட முதலாவது அறிக்கையாகும். மேலும் ஒரு விரிவான வரிச் செலவினங்கள் பற்றிய அறிக்கை 2026 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்துடன் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த அறிக்கையைத் தயாரிக்கும் போது கருத்திற்கொள்ளப்பட்ட வரி செலவின உருப்படிகள் மற்றும் வரி வகைகள் பின்வருமாறு;

வரி முறைமை, முதன்மையாக அரசாங்க வரவு செலவுத் திட்டத்திற்கு நிதியளிப்பதற்காக போதுமான வருவாயைத் திரட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், இலக்கு நிர்ணயிக்கப்பட்ட வரி விலக்குகள், குறைப்புக்கள், ஒத்திவைப்புகள், சலுகைக் கொடுப்பனவுகள் மற்றும் வரி பொறுப்புக்கள் மற்றும் சலுகை வரி வீதங்கள் ஆகியவற்றின் மூலம், சமூக மற்றும் பொருளாதார நோக்கங்களை அடைய அரசாங்கம் எதிர்பார்க்கிறது. வரி செலவினங்கள் என்பது விலக்குகள், சலுகைக் கொடுப்பனவுகள், வரவுகள், விகித நிவாரணங்கள் மற்றும் வரி தொடர்பான வரி ஒத்திவைப்புகளின் விளைவாக இழக்கப்பட்ட மொத்த வருமானத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதியாகும்.

**அட்டவணை 6.1: வரிச் செலவின வகைப்பாடு**

| வரிச் செலவின விடயம் | வரி வகை வாரியாக வரிச் செலவினம் | | | |
|---|---|---|---|---|
| | தனிநபர் வருமான வரி | நிறுவன வருமான வரி | நுகர்வு வரிகள் (பெறுமதிசேர் வரி) | சுங்கம் |
| முன்னுரிமை வரி விகிதங்கள் | √ | √ | √ | |
| வரி விடுமுறைகள் | | √ | | |
| சிறப்பு வலயங்கள் | | √ | √ | √ |
| மூலதன மீட்பு ஊக்கத்தொகைகள் | | √ | | |
| விலக்குகள் | √ | √ | | √ |
| முதலீட்டு மானியங்கள் | | √ | | |
| வரி ஒத்திவைப்புக்கள் | | √ | √ | √ |
| பிரித்தெடுக்கப்பட்ட தொழிற்துறைகளுக்கான அரசிறை நன்மை | | √ | √ | √ |

**அட்டணை 6.2 : வரி வகை ரீதியாக வரிச் செலவினம்**

| வரிச் செலவின விடயம் | அறிக்கையிடும் காலம் | வரிச் செலவினம் (ரூபா மில்) |
|---|---|---|
| தனிநபர் வருமான வரி | 2023/24 | 12,248 |
| நிறுவன வருமான வரி | 2023/24 | 243,224 |
| நுகர்வு வரிகள் (பெறுமதிசேர் வரி) | 2024 | 333,104 |
| சுங்க இறக்குமதித் தீர்வை | 2024 | 375,116 |
| மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி | 2024 | 1,928 |

## 6.2 வரி செலவினமாக கருதப்பட வேண்டியவைகளுக்கான அளவுகோலை நிர்ணயித்தல்

வரி செலவின அறிக்கைகளில் அளவுகோலை நிர்ணயித்தல் என்பது ஒரு நெறிமுறை வரி முறையை வரையறுப்பதை உள்ளடக்கியதுடன் அதற்கு எதிராக விலக்குகள், குறைப்புக்கள், வரவுகள், ஒத்திவைப்புகள் மற்றும் முன்னுரிமை விகிதங்கள் போன்ற விலகல்கள் வரி செலவுகளாக அடையாளம் காணப்படுகின்றன. கட்டமைப்பு வரி விதிப்புகள் மற்றும் கொள்கை தூண்டப்பட்ட சலுகைகளுக்கு இடையில் வேறுபடுத்துவதற்கான ஒரு குறிப்பாக இந்த அளவுகோல் செயல்படுகிறது.

நன்கு வரையறுக்கப்பட்ட அளவுகோலில் பொதுவாக அடங்குபவை

1. **வரி அடிப்படை** - நிலையான வரிக் கொள்கைகளின்படி விரிவான வருமானம், நுகர்வு அல்லது பிற வரி அடிப்படைகள்.

2. **வரி விகிதங்கள்** - நிலையான நியதி விகிதங்கள் முன்னுரிமை பரிசீலனைகள் இல்லாமல் ஒரே மாதிரியாக பயன்படுத்தப்படுகின்றன.

3. **கட்டமைப்பு கூறுகள்** - வரி நிர்வாகத்திற்கு தேவையான முக்கிய அம்சங்கள், அதாவது இழப்புக்களை முன்கொண்டு செல்லும் ஏற்பாடுகள் அல்லது பணவீக்க சரிசெய்தல்.

எனவே, வரி செலவினங்கள் இந்த அளவுகோலில் இருந்து விலகிச் செல்லும் விதிகளை உள்ளடக்குகின்றன, அவை:

- விலக்குகளிப்புக்கள் (உ+ம்: வரி இல்லாத வரம்புகள் அல்லது துறை சார்ந்த விலக்குகள்)
- முன்னுரிமை வரி விகிதங்கள் (உ+ம்: குறிப்பிட்ட தொழில்துறைகள் அல்லது வருமான ஆதாரங்களுக்கான குறைந்த விகிதங்கள்)
- கழிவுகள் மற்றும் சலுகைக் கொடுப்பனவுகள் (உ+ம்: முதலீட்டு சலுகைக் கொடுப்பனவுகள், துரிதப்படுத்தப்பட்ட தேய்மானம்)
- வரிச் சலுகைகள் (உ+ம்: ஆராய்ச்சி & மேம்பாட்டுவரிசலுகைகள்,வேலைவாய்ப்பு தொடர்பான ஊக்கத்தொகைகள்)
- ஒத்திவைப்புகள் (உ+ம்: மூலதன ஆதாயங்கள் மீதான வரி ஒத்திவைப்புகள்)

வர்த்தக ஒப்பந்தங்களின் கீழ் வரிச் சலுகைகள் (உ+ம்: சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் அல்லது இரட்டை வரிவிதிப்பு ஒப்பந்தங்கள் கீழ் செயல்படும் வணிகங்களுக்கான முன்னுரிமை வரிப் பரிசீலனை வரி செலவினங்களாக கருதப்படாது, ஏனெனில் இந்த விதிகள் கொள்கை உந்துதல் கொண்டவை, எனவே, நிலையான அமைப்பின் ஒரு பகுதியாக கருதப்படலாம்.

அதேபோன்று, இலங்கை முன்னேற்றகரமான வருமான வரி முறைமையினைக் கொண்டிருப்பதனால், உரிமையை உறுதிப்படுத்துவதற்காக வரி விதிக்கப்படாத வருமானத்தின் ஒரு பகுதியான வரியற்ற வரம்பானது, அளவுகோலின் ஒரு பகுதியாக கருதப்படுவதுடன் வரிச் செலவாகக் கருதப்படமாட்டாது. மேலும், வரி இல்லாத வரம்பு விருப்புரிமை சலுகையாக இல்லாமல் குறைந்த வருமானம் ஈட்டுபவர்கள் மீதான வரிச்சுமையை குறைக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, வரி இல்லாத வரம்பு நிலையான அமைப்பின் ஒரு பகுதியாக கருதப்படலாம்.

### 6.3 வரிச் செலவு கணிப்பீட்டிற்கான அடிப்படை

இந்த வரி செலவின அறிக்கை பின்வரும் அடிப்படையில் தயாரிக்கப்படுகிறது;

a) இழக்கப்பட்ட வருமானத்தை மதிப்பிடுவதற்கு மூன்று முக்கிய அணுகுமுறைகள் உள்ளன

(i) வரி நன்மைகள் வழங்கப்பட்டதன் காரணமான வரி வருமான இழப்பு

(ii) வரி நன்மைகள் வழங்கப்பட்டதன் காரணமான கிடைக்கப்பெற்ற வருமானம்

(iii) செலவு சமம் - செலுத்துவோருக்கும் அதேயளவு நிதி நன்மைகளை செலவினங்கள் இல்லாமல் வழங்க தேவைப்படும் நேரடி அரசாங்க நிதியிடல் .

இந்த மதிப்பீடு “வருமான இழப்பு” முறையைப் பயன்படுத்துகிறது, இது அரசாங்கத்தால் ஏற்படும் வருமான இழப்பின் முன்னைய கணக்கீடு ஆகும். வரி செலவினங்களை திரும்பப் பெறுவதற்கு பதிலளிக்கும் விதமாக வரி செலுத்துவோரின் நடத்தை மாறாமல் இருக்கும் என்று அது கருதுகிறது.

b) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் (IRD) கணிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்ட வரி விபரத்திரட்டுக்களை அடிப்படையாகக் கொண்டவை.

c) மதிப்பீட்டு சிக்கல்கள், நடைமுறை பிழைகள், பரிமாற்ற விலை மற்றும் இணக்கமின்மை காரணமாக வருமானத்தின் அடிப்படைத் தேய்வு கருதப்படவில்லை.

d) அரசு வழங்கும் இலவச சேவைகளுக்கான வரிச் செலவு கருத்தில் கொள்ளப்படவில்லை.

e) தனிநபர் வருமான வரி, நிறுவன வருமான வரி மீதான வரிகளின் வரிச்செலவுக் கணிப்பீடுகள் 2023/24 உண்மையான தரவு மற்றும் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டவை.

f) பெறுமதி சேர் வரி மற்றும் இறக்குமதி வரிச் செலவு கணிப்பீடுகள் 2024 உண்மையான தரவை அடிப்படையாகக் கொண்டவை.

g) மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி 2024 டிசம்பர் இறுதி நிலவரப்படி உண்மையான தரவுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது

h) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் அட்டவணைகளிலிருந்து ஏதேனும் விலகல்கள் வரிக் செலவினமாகக் கருதப்படும்;

1வது அட்டவணை = வரி விகிதங்கள்
2வது அட்டவணை = முதலீட்டு ஊக்கத்தொகை
3வது அட்டவணை = விலக்களிக்கப்பட்ட தொகைகள்
4வது அட்டவணை = மூலதன கொடுப்பனவுகள், சமநிலை கொடுப்பனவுகள் மற்றும் மதிப்பிடக்கூடிய கட்டணங்கள்
5வது அட்டவணை = தகுதிவாய்ந்த கொடுப்பனவுகள் மற்றும் நிவாரணங்கள்
6வது அட்டவணை = தற்காலிக சலுகைகள்

i) இறக்குமதியின் போது வரி செலவினங்களைக் கணக்கிடும் போது முதலீட்டு சபையின் பொறுப்பேற்புகளுக்கு

வழங்கப்படும் வரிச் சலுகைகள் கவனத்திற் கொள்ளப்பட்டன.

j) வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கு முழுமையான மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டசொகுசு வரிச் சலுகை (புலம்பெயர் தொழிலாளர்கள் பணம் அனுப்பும் திட்டம்) வரிச்செலவினங்களை கணக்கிடும் போது கவனத்தில் கொள்ளப்பட்டன

## 6.4 வரி செலவின மதிப்பீடுகள்

### தனிநபர் வருமான வரி (PIT)

